REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஜனவரி 19 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
1932 - 2022
வரு. 91 இல. 16
Thursday 19, January, 2023
16பக்கங்கள்
50/-




## உலமா சபையின் நூற்றாண்டு விழா இன்று கொழும்பில்

**ஜனாதிபதி தலைமை; விசேட முத்திரையும் வெளியீடு**

**எம்.எஸ்.பாஹிம்**






சன்மார்க்க அறிஞர்களின் அமைப்பான அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் நூற்றாண்டு விழா இன்று (19) காலை உலமா சபைத் தலைவர் எம்.ஐ. றிஸ்வி முப்தியின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொள்வதோடு கௌரவ அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தன பங்கேற்கிறார். காலியில் அமைந்துள்ள பஹ்ஜத்துல் இப்றாஹிமிய்யா அரபுக் கல்லூரியில் 1924 ஆம் ஆண்டு மார்க்க

06

## புனர்வாழ்வு பணியக சட்ட மூலத்தில் அரசியல் நோக்கம் எதுவுமில்லை

**போதைக்கு அடிமையாவோரை நல்வழிப்படுத்துவது ஒன்றே நோக்கம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை நல்வழிப்படுத்தும் வகையிலேயே புனர்வாழ்வு பணியக சட்ட மூலம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் இதில் எந்த அரசியல் நோக்கமும் கிடையாதென்றும் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எதிர்க்கட்சியினர் இதனை வர்ணக் கண்ணாடியில் பார்க்க வேண்டிய அவசியம் கிடையாதென்றும் தெரிவித்தார்.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் வழக்கு, நீதிமன்றம் என வருடக்

06

**ரயில்வே காணிகளில் சட்டவிரோத குடியேற்றம்:**

## 394 ரயில்வே ஊழியர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை

**மீளவும் சுவீகரிக்கப்படும் என அமைச்சர் பந்துல தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளை சட்ட விரோதமாக கைப்பற்றி உபயோகித்து வரும் நபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த காணிகளை மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

## பாராளுமன்ற உறுப்பினர்களது கல்வித் தகைமைகள் அறிவிப்பு

**www.parliament.lk இல் பொதுமக்கள் பார்வையிடலாம்**



இலங்கையில் முதன் முறையாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது கல்வி மற்றும் தொழில் தகைமைகளை பொது மக்களின் பார்வைக்காக வெளிப்படுத்தியுள்ளனர். 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 208 பேர் தங்களின்

06

**75ஆவது சுதந்திர தினத்திற்கு மறுநாள் முதல்**

# கிராமங்களை இணைக்க 1000 இ.போ.ச பஸ்கள்

**ஒரு வருட ஒப்பந்தத்தில் சாரதிகள், நடத்துனர்களும் இணைப்பு**

**பாராளுமன்றில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு இணையாக மறுதினம் மேலும் 1,000 பஸ் வண்டிகள் கிராமிய பொதுப் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படுமென போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று (18) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கிடைக்கவுள்ள 225 பஸ் வண்டிகளுடன் பொது போக்குவரத்து

06

**புனர்வாழ்வு பணியக சட்டமூலம்:**

## இரண்டாம் மதிப்பீடு 17 வாக்குகளால் நிறைவேறியது

**ஆதரவாக 23; எதிராக 06 வாக்குகளே!**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புனர்வாழ்வு பணியக சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு பாராளுமன்றத்தில் நேற்று 17 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

சட்ட மூலம் நேற்று சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது சட்டமூலத்துக்கு

06

## குறைந்த செலவுடனேயே இவ்வருட சுதந்திர தின விழா

**சபையில் பிரதமர் தினேஷ் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுதந்திர தின விழா கொண்டாட்டங்கள் இம்முறை முடிந்தளவு செலவுகள் குறைக்கப்பட்டே முன்னெடுக்கப்படுவதாகவும் நாட்டின் சுதந்திரத்திற்காக போராடியவர்களை கௌரவிக்க வேண்டியது தேசிய

06

## கொட்டாஞ்சேனையில் துப்பாக்கிச் சூடு

**ஒருவர் படுகாயம்**



கொழும்பு, கொட்டாஞ்சேனை 06 ஆவது ஒழுங்கை பகுதியில் நேற்று (18) பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

06

**மின்சாரம், எரிபொருள். வைத்தியசாலை;**

## மூன்று விடயங்கள் தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகளாகின

**ஜனாதிபதியினால் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு**



நாட்டின் மின்சாரம், எரிபொருள் மற்றும் வைத்தியசாலை சேவைகள் என்பன தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டு நேற்று

06

## உள்ளூராட்சி தேர்தல்கள் உரிய திகதியில் நடத்தப்படும்

**உயர் நீதிமன்றுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் உறுதி**




உள்ளூராட்சி மன்ற சட்ட திட்டங்களுக்கு அமைய, உரிய திகதியில் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றத்திற்கு நேற்று(18) மீண்டும் உறுதியளித்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட

06

## A/L பரீட்சை நடைபெறும் காலத்தில் மின்தடை இல்லை

**14 நாட்களுக்கு 05 பில். ரூபா செலவாகும்**



க.பொ.த உயர்தரப் பரீட்சை இடம்பெறும் 14 நாட்களுக்கு மின்தடை இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன

06

**2005க்கு பின் பிறந்தோருக்கு இடைநிறுத்தம்**

## NIC அச்சிடும் அட்டைகளுக்கு பெருமளவில் தட்டுப்பாடு

**O/L எழுதும் மாணவர்களுக்கு ஆவணப்பத்திரம்**



தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் 2005ஆம் ஆண்டுக்கு பின்னர்

06

**இராணுவ தலைமையகத்தை பாதுகாக்காதவருக்கு**

## என்னை விமர்சிக்க எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது

**சரத் பொன்சேக்காவுக்கு மைத்திரிபால பதில்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**




இராணுவ தலைமையகத்தை பாதுகாத்துக்கொள்ள முடியாத சரத் பொன்சேகாவுக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பில் என்னை விமர்சிக்க எந்தவித தார்மீக உரிமையும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06



**புனர்வாழ்வு பணியக சட்டமூலம்**

## சர்வதேச அனுமதி அடிப்படையில் கொண்டுவரப்படுவது அவசியம்

06

**'ஜனாதிபதியின் உணவு பாதுகாப்பு, போஷாக்கு பொறிமுறை'**

## பொன்டெரா நிறுவனம் ரூ.174 மில். பெறுமதியான பால் மா கையளிப்பு

03

## சுற்றுலாப்பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

**சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தகவல்**



இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 1ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 47 ஆயிரத்து 353 சுற்றுலாப் பயணிகள்

06

## கொழும்பில் டெங்கு அபாயம்

**ஒரு வாரத்தில் 2,030 பேர் பாதிப்பு**




கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. அதன்படி கொழும்பு மாவட்டத்தில் 452 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக

06

**எதிர்க்கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டாலும்**

## தேர்தல் செலவு சட்டத்தை கொண்டுவருவதில் அரசு உறுதி

**ஜனாதிபதி தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு**



எதிர்க்கட்சிகள் எதிர்ப்பை தெரிவித்தாலும் தேர்தல் பிரசாரங்களுக்கு பணம் வழங்கும் தரப்பினரை வெளிப்படுத்தும் தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டவரைவை முன்வைக்க

06



# இ.தொ.கா தலைவரின் காளைக்கு தங்க மோதிரம்



உலக புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானின் இரு காளைகள் சீறிப்பாய்ந்து வெற்றிபெற்றன. செந்தில் தொண்டமானின் சோழன் 2 என்ற காளை சீறிப்பாய்ந்து அடக்க வந்த வீரர்களை, தலைகீழாக பறக்கவிட்டு வெற்றிபெற்றது. இதையடுத்து, தமிழ் நாடுவிளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,இ,தொ,கா,தலைவர் செந்தில் தொண்டமானின் காளைகளுக்கு தங்க மோதிரத்தை பரிசாக வழங்கி வைத்தார்.

புதுடில்லியில் தெற்குலகு உச்சிமாநாடு

# இந்தியாவின் குரல் முக்கியம் என்கிறார் அஸர்பஜான் பிரிதிநிதி அஷ்ரப் ஷிகாலியேவ்

உலகளாவிய ரீதியாக முக்கியத்துவம் பெறும் பிரச்சினைகளில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான முதல் படியாக இந்தியாவின் உலகளாவிய தெற்கு உச்சிமாநாடு அமைந்துள்ளதாகவும் இது தொடர்பான இந்தியாவின் குரல் முக்கியமானதென்றும் இந்தியாவுக்கான அஸர்பஜான் தூதுவர் கடந்த வெள்ளியன்று புதுடில்லியில் தெரிவித்தார்.

இந்த உச்சி மாநாட்டில் உரையாற்றிய அஸர்பஜான் தூதுவர் அஷ்ரப் ஷிகாலியேவ், சக்திவள பாதுகாப்பு தொடர்பான குழுவில் அஸர்பஜான் சக்திவள அமைச்சர் இடம்பெற்றிருப்பதாகவும் அணிசேரா அமைப்பின் தற்போதைய தலைவராக தமது நாடு விளங்குவதால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தொடர்பில் ஒரு பொதுப்படையான கருத்தாக்கத்தை உருவாக்க இது உதவும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜி – 20 அமைப்பின் தலைவராக இந்தியா பொறுப்பேற்றிருப்பதைப் பாராட்டிய அவர், இந்தியாவின் முத்திரை வாசகமான ஒரே பூமி, ஒரே குடும்பம் ஒரே எதிர்காலம் என்பதை வரவேற்றதோடு உலக விவகாரங்களை முக்கியத்துவ அடிப்படையில் பட்டியல் படுத்துவதில் முன்னேறும் நாடுகளின் பங்களிப்பு சிறப்பாக உள்ளது என்றார்.

'இந்த உச்சி மாநாட்டில் 125 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. 29 கரிபியன் மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளும் ஆபிரிக்காவில் இருந்து 47 நாடுகளும், ஏழு ஐரோப்பிய நாடுகளும், 31 ஆசிய நாடுகளும் பங்கு பெறுகின்றன.

# அபிவிருத்தி அடையும் நாடுகளின் கரிசனைகளையும் ஜி 20 உள்ளடக்கும்

ஜி 20 நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெறாத அபிவிருத்தி அடையும் நாடுகளின் பிரச்சினைகளையும் நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்தும் ஒரு தளமாக அமைய வேண்டும் என்பதால்தான் புது டில்லியில் 125 நாடுகள் கலந்து கொண்ட தெற்குலக நாடுகளின் உச்சி மாநாட்டை இந்தியா நடத்தியது என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் மோகன் க்வாடரா ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

தெற்குலக நாடுகள் உச்சிமாநாடு தொடர்பாக இந்தியா, சீனாவுக்கு அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, எல்லா ஜி 20 உறுப்பு நாடுகளுடனும் இந்தியா தொடர்ச்சியாக நெருக்கமான தொடர்பில் இருப்பதாகவும் அவ்வகையிலேயே தகவல்கள் சீனாவுடன் பரிமாற்றப்பட்டதாகவும் விளக்கமளித்ததோடு யார் யாருடன் நாம் அபிவிருத்தி பங்காளிகளாக இருக்கிறோமே அந்த நாடுகளுடன் கலந்து பேசி வருகிறோம் என்றார். ஜி 20 நாடுகளின் இலக்குகளின் பேரிலான செயற்பாடுகளில் தெற்குலக நாடுகளின் அபிலாஷைகளையும் கவனத்தில் கொள்ளும் வகையில் இச் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என பாரதப் பிரதமர் விரும்புகிறார்.

ஜி 20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்ற நாடுகளிலேயே உலகின் அனைத்து அபிவிருத்தி அடையும் நாடுகளின் கரிசனைகளையும் அவற்றின் பார்வைகளையும் கவனத்தில் கொண்ட முதல் நாடாக இந்தியா திகழ்கிறது.

# மணவாளக்கோலப் பெருவிழா

லுணுகல நிருபர்

ஹாலிஎல நகர் அருள்மிகு ஸ்ரீ வீரசக்தி விநாயகர் பெருமான் ஆலயத்தில், மூன்றாம் ஆண்டு வருஷாபிஷேக மணவாளக்கோலப் பெருவிழா நடைபெறவுள்ளது. பஞ்சமி திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுப நன்னாளில் ஸ்ரீ வீரசக்தி பெருமான், காசிவிஸ்வநாதப் பெருமான், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மூன்றாவது ஆண்டு வருஷாபிஷேக மணவாளக்கோலம் பக்திப் பூர்வமாக நடைபெறவுள்ளது. அன்றைய தினம் விநாயகர் வழிபாடு, சுத்திபுண்ணியாக வாசகம், கடஸ்தாபனம், பிரதான கும்ப பூஜை, சங்கு பூஜை, ஹோமம், விசேட திரவிய ஹோமம், அஷ்டோத்திர மஹா சங்காபிஷேகம், மூலஸ்தான பூஜை, வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி உள்வீதி உலா நடைபெறும்.

# கல்வி தொழிநுட்ப மேம்பாட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்து

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

கல்வி தொழில் நுட்ப ஆராய்ச்சித் துறைகளின் மேம்பாடு கருதி, சப்ரகமுவ பல்கலைக்கழகம், பனை அபிவிருத்தி சபை ஆகியன உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில். சப்ரகமுவ பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் உதய ரத்னாயக, பனை அபிவிருத்தி சபை தலைவர் நிஷாந்த பதிராஜ ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

பனை அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் பனை ஆராய்ச்சி நிலையத்தின் நவீன தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உதவியை பெறல், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் உயர் பட்டப்படிப்பு, ஆராய்ச்சிகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் பனை அபிவிருத்தி சபையின் உதவிகளைப் பெறல் என்பவற்றுக்கு இதன்போது இணக்கம் காணப்பட்டன.

மேலும், பனை அபிவிருத்தி சபையின் உற்பத்திகளை விரிவாக்கல், அவற்றை வெளிநாடுகளில் அறிமுகம் செய்தல், அந்நியச் செலாவணியை உழைத்தல் மற்றும் பனை உற்பத்தி தொடர்பில் வெளிநாடுகளுக்கு அவசியமான உதவிகளை வழ ங்குதல் போன்ற பல விடயங்கள் குறித்தும் இங்கு கலந்து ரையாடப்பட்டது.




# மேல் மாகாண முன்னாள் அமைச்சர் ஏ.எம். யூசுப் காலமானார்

பி.எம்.முக்தார், அஸ்ரப் ஏ சமட்



மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எம். யூசுப் (வயது 76) நேற்று (18) களுத்துறையில் காலமானார்.

இவர், மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட 1988 காலத்திலிருந்து களுத்துறை, பேருவளை மூவின மக்களது ஆதரவைப் பெற்று ஐ.தே.கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினராக 25 வருடத்துக்கும் மேல் பணியாற்றியுள்ளார்.

மேல் மாகாண சபையின் முதலாவது முஸ்லிம் அமைச்சர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேல் மாகாண சபையின் உணவு, கூட்டுறவு, கடற்றொழில் , சுற்றுலாத்துறை அமைச்சராகவும் பதவி வகித்த இவர், மேல் மாகாண மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றினார். அத்துடன் பல முதலமைச்சர்கள் வெளிநாடுகள் சென்ற சமயங்களில் மேல் மாகாணத்தின் பதில் முதலமைச்சராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் ஜனாஸா நேற்று களுத்துறை தெருவுப்பள்ளிவாசல் மையவாடியில் அஸர் தொழுகையின் பின்னா் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் சர்வமத தலைவா்கள், அரசியல்வாதிகள், பெருமளவிலான தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனா்.

பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மர்ஜான் பளீல், மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இப்திகார் ஜெமீல், முன்னாள் எம்.பி எம்.எஸ். எம். அஸ்லம், பேருவளை நகர பிதா மஸாஹிம் மொஹமட், பேருவளை நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி ஆகியோர் அன்னாரின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துள்ளனர்.



# Regional Sales Executive
(Eastern Province)

The Associated Newspapers of Ceylon Limited (ANCL), widely known as Lake House, is the home and heart of print media in Sri Lanka. The country's pioneer print media institution having a history of over 100 years and 25 years of online publishing, continues to occupy the number one spot in the print media industry.

Lake House is looking for talented and dynamic individuals who possess the following qualifications and requirements to fill the above vacancy in the Sales Department.

Required qualifications & requirements

- A Bachelor's Degree in Management or Commerce from a recognized University or Member of SLIM/CIM or
- Passed GCE (A/L) examination in any stream with at least 4-5 years experience in the field of Marketing or Sales and
- Good communication skills to maintain rapport with our news agents.
- Attribute to sales or marketing will be distinct advantage.
- Should possess a valid driving license at least for light vehicles and vehicle should be registered under the name of the applicant.
- Applicants who reside in the Eastern Province is preferred.

Age : Below 35 years.

**Conditions of Employment:**

The appointment will be on contract basis and based on performance the contract period will be renewed.

Remuneration :

An attractive and negotiable remuneration package commensurate with the qualifications and experience will be offered to the selected candidate.

Applications:

Please send your CV with names and contact details of two non-related referees to the under mentioned address within 7 working days of this advertisement stating the position on the top left hand corner of the envelop or e-mail your CV to the following e-mail address with the position applied for in the subject line.

**Head of Human Capital**
The Associated Newspapers of Ceylon Ltd.
No. 35, D.R. Wijewardene Mawatha, Colombo 10.
hc@lakehouse.lk




# நீர் தேக்கங்களின் நீர் மட்டங்கள் குறைவு; மின்வெட்டை நீடிக்கும் நிலமை ஏற்படலாம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மத்திய மலைநாட்டில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பம் நிலவுவதால், நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள மவுஸ்சாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட சுமார் 15 அடி வரை குறைந்த நிலையில் உள்ளது.

ஏனைய நீர் தேக்கங்களான காசல்ரீ மேல், கொத்மலை, கென்யோன், லக்க்ஷபான, பொல்பிட்டிய, நவ லக்க்ஷபான, விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்கங்களிலும் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இவ்வெப்பநிலை தொடர்ந்து நீடித்தால், மின் வெட்டை எதிர்கொள்ள நேரிடுமென நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

# மாத்தளை மாநகர சபை தேர்தலில் போட்டியிட முன்னாள் அமைச்சர் தயார்

மாத்தளை சுழற்சி நிருபர்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாத்தளை மாநகர சபை முதல்வர் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக முன்னாள் அமைச்சர் நந்தமித்திர ஏக்கநாயக்க தெரிவித்தார்.

நவலங்கா சுதந்திர கட்சியில் இவர் போட்டியிட உள்ளார்.

குமார வெல்கம தலைமையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நவ லங்கா சுதந்திர கட்சி, நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தில் மாத்தளை மாவட்டத்தின் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் தனித்துப் போட்டியிட உள்ளதாக முன்னாள் அமைச்சர் நந்தமித்திர ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 19 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



‘ஜனாதிபதியின் உணவு பாதுகாப்பு, போஷாக்கு பொறிமுறை’

# பொன்டெரா நிறுவனம் ரூ.174 மில். பெறுமதியான பால் மா கையளிப்பு

## பொருளாதார நெருக்கடிக்குள்ளான சுமார் 70,000 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்க திட்டம்



பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 70,000 குடும்பங்களுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ‘உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான தேசிய ஒன்றிணைந்த பொறிமுறை’ ஊடாக 174 மில்லியன் ரூபா பெறுமதியான பால் மாவை பெற்றுக் கொடுக்க பொன்டெரா நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. நியுசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் எப்பல்டன் (Michael Appleton), பொன்டெரா நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றதிகாரி திருமதி ஜூடித் ஸ்வொல்ஸ், உள்ளிட்ட அதிகாரிகள் இப் பால் மாவை (17) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் உத்தியோகப்பூர்வமாக கையளித்தனர்.

06

# இந்தோனேசியாவில் பாரிய நிலநடுக்கம்

## 6.1 ரிக்டர் அளவில் பதிவு



இந்தோனேசியாவில் கடலுக்கு அடியில் நேற்று (18) அதிகாலை பாரிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

சுமார் 6.1 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் கொரண்டலோவின் தென்கிழக்கே கடலுக்கு அடியில் 147 கிலோமீட்டர் (91 மைல்) தொலைவில் உணரப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.மேலும் நிலநடுக்கத்தால் பொருட்சேதம், உயிர்சேதம் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சாரதிகள், நடத்துனர் பற்றாக்குறை

# தினமும் 800 பஸ்கள் சேவையிலிருந்து நிறுத்தம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொதுப் போக்குவரத்துத் துறையில் நிலவும் சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் பற்றாக்குறையினால் தினமும் 800 பஸ்களை சேவையிலீடுபடுத்த முடியாமல் உள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை நிவர்த்தி செய்வதற்காக ஒரு வருட காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் சாரதிகளையும் நடத்துனர்களையும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கிங்ஸ் நெல்சன் எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது சாரதிகள் மற்றும் நடத்துனர் தட்டுப்பாடு காரணமாக சேவையில் ஈடுபடுத்தப்படாத பஸ்கள் உட்பட மொத்தம் ஆயிரம் பஸ்களை அடுத்த மாதம் முதல் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட 75 பஸ்கள் அண்மையில் சேவைக்காக வழங்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு மறுதினம் மேலும் 150 பஸ்களை சேவைக்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# தேர்தல் செலவின சட்டமூலம் இன்று சபையில் விவாதம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டமூலத்தை இன்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற கட்டிடத்தில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னரே இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றுள்ளதுடன் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் கட்சித் தலைவர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் வகையில் சட்டம் உருவாக்கினால் அது உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தேர்தல் செலவு ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு செல்வாக்கு செலுத்தாத வகையில் இடைக்கால

06



தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் தை மாதம் 05ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 25

## குறள் தரும் சிந்தனை



முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்

சிரித்துப் பேசி நம்மைச் சீரழிக்க நினைக்கும் வஞ்சகரின் நட்புக்கு அஞ்சி ஒதுங்கிட வேண்டும்.

# ஆசிரியர் சேவையை பலப்படுத்த மற்றொரு சிறந்த நடவடிக்கை

இலங்கை ஒரு வளர்முக நாடாக இருந்த போதிலும் இலவச சேவைகள் வழங்குவதில் முன்னணியில் திகழும் தேசமாகவும் உள்ளது. அந்த வகையில் கல்வியை நாட்டு மக்களுக்கு இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும் கொள்கையை சுதந்திரத்திற்கு முன்பிருந்தே இந்நாடு முன்னெடுத்து வருகின்றது.

ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழக உயர்கல்வி வரை முற்றிலும் இலவசமாகவே இங்கு கல்வி அளிக்கப்படுகிறது. அதேநேரம் 05 வயது முதல்16 வயது வரையானோர் கல்வி பெற்றுக் கொள்வதும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பின்புலத்தில் இந்நாட்டின் இலவசக் கல்வித் திட்டம் விரிவான முறையிலும் பரந்தடிப்படையிலும் திட்டமிட்ட கட்டமைப்பு ஒழுங்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக பாடசாலைகள் அவற்றை நிர்வகிப்பதற்கான பொறிமுறை ஏற்பாடுகள் உள்ளிட்ட விசாலமான கட்டமைப்பு ஏற்பாடுகளையும் ஆளணியினரையும் இந்நாட்டு கல்வித்துறை கொண்டுள்ளது. இப்பணிக்கென நாடெங்கிலும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற அதேநேரம் அவற்றில் இரண்டு இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஊடாக தரமான கல்வி நாட்டின் எதிர்காலப் பரம்பரையினருக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகிறது.

இந்த இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் நாட்டின் மொத்த தேசிய வருமானததில் பெரும்பகுதி செலவிடப்படும் துறைகளில் ஒன்றாக இந்நாட்டின் கல்வித் துறையும் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு விசாலமான கட்டமைப்பு ஏற்பாடுகளின் ஊடாக நாட்டிலுள்ள 42 இலட்சம் மாணவர்கள் கல்வியை இலவசமாகப் பெற்றுக் கொள்கின்றனர். இதன் பயனாக இந்நாட்டின் எழுத்தறிவு வீதம் 93 வீதத்தையும் கடந்து வளர்ச்சி அடைந்த நாடுகளின் மட்டத்தில் காணப்படுகிறது.

இந்த நிலையில் கல்வித் துறைக்கான செலவையும் நிதியொதுக்கீட்டையும் எதிர்காலத்திற்கான முதலீடாகவே இங்கு நோக்கப்படுகிறது.

கல்விக்கான நிதியொதுக்கீடு முதலீடு என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அந்த வகையில்தான் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த கடந்த வரவு செலவுத்திட்டத்தின் போது இது தொடர்பில் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இவ்வாறான சூழலில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியா ஸ் பாக்கீர் மாக்கார் கல்வி அமைச்சரிடம் வாய்மூல விடைக்கான வினாவொன்றை எழுப்பி இருந்தார். அவ்வினாவுக்கு நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் பதிலளித்த கல்வி அமைச்சர், 'நாட்டிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பவென 26 ஆயிரம் பட்டதாரிகளையும் கல்விக் கல்லூரிகளில் பயிற்றப்பட்ட 08 ஆயிரம் ஆசிரியர்களையும் ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு கல்வியாண்டின் மூன்றாம் தவணை முடிவடைவதற்குள் எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதிக்குள் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும். அதற்கான அமைச்சரவை அனுமதி உள்ளிட்ட அனைத்து அனுமதிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் பற்றாக்குறை கொண்டுள்ள பாடசாலைகளுக்கு இந்த அறிவிப்பு நம்பிக்கை தரக்கூடியதாகும். அதிலும் இந்நியமனங்களை மேற்கொள்வதற்கான காலஎல்லைக்கான தினத்தையும் கூட அமைச்சர் உறுதிபடக்கூறியுள்ளார். அது இந்நம்பிக்கையை மேலும் பலப்படுத்துவதாகவே இருக்கும்.

அதேநேரம் இந்நியமனத்தின் ஊடாக ஆசிரியர் வெற்றிடங்கள் பெரும்பாலும் நிரப்பப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இதன் ஊடாக மாணவர்கள் கல்வி பெற்றுக்கொள்வதில் தற்போது எதிர்கொள்ளும் அசௌகரியங்களும் நிவர்த்திக்கப்படும். அதனால் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாடசாலைக்ளுக்கு அமைச்சரின் இந்த அறிவிப்பு நிச்சயம் ஆறுதலாகவே இருக்கும்.

கடந்த வருடம் நாடு முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடியின் அசௌகரியங்கள் இன்னும் முற்றாக நீங்கிவிடாத சூழலில் தான் 34 ஆயிரம் பேர் ஆசிரியர்களை அரசாங்க ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

தற்போதைய சூழலில் இது பாரியதொரு நடவடிக்கையாகும். இவ்வளவு தொகையினரை ஆசிரியர்களாக நியமிப்பது சாதாரணமான விடயம் அல்ல. பொருளாதார நெருக்கடியின் அசௌகரியங்கள் நீடித்துவரும் சூழலில் இவ்வளவு தொகையினரை ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதன் ஊடாக நாட்டின் எதிர்காலப் பரம்பரையினருக்கு கல்வி ஊட்டுவதில் அரசாங்கம் முன்னெடுக்கும் அக்கறையை வெளிப்படுத்தி நிற்கிறது.

நாட்டின் எதிர்கால நலன்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்படும் இந்நடவடிக்கைக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதேநேரம் கல்வியின் ஊடாக நாடு துரிய வளர்ச்சியையும் முன்னேற்றத்தையையும் அடைந்து கொள்வதற்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வெண்டும். இவற்றைத் தம் பொறுப்பாகவும் கடமையாகவும் கருதி செயற்படுவதை ஒவ்வொருவரும் தம் பொறுப்பாகக் கருத வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# தேர்தலை நடத்தினால் அதன் சுமையை மக்களே தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



இந்த வருடத்தின் முதல் காலாண்டு முடிவதற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சபையின் அனுமதியை பெற்றுக்கொள்ள முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை ஏனைய நாடுகளுடன் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிதிக்கொள்கையைப் பின்பற்றும் என்ற உறுமொழியின் காரணமாக, ஏனைய இருதரப்பு மற்றும் பலதரப்புக் கடன்களும் நிதியும் கிடைக்கும் என இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

'நாடு எங்கிருக்கிறது?' விசேட நிகழ்ச்சியில் தொலைக்காட்சி ஊடக நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்திய ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமாக கேள்விகள் கேட்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாகக் கிடைக்க இருக்கும் நிதி உதவி தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

### இவ்வருட முதல் காலாண்டுக்குள் IMF நிறைவேற்று பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெறலாம்

#### நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க



சர்வதேச நாணய நிதியத்தின் பங்களிப்பைப் புரிந்து கொள்ளாத சிறு குழுக்கள் இந்தக் கடன் தொகையின் கீழ் 4 ஆண்டுகளில் கிடைக்கும் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பற்றித்தான் பேசுகின்றன. ஆனால் இது தொடர்பில் பேசும் பல குழுக்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கும் மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கும் பங்களிப்பு செய்யாத குழுக்களாகும்.

அதேபோன்று, நாட்டில் நிலவும் அந்நிய செலாவணி நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும் என்று கூறும் குழுக்களும், அதனைத் தீர்க்காமல் மக்களை இதே போன்று அசௌகரியங்களுக்கு உள்ளாக்க வேண்டும் என்று கூறும் சிறு குழுவினரும் உள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு எதிராக எவரும் செல்ல முடியாது. பல்வேறு குழுக்கள், நிறுவனங்கள் மற்றும் பல்வேறு நபர்கள் இது குறித்து தங்கள் தனிப்பட்ட கருத்தை வெளிப்படுத்துவதை நான் பார்த்தேன். ஆனால் தற்போது இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டோம்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவிகளை பெற்றுக் கொள்வதா இல்லையா என்பது தொடர்பில் அன்றிருந்த அரசாங்கத்திற்குள் பிளவு ஏற்பட்டிருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்று ஒரு குழு தெரிவித்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறாமல் உள்ளூர் பொறிமுறையின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிப்பது குறித்து மற்றொரு குழு ஆராய்ந்தது. ஆனால் இறுதியாக மார்ச் 2022 இற்குள், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று, நாட்டின் நெருக்கடிக்குத் தேவையான தீர்வுகளைக் கண்டறிய அவர்களின் நீடிக்கப்பட்ட நிதி வசதியைப் பெற முடிவு செய்தது.

இன்று நாடு முகங்கொடுத்துள்ள சூழ்நிலையினால் கடன் கொடுப்பனவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. கடனை அடைக்க முடியாத நாடாக நாம் இருக்கிறோம். எனவே, பிரதானமாக கடனை அடைக்கக் கூடிய பொருளாதாரம் கொண்ட நாடாக நமது நாடு மாற்றப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு அங்கு மிகவும் முக்கியமானது. 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைப்பதோடு ஏனைய இருதரப்பு மற்றும் முத்தரப்பு கடன் உதவிகளை பெறும் வாய்ப்பு ஏற்படும்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் இலங்கை மீது நம்பிக்கையை அதிகரித்து வருகின்றது. இன்று, மதிப்பீட்டு நிறுவனங்கள் பொருளாதாரத்தை மிகக் குறைந்த மட்டத்தில் மதிப்பிட்டுள்ளன. அதன் காரணமாக எமக்கு நிதியுதவி பெறவோ நிதி ஒத்துழைப்பு பெறவோ முடியவில்லை. அதனால்தான் 78 மாத காலத்தில் , அவசர மனிதாபிமான தேவைகளைத் தவிர எந்தவொரு நிறுவனமும் அல்லது நாடும் எந்தவிதமான நிதியுதவியையும் வழங்கவில்லை என்று ஜனாதிபதி கூறியிருந்தார்.

### தற்போதைய பொருளாதார திட்டம் தடைபட்டால் மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்ல வேண்டியிருக்கும்

#### மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க

உள்நாட்டில் நாம் ஈட்டும் வெளிநாட்டுப் பணத்தையும், திறைசேரி பின்பற்றும் கொள்கை என்பவற்றுக்கு உட்பட்டு நாங்கள் முகாமைத்துவச் செயற்பாட்டையே முன்னெடுக்கிறோம். வெளிநாட்டு மற்றும் சர்வதேச அளவில் அந்த நம்பிக்கையைப் பெற, மதிப்பீட்டு நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார நிலைமையை மிகவும் சாதகமாக கருதும்.

எனவே, அனைத்து இருதரப்பு கடன் வழங்குநர்களுடனும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். மூன்று சுற்றுக்கள் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. மேலும் தேவையான நிதி உத்தரவாதங்களைப் பெற்ற பிறகு இந்தக் காலாண்டு முடிவதற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் குழுவின் அனுமதியைப் பெற முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஓரளவுக்கு நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை என்பது அரசாங்கம் எதிர்பார்க்கும் முழுமையான ஸ்திரத்தன்மை அல்ல. இன்று ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் நிலையில் நாம் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

ஆளும் கட்சியைப் போன்றே அரசாங்கத்துடன் தொடர்பில்லாத பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தப் பொறுப்பு இருப்பதாக நான் நம்புகிறேன். மேலும், கருத்துகளை வெளியிடும் போது தற்பொழுது முன்னெடுக்கப்படும் சாதகமான வேலைத்திட்டத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் அதனைச் செய்வது அவசியம்.

### தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகளுக்கான செலவை மாத்திரமே அரசினால் மேற்கொள்ளலாம்

#### நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன

நாட்டை மீண்டும் ஸ்திரப்படுத்த முடியாவிட்டால், அதனால் ஏற்படும் தாக்கம் முழு நாட்டையும் மோசமாக பாதிக்கும். எனவே, எந்தவொரு குழுவும் நாசகரமான செயலை மேற்கொண்டால், நாட்டின் நிலைமை 2022 மார்ச் நிலைவரத்தை விட மோசமாக இருக்கும். மேலும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அதிக காலம் எடுக்கலாம். எனவே, இந்தத் திட்டத்தை யாரும் குறைத்து மதிப்பிடக் கூடாது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# அரச பணத்திலிருந்து ஒரு ரூபாவையேனும் தனது மருத்துவத்துக்கு செலவிடாத மோடி!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2014 ஆம் ஆண்டு பதவியேற்றது தொடக்கம் தற்போது வரை தனது சொந்த மருத்துவத் தேவைகளுக்காக ஒரு ரூபா கூட அரசாங்கத்தின் பணத்தை செலவிடவில்லை என்பதும், அத்தகைய செலவுகளை தானே ஏற்றுக்கொண்டு வருவதும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரியவந்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தனக்கான மருத்துவச் செலவுகளுக்காக இதுவரை எவ்வளவு ரூபா செலவு செய்துள்ளார் என்பது குறித்து மகாராஷ்டிரா மாநிலத்தின் புனே மாவட்டத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலரான பிரபுல் சர்தா என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வாயிலாக பிரதமர் அலுவலகத்திடம் கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்த வினா தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2014 ஆம் ஆண்டு பதவியேற்றது முதல் தற்போது வரை தனது சொந்த மருத்துவத் தேவைகளுக்காக ஒரு ரூபா கூட அரசாங்கத்தின் பணத்தைச் செலவிடவில்லை என்பதும், அத்தகைய செலவுகளை அவரே ஏற்றுக்கொண்டு வருவதும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக சமூக ஆர்வலர் பிரபுல் சர்தா கூறும் போது, "ஃபிற் இந்தியா இயக்கம் மூலம் மக்களுக்கு வலுவான செய்தியை அளிப்பதோடு, தானே முன்னுதாரணமாக இருந்து ஆரோக்கியமாக இருப்பது குறித்து 135 கோடி மக்களையும் நரேந்திர மோடி ஊக்குவித்து வருகிறார். இதே வழியை ஏனைய அரசியல்வாதிகளும் பின்பற்றுவது அவசியம்.

வரி செலுத்துபவர்களின் பணம் எதுவும் பிரதமர் அலுவலகத்தின் தனிப்பட்ட பணிகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை. இது இந்திய அரச நிர்வாகத்தின் மீதான நமது நம்பிக்கையை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இதே வழியை அனைத்து எம்.பிக்களும் எம்.எல்.ஏக்களும் பின்பற்ற வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.



### அரசியல்வாதிகள் பலரும் புகழாரம்!

பிரதமர் நரேந்திர மோடியின் இவ்வாறான கொள்கைக்கு இந்திய அரசியல்வாதிகள் பலரும் வரவேற்புத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக சமூகவலைத்தளங்களில் பாராட்டுச் செய்திகள் பதிவிடப்பட்டுள்ளன.

இந்திய மத்திய அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு ஊதியத்தைத் தாண்டி பல்வேறு சலுகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. அவர்களது பதவிக் காலத்தில் இலவச ரயில் பயணம், வீட்டு வாடகைப்படி, மருத்துவப் படி, தொலைபேசி இணைப்பு உள்ளிட்ட பல சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

ஆனாலும் பிரதமர் மோடி அவ்வாறான சலுகைகள் எதனையுமே ஏற்றுக் கொள்வதில்லை. தனக்கான மருத்துவச் செலவுகளைக் கூட தனது சொந்தச் செலவிலேயே ஏற்றுக் கொண்டுள்ளார். இது குறித்து பலரும் வரவேற்று கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

உலகிலேயே செல்வாக்கு மிக்க தலைவராக, இந்தியாவின் பிரதமராக கடந்த 2014 ஆம் ஆண்டு நரேந்திர மோடி பதவியேற்றார். தொடர்ந்து 8 ஆண்டுகளாக பிரதமராக பதவி வகித்து வரும் பிரதமர் நரேந்திர மோடி, தற்போது சர்வதேச அளவில் மிகவும் பிரபலமான தலைவராகவும் செல்வாக்கு மிக்க தலைவராகவும் திகழ்ந்து வருகிறார்.

பிரதமர் மோடி அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்வதாகவும் ஆடம்பரமான உடைகளை அணிவதாகவும் எதிர்க்கட்சிகள் தரப்பில் அவ்வப்போது விமர்சனங்கள் எழுவதுண்டு. ஆனாலும் அவரது அரசுமுறைப் பயணங்களால் பொருளாதார ரீதியில் இந்தியாவுக்கு விளைந்த நன்மைகள் ஏராளம் என்றே பொருளாதார வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணங்களால் இந்தியாவில் வெளிநாட்டு தொழில் முதலீடுகள் அதிகரித்துள்ளன. தனது ஆடை விடயத்தில் அவர் எப்போதுமே தனித்துவமான நேர்த்தியைக் கடைப்பிடித்து வருபவராவார். அதற்கான செலவுகள் அவரது சொந்தப் பணம் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான விமர்சனங்கள் ஒரு பக்கம் வைக்கப்பட்டு வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தனது மருத்துவ செலவுகளுக்குக் கூட தனது சொந்த பணத்தையே பயன்படுத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளமை கவனிக்கத்தக்கது.

Sri Lanka NATIONAL QUALITY AWARD

# இலங்கை தேசிய தர விருதுகள் - 2022



## இலங்கையின் முதன்மையான செயல்திறன் சிறப்பு விருது

இலங்கையின் தேசிய தர விருது என்பது, இலங்கையின் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் செயல்திறன் சிறப்பினைப் பெற்ற நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக தேசிய மட்டத்தில் வழங்கப்படும் முதன்மையான மற்றும் மிகவும் மதிப்புமிக்க விருதாகும். இலங்கை தேசிய தர மதிப்பீட்டில், உலகப் புகழ்பெற்ற அமெரிக்காவின் மெல்கம் போல்ட்ரிஜ் தேசிய தர மதிப்பீட்டு அளவுகோலின் அடிப்படையில் நிறுவனங்களின் மதிப்பீடு செய்யப்படுகிறது, மேலும் இந்த அளவுகோல்கள் உலகம் முழுவதும் 80க்கும் மேற்பட்ட நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. 5 தசாப்தங்களுக்கும் மேலாக, இலங்கை தர நிறுவனம் இலங்கையின் அனைத்து நிறுவனங்களுக்கிடையில் தரம் மற்றும் தரப்படுத்தல் மேம்பாட்டிற்கு தீவிரமாக பங்களிக்கும் முதன்மையான அரசாங்க நிறுவனமாக இலங்கை தேசிய தர விருதை செயற்படுத்தி வருகிறது.

### விருதின் நோக்கம்

- தர முகாமைத்துவத்தினை பேணும் நிறுவனத்திற்கான தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம்
- இலங்கை நிறுவனங்களின் தரத்தின் தன்மை மற்றும் செயல்திறனின் அதிகரிப்பு மூலம் சர்வதேச நிறுவனங்களின் தரநிலை தன்மையை வழங்குவதற்குத் தேவையான அறிவை வழங்குதல்

### விருதுகளின் வகைகள்

| பிரிவு | அளவு |
|---|---|
| உற்பத்தி | **பாரிய** (250க்கும் மேற்பட்ட முழுநேர ஊழியர்கள்) |
| சேவை | **நடுத்தரம்** (50 முதல் 250 வரையான முழுநேர ஊழியர்கள்) |
| கல்வி | **சிறிய** (50க்கும் குறைவான முழுநேர ஊழியர்கள்) |
| சுகாதார சேவை | |

**நீங்கள் தகைமை பெறும் விருது**

- தேசிய தர விருதுகள்
- திறமை விருதுகள்
- பாராட்டுச் சான்றிதழ்

### விண்ணப்பக் கட்டணம்

- பாரிய அளவிலான நிறுவனம் 65,000.00 இல. ரூபா
- நடுத்தர அளவிலான நிறுவனம் 50,000.00 இல. ரூபா
- சிறிய அளவிலான நிறுவனம் 35,000.00 இல. ரூபா

(மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அரசாங்க வரிகள் செலுத்துதல் வேண்டும்)



### வெற்றியாளர்களுக்கான பிரதிபலன்கள்

- இலங்கை தேசிய தர விருதுகளின் அளவுகோல்களை நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் தயாரிப்பு மற்றும் சேவை தரம், நிதி முன்னேற்றம் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை மேம்படுத்த முடியும்.
- மதிப்பீட்டின் முடிவில், கணக்காய்வாளர்களால் வழங்கப்படும் பகுப்பாய்வு அறிக்கை நிறுவனத்தின் எதிர்கால சவால்கள் மற்றும் வளர்ச்சியை சமாளிக்க பயன்படுத்தப்படலாம்.
- இலங்கை தேசிய தர விருது இலச்சினை இலங்கையில் தரத்தின் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் வெற்றியாளர்கள் இந்த இலச்சினையை 5 ஆண்டுகள் வரை சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தலாம்.
- இலங்கையின் தலைசிறந்த முன்னணி நிறுவனங்களில் இணைந்து கொள்ள முடியும்.
- உலக அங்கீகாரம் பெற்ற சர்வதேச விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படை அடித்தளம்.

## 2022 இலங்கை தேசிய தர விருதுக்காக
# விண்ணப்பம் கோரல்

விண்ணப்பப் படிவங்களை இலங்கை தர நிறுவனத்தின் தரம் மற்றும் சேவை மேம்பாட்டு பிரிவில் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.

**பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (மொழிமூலம் - ஆங்கிலம்)**

இலங்கை தேசிய தர விருதுகளுக்கான அளவுகோள் தொடர்பில் அறிந்துகொள்வதற்கு இலவசமாக நடாத்தப்படும் இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

2023 பெப்ரவரி 20 மற்றும் 21ஆம் திகதிகளில்

**விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்: 2023-03-31**

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:
பணிப்பாளர் - தரம் மற்றும் சேவை மேம்பாடு
தொலைபேசி/ தொலைநகல்: 011-2694981
அல்லது சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
தொலைபேசி இல. 077 2338675

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை தர நிறுவனம் (SLSI)
17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08
தொலைபேசி : 011 2671567 / 72, 011 2674618, 011 2697039, 011 5354319 நீடிப்பு: 314, 322, 323, 320
தொலைநகல் : 011 2671579, 011 2694981
மின்னஞ்சல் : dssp@slsi.lk இணையதளம்: www.slsi.lk

தொழில்நுட்ப அமைச்சு

## கிராமங்களை இணைக்க...

துறையில் நிலவும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் பற்றாக்குறை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 800 பஸ்களையும் சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அத்துடன் நேற்று நடத்த திட்டமிட்ட அமைச்சரவை உப குழுவினதும் அரச சேவைகள் உயரதிகாரிகளின் குழுவினதும் அனுமதியின் பிரகாரம் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் சாரதிகள் மற்றும் நடத்துனர்களையும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர்களூடாக இந்த 1,000 பஸ் வண்டிகளை சேவையிலீடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## மூன்று விடயங்கள்...

(18) அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய, மின்சார வழங்கலுடன் தொடர்புடைய அனைத்து சேவைகளும் அதாவது, கனியவள உற்பத்திகள், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் என்பன தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## A/L பரீட்சை நடைபெறும்...

ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறும் 14 நாட்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி நாடு பூராகவும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளதாக, அமைச்சர் பந்துல குறிப்பிட்டுள்ளார். பரீட்சை எழுதும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக நாளொன்றிற்கு 357 மில்லியன் ரூபா வீதம் தொடர்ச்சியாக 14 நாட்கள் மின்சாரம் வழங்குவதற்கு 5 பில்லியன் ரூபா செலவாகும் என கஞ்சன விஜேசேகர தெரிவித்ததாகவும் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## என்னை விமர்சிக்க...

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக் கூற வேண்டும் என சரத் பொன்சேகா எம்.பி தெரிவித்த கூற்றுக்கு பதிலளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று அது தொடர்பில் மேலும் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி:

புறக்கோட்டை வியாபாரிகள் நிதியுதவி வழங்கினால் அதனை பெற்றுக் கொள்வேன் ஏனெனில் என்னிடம் நிதியில்லை. உடலையும், கண்ணையும் பாதுகாத்துக் கொள்ள முடியாதவர்கள் என்னை சிறைப்படுத்துமாறு குறிப்பிடுகிறார்கள் என்றார்.

என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முன்னர் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை முதலில் தெளிவாக பார்க்க வேண்டும். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான புலனாய்வு தகவல்களை பாதுகாப்பு தரப்பினர் எனக்கு தெரிவிக்கவில்லை என உயர் நீதிமன்றம் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது.10 கோடி ரூபா நட்டஈடே தவிர தண்டப்பணம் அல்ல என்பதை தெளிவாக குறிப்பிட விரும்புகிறேன்.

சரத் பொன்சேகா சிறையில் இருந்த போது நான் தான் அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி பீல்ட் மார்ஷல் பதவியை வழங்கினேன். இவ்வாறான பின்னணியின் என்மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைப்பது நியாயமற்றது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் என்னை சிறைப்படுத்த வேண்டும் என சரத் பொன்சேகா உட்பட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஆகியோர் தெரிவித்து வந்துள்ளனர்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக பதவி வகித்த போது இராணுவ தலைமையகத்தின் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. அவ்வாறாயின் அவர் அதற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## சுற்றுலாப்பயணிகளின் வருகையில்...

இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இக்காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்து வந்துள்ளனர் எனவும் இதற்கமைய ரஷ்யாவிலிருந்து 12 ஆயிரத்து 64 சுற்றுலாப் பயணிகளும் இந்தியாவிலிருந்து 5 ஆயிரத்து 838 பேரும், ஜேர்மனியில் இருந்து 3 ஆயிரத்து 945 பேரும், பிரித்தானியாவிலிருந்து 3 ஆயிரத்து 862 பேரும், பிரான்ஸில் இருந்து 2 ஆயிரத்து 241 பேரும் இலங்கைக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அத்துடன், இம்மாதம் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் டெங்கு...

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாட்டின் இம்மாதம் 9ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுமார் 2,030 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் 417 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 257 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 123 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 107 பேரும், யாழ்ப்பாணத்தில் 103 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

## தேர்தல் செலவு சட்டத்தை...

அரசாங்கம் நேற்று (18) தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன மற்றும் ஆளும் கட்சியின் பிரதிநிதிகள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் பங்களிப்புடன் நடத்தப்பட்ட விசேட கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் ஒப்புதல் அளிக்காவிட்டாலும் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தை கொண்டு வருவதென தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தேர்தல் செலவு ஒழுங்குமுறை சட்டத்தை தற்போது கொண்டு வர வேண்டாம் என கோரிக்கை விடுத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் பங்கேற்கவில்லை.

கலந்துரையாடலின் பின்னர் ஆரம்பமான பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அரசாங்கத்தின் தீர்மானத்தை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

## தேர்தல் செலவின சட்டமூலம்... 03ஆம் பக்கத் தொடர்

நியமங்களை உள்ளடக்குமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தினர். தேர்தல் செலவுகள் ஒழுங்குப்படுத்தல் சட்டமூலத்தை ஒரு மாதத்திற்குப் பின்னர் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள தீர்மானித்துள்ளதாக நீதி மைச்சர் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டத்தில் அறிவித்துள்ள நிலையில் இத் தீர்மானம் ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தையடுத்து மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## பொன்டெரா நிறுவனம்... 03ஆம் பக்கத் தொடர்

நாடுமுழுவதும் அடையாளம் காணப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 70,000 குடும்பங்களுக்கு இப் பால்மா, மாவட்டச் செயலாளர் அலுவலகத்துக்கூடாக பகிர்ந்தளிக்கப்படும்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட தேசிய உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி குழுவின் தலைவரும் ஆலோசகருமான கலாநிதி சுரேன் படகொட கருத்து தெரிவிக்கையில், அனைத்து பிரஜைகளுக்கும் அவசியமான போஷாக்கு கிடைப்பதை உறுதி செய்வதே அரசாங்கத்தின் உணவு பாதுகாப்பு வேலைதிட்டத்தின் நோக்கமெனத் தெரிவித்தார். மிகவும் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு போஷாக்கு தேவையை ஈடுசெய்வதே இதன் பிரதான குறிக்கோளென்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தமைக்காக பொன்டெரா நிறுவனத்துக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

சரியானதைச் செய்ய உறுதிபூண்டுள்ள ஒரு பொறுப்பான நிறுவனம் என்ற வகையில், இலங்கையருக்கு உயர்தரமான பால் போஷாக்கைப் பெற்றுக்கொடுப்பதில் பொன்டெரா நிறுவனம் அர்ப்பணிப்புடன் செயற்படும். பொன்டெரா நிறுவனம் கடந்த 40 ஆண்டுகளாக முன்னெடுத்துவரும் சமூக சேவையின் தொடர்ச்சியாகவே இந்த பங்களிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க , உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட, நியுசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் எப்பல்டன் (Michael Appleton), இலங்கைக்கான நியுசிலாந்தின் பிரதி உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ ட்ரெவலர் (Andrew Traveller), பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா, பொன்டெரா நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் முகாமைத்துவப் பணிப்பாளர் வித்யா சிவராஜா, பொன்டெரா நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜூடித் ஸ்வாலேஸ் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## NIC அச்சிடும் அட்டைகளுக்கு...

பிறந்தவர்களுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக திணைக்களத்தினால் சான்றளிக்கப்பட்ட ஆவணத்தை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வழங்கப்படும் ஆவணம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை செல்லுபடியாகும் வகையில் தயாரிக்கப்படும் எனவும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய, தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளின் தற்போதைய தட்டுப்பாடு நீங்கும் வரை தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதை கட்டுப்படுத்த வேண்டியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## இரண்டாம் மதிப்பீடு...

ஆதரவாக 23வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன. பாராளுமன்றத்தில் நேற்று புனர்வாழ்வு பணியக சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் முழு நாள் விவாதமாக நடைபெற்றது. விவாதத்தின் இறுதியில் சட்டமூலத்துக்கு சபை அனுமதி அளிக்கின்றதா என சபைக்கு தலைமைதாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபையை வினவியபோது சபையில் தேசிய மக்கள் சக்தி எம் பி விஜித ஹேரத் வாக்களிப்பு கோரினார். அதற்கமைய வாக்களிப்பு இடம்பெற்றபோது ஆளும் கட்சியில் இருந்த 22 உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி தரப்பில் சுயாதீன உறுப்பினரான ஏ,எல்.எம். அதாவுல்லாவும் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். அதன் மூலம் சட்டமூலத்துக்கு ஆதரவாக 23வாக்குகள் அளிக்கப்பட்டன. அத்துடன் எதிர்க்கட்சியில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிக்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, இரான் விக்ரமரத்ன, அனுகுமார திஸாநாயக்க, விஜித ஹேரத் மற்றும் ஹரினி அமரசூரிய ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர். அதன்படி சட்டமூலத்துக்கு எதிராக 6வாக்குகள் அளிக்கப்பட்டன. அதற்கிணங்க புனர்வாழ்வு பணியக சட்டமூல இரண்டாம் மதிப்பீடு 17 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் சபையில் நிறைவேற்றப்பட்டது.

## கொட்டாஞ்சேனையில்...

அனுமதிக்கப்பட்டுள்ளார். காரொன்றில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவர் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டில் அவரது வாய் பகுதியிலும், வயிற்றிலும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# புனர்வாழ்வு பணியக சட்டமூலம் சர்வதேச அனுமதி அடிப்படையில் கொண்டுவரப்படுவது அவசியம்

## ரவூப் ஹக்கீம் எம்பி சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



புனர்வாழ்வு பணியக சட்டமூலம் சர்வதேசம் அனுமதித்துள்ள அடிப்படையில் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அதில் நிலவும் சந்தேகங்களை நிவர்த்திக்கும் வகையில் சட்டமூலத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இடமளிக்கவேண்டும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த சட்ட மூலத்தில் காணப்படும் சில சரத்துக்கள் அரசியலில் கடும் போக்கு கொண்டவர்களை அடக்குவதற்கானதாகவே காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற புனர்வாழ்வு பணியக சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

புனர்வாழ்வு பணியக சட்டமூலத்துக்கு நாட்டின் வரலாற்றில் ஒரு போதும் இல்லாத வகையிலேயே உயர்நீதிமன்ற தீர்ப்பு அமைந்திருந்தது.

அந்தளவுக்கு அரசியலமைப்புக்கு முற்றுமுழுதாக முரணாகவே அந்த சட்டமூலம் அமைந்திருந்தது. தற்போது போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்கு என சிறிய திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதானாலும் அதற்கு முறையான வழிமுறைகள் இருக்கின்றன. அதற்கு இராணுவத்தினரைப் பயன்படுத்தக்கூடாது. மருத்துவர்களால் உறுதிப்படுத்தவேண்டும் என்பதுடன் புனர்வாழ்வளிக்கும் சட்டம் ஊடாக அரசாங்கத்துக்கு தேவையானவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்ப முடியாது.

அத்துடன் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்புபவர்கள் தொடர்பில் நீதிமன்றத்தின் அனுமதி அவசியமாகிறது. புனர்வாழ்வுக்கு செல்பவர்களின் விருப்பம் இல்லாமல் அதனை மேற்கொள்ளவும் முடியாது.

## உள்ளூராட்சி தேர்தல்கள்...

உறுப்பினர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், உயர் நீதிமன்றத்தில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இடைநிறுத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் இராணுவ கேர்ணல் W.M.R.விஜேசுந்தர தாக்கல் செய்த ரிட் மனுவை தள்ளுபடி செய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று(18) பரிசீலணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலேயே சட்டத்தரணி சாலிய பீரிஸ் இவ்விடயத்தை கூறியுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்டோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து தரப்பினரும் முன்வைத்த கருத்துகளை பரிசீலித்த, பிரியந்த ஜயவர்தன, எஸ். துரைராஜா மற்றும் பி.பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம், மனுக்களை எதிர்வரும் 10ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளது.

## 394 ரயில்வே ஊழியர்கள்...

ரயில்வே ஊழியர்கள் 394 பேர் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் ரயில்வே காணிகளை கைப்பற்றியுள்ளனரென்றும் எந்தவித அனுமதியுமின்றி இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள காணிகளை மீள பெற்றுக்கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், ரயில்வே திணைக்கள ஊழியர்கள் 394 பேர் திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளை சட்டவிரோதமான முறையில் கைப்பற்றியுள்ளனர்.இவர்களில் பெரும்பாலானோர் தற்போது சேவையில் இல்லை. ஒருசிலர் மரணமடைந்துள்ளனர். ஏனையோரே தற்போது சேவையிலுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் கைப்பற்றப்பட்டுள்ள காணிகளை மீண்டும் அரசுடமையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

அதேவேளை, ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளில் தற்காலிகமாக குடியிருப்பவர்கள் திணைக்களத்துக்கு வரி செலுத்துகின்றார்கள். ஒரு சிலர் வரி செலுத்துவதில்லை. சில பகுதிகளில் வாழ்பவர்கள் பலவந்தமான முறையில் திணைக்கத்துக்கு சொந்தமான காணிகளில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

## பாராளுமன்ற உறுப்பினர்களது...

கல்வித் தகைமை அல்லது தொழில் தகைமை அல்லது இரண்டையும் பாராளுமன்ற செயலகத்திற்கு அறிவித்துள்ளனர். பாராளுமன்ற அதிகாரிகள் முதலில் இந்த தகவலை வெளியிட மறுத்ததை அடுத்து, தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு அந்த தகவலை வெளியிட வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

உறுப்பினர்களின் கோப்பகத்தின் கீழ், www.parliament.lk என்ற பாராளுமன்ற இணையதளத்தில், விவரங்களை பொதுமக்கள் பார்வையிடலாம்.

முன்னதாக, அரசியலமைப்பின் 90 மற்றும் 91 ஆவது பிரிவுகளின் அடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகுதிகள் பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கான முன்நிபந்தனையாக 'அங்கீகரிக்கப்படவில்லை'.

எனவே தகுதிகளை வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லாதிருந்தது. இந்த நிலையில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உத்தரவுக்கமைய, இந்த தகவல்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

பாராளுமன்ற இணையத்தளத்தின் படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட 17 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கல்வி மற்றும் தொழில் தகுதிகளை சமர்ப்பிக்க தவறியுள்ளனர். 6 பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகுதியானது சாதாரண தரம் (O/L) என இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 52 பாராளுமன்ற உறுப்பினர்கள் க.பொ.த உயர்தரத்தை தமது உயர் கல்வித் தகைமையாகக் குறிப்பிட்டுள்ளனர். எவ்வாறாயினும், சிலர் 'உயர்தரம் வரை' என்று குறிப்பிட்டுள்ளதால், அவர்கள் உயர்தரத்தில் சித்தி பெற்றனரா என்பதை உறுதிப்படுத்தாததால் இந்த எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. 23 பாராளுமன்ற உறுப்பினர்கள் டிப்ளோமாக்களை தங்களின் உயர்ந்த கல்வித் தகுதியாக பட்டியலிட்டுள்ளனர். 70 பேர் தாங்கள் இளமாணி அல்லது பட்டதாரிகள் என்று குறிப்பிட்டுள்ளனர். இணையத்தளத்தில் உள்ள தரவுகளின்படி, 32 பாராளுமன்ற உறுப்பினர்கள் முதுமாணி பட்டங்களை தங்களின் மிக உயர்ந்த கல்வித் தகுதியாக குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் உயர் கல்வித் தகுதியாக கலாநிதி பட்டத்தை பெற்றுள்ளனர்.

## குறைந்த செலவுடனேயே...

கடமையாகுமெனவும் பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வுகளுக்கான செலவுகளை குறைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு பல தடவை பேச்சுவார்த்தைகளை நடத்தி நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அதேவேளை, சுதந்திரத்தின் 75 ஆவது விழாவை கொண்டாடி எதிர்கால பரம்பரைக்கு சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று அத்துரலிய ரதன தேரர் எம். பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திர தினத்தையொட்டி ஸ்ரீ தலதா மாளிகையில் தலதா பெரஹெர ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட பிரதமர், பருத்தித்துறையில் இருந்து தேவேந்திர முனை வரை மற்றும் தெற்கு முதல் கிழக்கு வரையான நாட்டின் அனைத்து மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டே இந்த சுதந்திர தின விழா நடத்தப்படவுள்ளதாகவும் சபையில் தெரிவித்தார். இளைய பரம்பரையினருக்கு சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் கல்விச் செயல்பாடுகள் பலவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இந்த நிகழ்வுகளுக்காக அனைத்து கட்சிகளினதும் அமைப்புகளினதும் ஒத்துழைப்பையும் அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் என பிரதேச மட்டத்திலும் சுதந்திர தின உற்சவங்களை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துரலிய ரதன தேரர் தமது கேள்வியின் போது, நாடு எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெரும் செலவில் அரசாங்கம் சுதந்திர தின விழாவை கொண்டாட வேண்டியது அவசியமா என்றும் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த போதே பிரதமர் சுதந்திர தின நிகழ்வின் அவசியத்தை சபையில் வலியுறுத்தினார்.

## உலமா சபையின் நூற்றாண்டு...

அறிஞர்களால் உருவாக்கப்பட்ட உலமா சபை, நாடுமுழுவதும் 163 கிளைகளைக் கொண்டுள்ளதோடு 8300 க்கும் மேற்பட்ட மார்க்க அறிஞர்கள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் போதனைகளின் அடிப்படையில் வாழுகின்ற, தீனின் மேம்பாட்டிற்கும் சமூகத்தினதும் தேசத்தினதும் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கின்ற ஒரு கட்டுக்கோப்பான முன்மாதிரி முஸ்லிம் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் செயற்பட்டு வரும் உலமா சபையின் மாநாட்டை சிறப்பாக நடத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நூற்றாண்டு விழா நிகழ்வில் அப்துல் ஹாலிக் மௌலவி வரவேற்புரை நிகழ்த்த இருப்பதோடு உலமா சபையின் எதிர்கால திட்டங்கள் பற்றி உலமா சபை பொதுச் செயலாளர் அர்கம் நூராமித் மௌலவி உரையாற்றுகிறார். உலமா சபையின் தலைவர் எம். ஐ.றிஸ்வி முப்தியின் உரையும் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் விசேட உரைகளும் இடம்பெறவுள்ள அதேவேளை தென்னாபிரிக்க உலமா சபை தலைவர் மௌலானா இப்ராஹீம் பாம் சிறப்புரையாற்றுவார்.

நூற்றாண்டை முன்னிட்டு விசேட முத்திரை வெளியிடப்பட இருப்பதோடு முதல் முத்திரையை ஜனாதிபதி வெளியிட்டு வைப்பார்.

அதனைத் தொடர்ந்து உலமா சபை உப தலைவர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் தலைமையில் நூற்றாண்டு மலர் வெளியிட்டு வைக்கப்படும். அடுத்து பிரகடனம் வெளியிடப்படும். கலாநிதி முபாரக் மதனி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற இருப்பதோடு அஷ்ஷெய்க் கலாநிதி அஸ்வர் நன்றியுரையாற்றுவார். இதே வேளை துஆப் பிராத்தனையை அஷ்ஷெய்க் உமர் தீன் மௌலவி நிகழ்த்துவார்.

இந்த விழாவில் டி.எஸ்.சேனாநாயக்க மற்றும் கொழும்பு ஸாஹிரா கல்லுரி மாணவர்கள் தேசிய கீதம் இசைப்பர். வெலிகம தன்வீர் அகடமி மற்றும் டி.எஸ்.சேனாநாயக்க கல்லுரி மாணவர்களின் கஸீதாவும் இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

## புனர்வாழ்வு பணியக சட்ட மூலத்தில்...

கணக்கில் காலத்தை வீணடிக்காமல் அவர்களின் சிறந்த எதிர்காலத்தை நிர்ணயிப்பதாக இந்த புனர்வாழ்வு பணியக சட்ட மூலம் அமையும் என பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்த அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய தீர்மானமே 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சட்ட மூலம் ஓரிரு தினங்களில் தயாரிக்கப்பட்டதல்ல. துறைசார்ந்த சிரேஷ்ட சட்டத்தரணிகள் 300 பேரின் உழைப்பு இதில் காணப்படுகிறது. இதில் குறைபாடுகள் காணப்பட்டால் அதனை திருத்திக்கொள்ள முடியுமென சபையில் தெரிவித்த அவர்,சிறந்த தீர்மானம் எல்லாவற்றுக்குமே எதிர்க்கட்சியினர் தடைபோட்டு விமர்சனங்களை மேற்கொள்வது சிறந்ததல்ல. அது நாட்டின் எதிர்காலத்தையே பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புனர்வாழ்வு பணியக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## தேர்தலை நடத்தினால்... (04ஆம் பக்கத் தொடர்)

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, அரசாங்கம் தேர்தலை நடத்தினால் அதன் சுமையை நுகர்வோர் சுமக்க நேரிடும் என்று தெரிவித்தார். "ஜனநாயகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு பெரும் சக்தியினால், பொருளாதாரச் சிக்கல்களால் சிதைந்து போன இரண்டு வருடங்ககளை கடந்துள்ளோம். 69 இலட்சம் வாக்குகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பொருளாதார அழுத்தத்தைத் தாங்க முடியாத மக்களின் போராட்டத்தினால் வீட்டுக்குச் செல்ல நேரிட்டது. இதனால் அமைச்சரவை செயலிழந்தது. போராட்டம் தொடர்ந்திருந்தால் பாராளுமன்றமும் செயலிழந்திருக்கும். இது தேர்தலுக்கான ஆண்டு என்ற பிரச்சினை நமக்கு உள்ளது. நாம் இன்னும் பொருளாதார நெருக்கடியில்தான் இருக்கிறோம். சில துறைகள் இன்னும் சரிவைச் சந்தித்து வருகின்றன. சில துறைகளில் பொருளாதாரம் மந்தமாக உள்ளது. இந்நிலையில் ஜனநாயகத் தேர்தல் என்று கூறப்படும் தேர்தலுக்கு விரைவாகச் செல்ல வேண்டுமா? தேர்தலுக்காக 12 பில்லியன் ரூபா செலவிடப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது நம் நாட்டின் வருமானம் 100 என்றால் செலவு 300 ஆகிவிட்டது. மீதி இருநூறை கடன் வாங்கியோ அல்லது பணத்தை அச்சடித்தோ நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்தல் நடந்தால் பணவீக்கம் அதிகரிக்கும். வரி வருமானத்தில் இருந்து எடுத்தால் அது மக்களின் உணவு வேளையையே பாதிக்கும். இப்படிப்பட்ட நேரத்தில், பணம் அச்சடித்து, அதிகார மாற்றம் இல்லாதஉள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால், அது உலக சாதனையாக இருக்கும். ஜனநாயகம் முக்கியம்தான். திறைசேரியின் பிரதிநிதி என்ற முறையில் நான் இதனைக் கூறுகின்றேன். தேர்தலை நடத்த இது சரியான தருணமா என்று மக்களிடம் கேட்கிறேன். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளால் நாட்டின் ஜனநாயகம் தலைகீழாக மாறி வரும் காலம் இது." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வெற்றிக் கோஷத்துடன் புதிய வருடம்

கொவிசெத Govisetha

2 வாரத்தில் பத்து இலட்சத்துக்குரிய இலட்சாதிபதிகள் இவரை உருவாக்கியுள்ளது!

பொதுஹெர, கண்டி, விஷாகல, முதலாவ மற்றும் 989 SMS சேவை



நீங்களும் அதிர்ஷ்டசாலியாகிடுங்கள்

ஏழு நாட்களும் - வெற்றி நிச்சயம் - கொவிசெத

NLB தேசிய லொத்தர்


# கல்முனை மாவட்ட நீதிமன்றில் ஏலவிற்பனை அறிவித்தல்

செலான் வங்கி வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் **"செலான் பாங் பி.எல்.சி"** இல. 90 காலி வீதி, "செலான் ரவர்ஸ்" கொழும்பு-03. கல்முனையில் "கல்முனைக் கிளை" என அழைக்கப்படும் அதன் கிளை அல்லது அதன் வியாபார நிலையம் ஒன்றைக் கொண்டிருக்கும் நிறுவனம்

**- வழக்காளி -**

**வழக்கு இல:** MB/61/2019

**எதிர்:**

ஜெயா அஹமட் ஹஸ்மி,
இல.39A, ஜும்மா பள்ளிவாசல் வடக்கு வீதி, நிந்தவூர்.

**- எதிராளி -**

மேற்குறித்த வழக்கின் எதிராளி வழக்காளிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை செலுத்த தவறியதனால், கௌரவ மாவட்ட நீதிபதியின் 02.12.2020ம் திகதிய தீர்ப்பின் பிரகாரமும் 04.03.2022ம் திகதிய கட்டளையின் பிரகாரமும், பிரசித்த நொத்தாரிஸ் A.L. நதீர் அவர்களால் 15.07.2013ம் திகதியிடப்பட்ட 7094 இலக்கமிட்ட ஈட்டுறுதியில் கீழ்க்குறித்த ஆதன இடாப்பில் குறிப்பிடப்படும் ஆதனம் எதிர்வரும் **22.02.2023ம் திகதி காலை 11.00 மணிக்கு** ஆதனம் அமைந்துள்ள இடத்தில் கல்முனை மாவட்ட நீதிமன்றப் பதிவாளரினால் ஏலத்தில் கூறி விற்கப்படும்.

**ஆதன இடாப்பு:**

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பற்று, நிந்தவூர்11, கிராம அலுவலர் பிரிவு 41A அமைந்திருக்கும், "40வது கண்டம்" என அழைக்கப்படும் காணியின் வடக்குத், தெற்கு, மேற்குப் பகுதிகளில் இருந்து எடுக்கப்பட்ட பிரிவிட்டதும் பிரிவிடப்பட்டதுமான மேற்கு அரைப்பகுதி தென்னம் தோட்டம் இதன் விஸ்தீரணம் வடக்குத் தெற்காக 22 பாகம், கிழக்கு மேற்காக 12 1/2 பாகம் மற்றும், இதன் எல்லைகளாக வடக்கு: 9அடி பாதை, கிழக்கு: மிகுதி ஆதனம், தெற்கு: A. ஊத்துமாலெப்பைக்குரிய ஆதனம். மேற்கு பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட ஆதனம். இதுவும் இதடங்களும்.

நில அளவையாளரின் வரையப்பட்ட 2014.02.10ம் திகதியிடப்பட்ட KK/BT/2014/148ம் இலக்க அண்மைய நில அளவைப்படத்தின் பிரகாரம்.

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பற்று, நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவு, நிந்தவூர் பிரதேச சபைக்குட்பட்ட, நிந்தவூர்-11, கிராம அலுவலர் பிரிவு 41A, ஜும்மா பள்ளிவாசல் வடக்கு வீதி, 39A, வட்டாரம் 11, "40வது கண்டம்" என அழைக்கப்படும் காணியின் விஸ்தீரணம் முப்பத்தி நான்கு தசம் இரண்டு பேர்ச்சஸ் (A0-RO-P 34.2) அல்லது 0.0865 ஹெக்டேயர்ஸ், இதன் எல்லைகளாக வடக்கு:வீதி, கிழக்கு: ஜெயா நகீபா ரக்ஸ்னாவிற்குரிய தோட்டம், தெற்கு: A. ஊத்துமாலெப்பைக்குரிய தோட்டம், மேற்கு:தற்பொழுது சுகாதார மற்றும் மிருகவள திணைக்களத்திற்குரிய ஆதனம், இதுவும் இதடங்களும்.

கல்முனைக் காணிக் கந்தோரில் தற்போதைய பதிவு L/112/24

**-மன்றின் கட்டளைப்படி-**

**பதிவாளர்**


OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk


தேசிய லொத்தர் சபை National Lotteries Board — செவ்வாய்க்கிழமை 2023.01.17 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5003 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,448,470.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 1 4 3 9 8 4

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1458 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,448,072.40
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 1 1 1 8 5 4

**கொவிசெத** Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3245 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 71,794,221.60
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 02 25 40 58

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1033 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 142,577,368.40
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 11 22 54 72

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1351 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 293,687,998.00
ஆங்கில எழுத்து M — சுப்பர் இலக்கம் 15 — வெற்றி இலக்கங்கள் 28 61 73 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 312 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,511,407.20
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 07 20 43 59 — விசேட இலக்கினம் கன்னி


ST & S SINCE 1892 — softlogic Finance

# சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி மாபெரும் வாகன ஏலவிற்பனை

43 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்களும் முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களும்

2023 ஜனவரி 24 செவ்வாய்க்கிழமை

இல. 463, கண்டி வீதி, களனி என்ற முகவரியில்

காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

கார்கள்

| | | |
|---|---|---|
| CBA -1XXX | ஹொண்டா DBA-JF 1 N பொக்ஸ் | 2015 |
| CAV -7 XXX | பீஎம்டபிள்யூ - FZ35 அக்டிவ் | 2015 |
| CAG-5XXX | மைக்ரோ பண்டா LC 1.0 | 2015 |
| KY -6xxx | டொயோட்டா பைரஸ் | 2012 |
| KO- 2xxx | அஉடி A62 0LT | 2010 |
| KH-6xxx | டொயோட்டா CBA-NCP60/IST | 2006 |
| HW-1xxx | மிட்சுபிஷி கலன்ட் | 2003 |
| JW- 0xxx | ஹுண்டாய் எலன் XD 4D A | 2001 |
| JF-4xxx | ஹொண்டா சிற்றி விடெக் 4A | 2000 |
| HI -2xxx | ஹுண்டாய் சொனட்டா | 2000 |
| 19-9xxx | ஹொண்டா E-EG8 | 1993 |

வேன்கள்

| | | |
|---|---|---|
| PH-2xxx | மைக்ரோ MPV ஜூனியர் 111 | 2015 |
| PD-1xxx | டொயோட்டா CBF-TRH200V | 2007 |
| PA-5xxx | சுசூகி TE-DA62V | 2002 |
| 252-3xxx | நிசான் | 1994 |
| 252-5xxx | மஸ்டா பிரௌணி | 1993 |

ஜீப் /சிங்கிள் கெப்ஸ்

| | | |
|---|---|---|
| KD - 4XXX | மிட்சுபிஷி V73WLRXVR மொன்டெரோ | 2006 |
| HZ - 2XXX | கியா சொரன்டோ | 2004 |
| PQ - 5XXX | மிட்சுபிஷி KB4TNENMR | 2009 |
| JA - 8XXX | டாட்டா 207DI | 2004 |

லொறிகள் /டிரக்குகள் /டிப்பர்கள்

| | | |
|---|---|---|
| LO-4xxx | சோஜன் LF J1040G4 | 2017 |
| PY-3xxx | மஸ்டா MAXXIMO PLUS | 2014 |
| LI-6xxx | டாட்டா 407 | 2011 |
| PR-1xxx | பொன்டொன் BJ1010V0JA3-2 | 2011 |
| LC-2xxx | லங்கா அசோக் லேலண்ட் ஈக்கோமெட் | 2006 |
| JQ 3xxx | லங்கா அசோக் லேலண்ட் ஈக்கோமெட | 2004 |
| DAC-4xxx | மஹின்ட்ரா மெக்ஸிமோ பிளஸ் | 2015 |
| PY-6xxx | மஹின்ட்ரா மெக்ஸிமோ பிளஸ்-VX | 2014 |
| PY-8xxx | மஹின்ட்ரா பொலாரோ மெக்ஸ் ட்ரக் | 2014 |
| PT-0xxx | மஹின்ட்ரா பொலாரோ மெக்ஸ் ட்ரக | 2012 |
| JR-4xxx | டைஹாட்சு ஹிஜெட் | 1998 |

முச்சக்கர வண்டிகள்

| | | |
|---|---|---|
| ABA-0xxx | பஜாஜ் RE205 | 2015 |
| YY-5xxx | பஜாஜ் 4S | 2012 |
| YO-0xxx | பஜாஜ் RE205 | 2011 |
| QG-8xxx | பஜாஜ் 2 ஸ்ட்ரோக் | 2006 |

மோட்டார் சைக்கிள்கள்

| | | |
|---|---|---|
| BIT-8xxx | ஹீரோ ஹங்க் | 2020 |
| BJA 4xxx | ஹேளஜோ GN 125 H | 2020 |
| BIG-2xxx | TVS NTORQ | 2019 |
| BHL - 6xxx | யமஹா ரே -ZR | 2018 |
| BHV- 0xxx | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2018 |
| BHN 5xxx | TVS ஸ்கூட்டி பெப் + | 2018 |
| BHC-7xxx | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2018 |
| BHC-6xxx | மஹின்ட்ரா கஸ்டோ | 2017 |

பார்வையிடல் - ஏலவிற்பனை நடைபெறும் ஸ்தலத்தில் 2023 ஜனவரி 21 சனிக்கிழமை முதல் (காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்
- **நுழைவு:** ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்:** விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2023 ஜனவரி 26 ஆந் திகதி வியாழக்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம® ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

Celebrating 125 Years

011 2671468 www.sandslanka.com



சிறு விளம்பரம்


மோட்டார் வாகனங்கள்

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG BIB - 5179 TVS Apache, 2019, motor cy cle கூ டிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 003785

UP YA- 1893 Bajaj, 2010, WP AAJ- 9868 Bajaj, 2013, SG AAD-5724 B a jaj, 2 012, SG YL- 1 764 B aj aj, 2011, three wh eel கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 003788

வர்த்தகம்

207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

பொ லன் ன று வ க துருவெல நகருக்கு மி கவும் அருகாமையில் அரிசி ஆலையொன்றாக பாவிப்பதற்கு, பொருத்தமான பாரிய கட்டிடமும் 1.5 வியாபாரம் செய்வ த ற்கான காணியும் விற்பனைக்கு. எடை பாலம் மற்றும் KV 250 டிரான்ஸ்போமர் ஆகியனவும் உண்டு. நீடித்த கால உறுதி, குத்தகை உரிமம், விசாரணை செய்ய வும். கமிலஸ் 07778 49847 003456

வேலைவாய்ப்பு

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

வயோதிப தாயாரை வீட்டில் இருந்து பார்த்துக் கொள்வதற்கு (50 வயதிற்குக் குறைந்த பெண்) தேவை. (சம்பளம் 35, 000) ஆவதுடன் அவர து வேலை க ண் கா ணி க் க ப் ப ட் டு பின்னர் சம்பளம் அதிகரிக்கப்படும். உணவு, தங்குமிடம் வழ ங்கப்படும். 0779281663. 003547


Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams


விவசாய நவீனமயமாக்கல் திட்டம் Agriculture Modernization Project — THE WORLD BANK — கமத்தொழில் அமைச்சு Ministry of Agriculture

கமத்தொழில் அமைச்சு

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் -

**கமத்தொழில் அமைச்சு – IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

## Supply and Delivery of Gypsum Fertilizer for Jumbo Peanut project in Northern Province

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஐடொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை **வட மாகாணத்தில் ஜம்போ நிலக்கடலை செயற்றிட்டத்திற்காக கிப்சம் உரத்தை வழங்கல் மற்றும் ஒப்டைத்தல் என்ற ஒப்பந்தத்தின் கீழ் தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுளளது.**
2. வட மாகாணத்தில் ஜம்போ உரத்தை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப்பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|
| வட மாகாணத்தில் ஜம்போ நிலக்கடலை செயற்றிட்டத்திற்காக 40,000 கி.கி. கிப்சம் உரம் | LK-MOA-PMU-277209-GO-RFB | 170,000.00 | 5,000.00 |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **2023.01.19 ஆம் திகதியிலிருந்து 2023.02.08 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக விவசாய அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.**
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதி முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறைமை இருத்தல் வேண்டும்.
6. **2023.02.08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **2023.02.08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதியானது' தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கமான **"Supply & Delivery of Gypsum Fertilizer for Jumbo Peanut Project in Northern Province" என்ற சொற்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.**
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521**
**திகதி: 19.01.2023**


The Housewives' companion Classifieds on Daily News

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பில் வெள்ளத்தினால் சேதமடைந்த வீதிகளுக்கான புனரமைப்பு பணி ஆரம்பம்

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மழை வெள்ளத்தினால் சேதமடைந்த வீதிகளை புனரமைக்கும் பணி மாநகர சபையினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த அடை மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தினால் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் சில வீதிகள் சேதமடைந்தன.

இந்நிலையில், மட்டக்களப்பு மாநகர சபையின் கடந்த 2022ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட 2.5 மில்லியன் ரூபா செலவில், அரசடி 10ஆம் வட்டாரத்தின் தாமரைக்கேணி கிராம அலுவலர் பிரிவில் சேதமடைந்த வீதிகளைப் புனரமைக்கும் பணி நேற்று (18) தொடங்கப்பட்டது.

தாமரைக்கேணி சங்கீத ஒழுங்கை, செங்குந்தர் குறுக்கு வீதி, அரசடி நூலக வீதி ஆகியனவே புனரமைக்கப்படுகின்றன.



அரசடி வட்டார உறுப்பினர் சிவம் பாக்கியநாதனின் முன்மொழிவுக்கமைய மாநகர முதல்வர் தி.சரவணபவன், ஆணையாளர் என்.மதிவண்ணன், பொறியியலாளர் சித்திராதேவி லிங்கேஸ்வரனின் அறிவுறுத்தலுக்கிணங்க இவ்வீதிகள் புனரமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் தலா 2.5 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ், மட்டக்களப்பு மாநகர சபையின் 20 வட்டாரங்களிலும் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள வீதிகள், வட்டார உறுப்பினர்களின் சிபாரிசின் அடிப்படையிலும் தாழ்நிலப் பிரதேசங்களைக் கொண்ட புறநகர்ப் பகுதிகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டும் புனரமைக்கப்படுகின்றன.

## மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரச அதிபர் பதவியேற்பு

கல்லடி குறூப், பெரியபோரதீவு, புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு சுழற்சி நிருபர்கள்

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கலாமதி பத்மராஜா தனது கடைமையை நேற்று (18) மாவட்ட செயலகத்தில் வைத்து உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட கலாமதி பத்மராஜா நேற்று முன்தினம் (17) பிரதமர் அலுவலகத்தில் தமக்கான நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டார்.

புதிய மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கலாமதி பத்மராஜா, மாவட்ட செயலக உத்தியோகத்தர்களினால் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன், மாவட்ட செயலகத்திலுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ உத்தம ஜெகதீஸ்வர குருக்கள் தலைமையில் நடத்தப்பட்ட விசேட பூஜை வழிபாடுகளிலும் கலந்துகொண்டார்.



ஏற்கெனவே மட்டக்களப்பு மாவட்ட செயலாளராகக் கடமையாற்றிய கே.கருணாகரன் ஓய்வுபெற்றுச் சென்றதைத் தொடர்ந்து நிலவிய வெற்றிடத்துக்கு புதிய மாவட்ட செயலாளராக கலாமதி பத்மராஜா நியமிக்கப்பட்டார்.

இவர் கடந்த 2020ஆம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் வரை மட்டக்களப்பு மாவட்ட செயலாளராக கடமையாற்றியிருந்தார்.

## வேதசிவாகம பாடசாலை வவுணதீவில் ஆரம்பம்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரண்டாவது தடவையாக வேத சிவாகம பாடசாலை, மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவிலுள்ள இறக்கத்துமுனை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்று (18) ஆரம்பிக்கப்பட்டது.

வவுணதீவு பிரதேசத்திலுள்ள இந்துக்குருமாரை நன்கு பயிற்றுவிக்கும் வகையில், இப்பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலையில் வேதம், ஆகமம், பூஜை முறைகள், யோகாசனம், சங்கீதம் போன்றவை தொடர்பாக இந்துக் குருமார்களுக்கு போதனையுடன் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கிழக்கிலங்கையிலுள்ள இந்துக் குருமாரின் நன்மை கருதியும் அவர்கள் மேன்மேலும் வளர்ச்சியடையும் வகையிலும் இந்த வேத சிவாகம பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதாக, கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ க.லோகநாதக் குருக்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தினுடைய வவுணதீவு பிரதேசக் கிளையின் தலைவர் சிவஸ்ரீ முரசொழிமாறக் குருக்கள், வேத சிவாகமங்களைக் கற்கவுள்ள குருமார்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## புதையல் தோண்டிய 7 பேர் தெஹியத்தகண்டியில் கைது

அம்பாறை மாவட்டத்தின் தெஹியத்தகண்டி பிரதேசத்தில் தொல்பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் 7 பேரைக் கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக தெஹியத்தகண்டி பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் (17) கிடைத்த தகவலைத் தொடர்ந்து மேற்படி பிரதேசத்தில் பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன்போது, இச்சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதுடன், புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்திய சில உபகரணங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹியத்தகண்டி, குளியாப்பிட்டி, சிரிபுர, மினுவாங்கொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 40, 42, 45, 46, 47, 49, 51 வயதுகளையுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து நீரிறைக்கும் இயந்திரம், பூஜை பொருட்கள் உள்ளிட்டவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் 75ஆவது சுதந்திர தின கலந்துரையாடல்



புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறப்பு நிகழ்வுகளை நடத்துவதற்கு அம்மாவட்ட செயலகம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இதன் முன்னாயத்தம் தொடர்பாக விசேட கலந்துரையாடலொன்று, மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில்

அரசாங்க நிர்வாகம், பொலிஸ், பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

ஆங்கிலேயரின் காலனித்துவத்திலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்று இவ்வாண்டுடன் 75 வருடங்கள் நிறைவு பெறுவதை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 75ஆவது சுதந்திர தின ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## புதையல் தோண்டிய மூவருக்கு விளக்கமறியல்

கந்தளாய் தினகரன் நிருபர்

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாத்தியாகம பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களையும் இம்மாதம் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, கந்தளாய் நீதவான் நீதிமன்றம் நேற்று(18) உத்தரவிட்டது.

பாத்தியாகம லைட் வீதி மற்றும் காலியைச் சேர்ந்த 18, 29, 25 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாத்தியாகம பகுதியிலுள்ள வீடொன்றில் புதையல் தோண்டுவதாக கந்தளாய் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

இதன்போது, வீட்டின் சமையலறைப் பகுதியில் 20 அடிவரை தோண்டிக்கொண்டிருந்த இச்சந்தேக நபர்களை கடந்த திங்கட்கிழமை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

## 200 விவசாயிகளுக்கு வீட்டுத்தோட்ட பயிர் விதைகள் வழங்கிவைப்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசத்திலுள்ள 200 விவசாயிகளுக்கு வீட்டுத்தோட்டச் செய்கைக்கான மரக்கறி விதைகள் நேற்று (18) வழங்கி வைக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனமான யுனொப்ஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால், இம்மரக்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

சத்துணவு வழங்கல் மற்றும் வாழ்வாதார உதவியூடாக உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் விசேட திட்டத்தின் கீழ் உணவுத் தேவையை தாமாகவே பூர்த்தி செய்யும் நோக்கில் தம்பலகாமம் பிரதேசத்தின் பத்தினிபுரம், பல்மெட்டியாவ, மீராநகர் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளே இதில் பயனடைந்துள்ளனர்.

## களுதாவளைக் கடற்கரையில் கரையொதுங்கிய இராட்சத ஆமை



பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளைக் கடற்கரையில் உயிரிழந்துள்ள இராட்சத ஆமையொன்று நேற்று (18) காலை கரையொதுங்கியுள்ளது.

கடற்கரைக்குச் சென்ற தாம் கரையொதுங்கிக் கிடந்த இந்த ஆமையை அவதானித்ததாகவும் இது சுமார் 50 கிலோ கிராம் நிறையுடையதாக இருக்குமெனவும், மீனவர்கள் தெரிவித்தனர்.

இது போன்று கடந்த வருடமும் இவ்வாறு கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உயிரிழந்த பல ஆமைகள் கரையொதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் பாதுகாப்பு நிலைமை; மட்டக்களப்பு செயலகத்தில் ஆராய்வு

கல்லடி, மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்



உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடலொன்று, மட்டக்களப்பு மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலருமான எம்.வீ.எம். சூபியான் தலைமையில் நேற்று (18) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது, தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள உயரதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்வது தொடர்பாகவும் வேட்புமனுவை ஏற்றுக்கொள்ளும் காலப் பகுதியான நேற்றிலிருந்து (18) எதிர்வரும் 21ஆம் திகதிவரை பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டன.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், தேர்தல் அலுவலகத்துக்கு வாகனங்கள் உள்நுழைதல், வெளிச்செல்வதிலும் வேட்புமனுவை ஒப்படைக்கும் போது அனுமதிக்கப்படும் நபர்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

## தம்பலகாமத்தில் 100 குடும்பங்களுக்கு இலவசமாக குடிநீர் இணைப்பு வசதி

தம்பலகாமம் குறூப் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்ந்து வரும் 100 குடும்பங்களின் நன்மை கருதி முஸ்லிம் எய்ட் நிறுவனத்தினால் இலவசமாக குடிநீர் இணைப்பு வசதியை செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 16 குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்புக்கான உதவி, தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று முன்தினம் (17) வழங்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் வைத்து இக்குடிநீர் இணைப்புக்கான உதவி வழங்கப்பட்டது.

இதேவேளை, கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட 100 குடும்பங்களுக்கும் இலவசமாக குடிநீர் இணைப்பு வசதி, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தலைமையில் செய்து கொடுக்கப்பட்டது.

## அட்டாளைச்சேனையில் ஆசிரிய பயிலுநர்களுக்கு நேர்முகப்பரீட்சை

ஒலுவில் விசேட நிருபர்

தேசிய கல்வியல் கல்லூரிக்கு 2023/2024ஆம் கல்வியாண்டுக்கு புதிதாக அனுமதிக்கப்படவுள்ள ஆசிரிய பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் அட்டாளைச்சேனை தேசிய கல்வியல் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக, அட்டாளைச்சேனை தேசிய கல்வியல் கல்லூரியின் பீடாதிபதி கே.புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

மேற்படி ஆசிரிய பயிலுநர்களின் விண்ணபப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளுக்கு தபால் மூலமாக நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கடிதம் கிடைக்கப்பட்டவர்கள், அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஆவணங்களுடனும் காலை 9 மணிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

2019 / 2020ஆம் ஆண்டுகளுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை, புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தின் பெறுபேறுகளுக்கமைய, கல்வியல் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுநர்கள் இணைக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியல் கல்லூரிக்கு விஞ்ஞானக் கற்கை நெறிக்கு 57 பேரும் கணிதத்துக்கு 57 பேரும் இஸ்லாம் கற்கைநெறிக்கு 20 பேரும்ஆரம்பநெறிக் கற்கைக்கு 120 பேரும் விசேட கற்கைநெறிகளுக்கு 60 பேரும் கணக்கியல் மற்றும் வணிகக் கல்விக்கு 30 பேருமாக மொத்தம் 344 ஆசிரிய பயிலுநர்கள் இணைக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## சிறந்த சேவையை வழங்கிய இருவர் கௌரவிப்பு





திராய்க்கேணி தினகரன் நிருபர்


அம்பாறை மாவட்டத்துக்கு சிறந்த சேவையை வழங்கி ஓய்வு பெற்ற முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் ரி.மோகனகுமார் மற்றும் முன்னாள் மாவட்ட பொறியியலாளர் எம்.ஐ. எம்.ராசிக் ஆகியோர் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபாவினால் அவர்கள், நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



# ஆரோக்கிய அறிவியல்

– முஹம்மத் மர்லின்





# கொவிட் 19 பெருந்தொற்று மீண்டும் தீவிரமடையுமா?

இன்றைய நவீன அறிவியல் உலகில் முழு மனித சமுதாயத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் 2019 ஆண்டின் இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்ற கொவிட் 19 தொற்று, கடும் அர்ப்பணிப்பு மிக்க உழைப்பின் ஊடாகப் பெரு வீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களும் இத்தொற்றின் தாக்கங்களைப் பலவீனப்படுத்தக்கூடிய தடுப்பூசியும் பெரிதும் உதவியுள்ளன.

ஆனால் கொவிட் 19 தொற்றானது கொரோனா குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வைரஸ் ஆகும். பொதுவாக வைரஸ் வகைளில் பெரும்பாலானவை காலத்திற்கு காலம் பிறழ்வுக்கு உள்ளாகக் கூடியவை. அந்த வகையில் கொவிட் 19 தொற்று வைரஸும் பிறழ்வுக்கு உள்ளாகக் கூடியதாக விளங்குகின்றன. இத்தொற்றில் ஏற்கனவே பல பிறழ்வுகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலான பிறழ்வுகள் தாக்கங்கள் அற்றவை. ஆனால் ஒரு சில பிறழ்வுகள் தான் முழு உலகிலும் பெரும் பாதிப்புக்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தின.

குறிப்பாக இத்தொற்று தோற்றம் பெற்ற முதல் வருடத்தில் ஏற்பட்ட பிறழ்வுகளாக விளங்கும் தென்னாபிக்காவில் கண்டறியப்பட்ட பீட்டா, பிரித்தானியாவில் கண்டறியப்பட்ட அல்பா, பிரேசிலில் கண்டறியப்பட்ட கம்மா, இந்தியாவில் கண்டறியப்பட்ட டெல்டா அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

இப்பிறழ்வுகளின் விளைவாக உலகில் கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இலட்சக்கணக்கானோர் காவு கொள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக கொவிட் 19 தொற்றினால் 66 கோடியே 27 இலட்சத்துக்கும் (662,735,182) மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 67 இலட்சத்துக்கும் (6,706,305) மேற்பட்டோர் கடந்த 17 ஆம் திகதி (ஜனவரி 2023) வரை உயிரிழந்துள்ளனர் என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

தொற்று நோய்களின் அண்மைக் கால வரலாற்றில் குறுகிய காலப்பகுதியில் அதிகூடிய உயிரிழப்புக்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்திய தொற்று என்ற கரைபடிந்த தடத்தையும் கொவிட் 19 தொற்று பதித்து விட்டது.

என்றாலும் 2020 டிசம்பர் மாத முற்பகுதியில் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய தடுப்பூசி அவசரப் பயன்பாட்டின் நிமித்தம் பாவனைக்கு வந்ததோடு அதன் பாதிப்புகளிலும் தாக்கங்களிலும் பலவீனங்கள் ஏற்பட ஆரம்பித்தன. இத்தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்த பின்னர் பி.1.1.529 என்ற ஒமிக்ரோன் பிறழ்வு 2021 நவம்பரில் பல நாடுகளில் கண்டறியப்பட்டன. அதன் தாக்கத்திற்கும் உலகின் பல நாடுகளும் எதிர்கொண்டன. ஆனால் ஏற்கனவே தாக்கம் செலுத்திய பிறழ்வுகளைப் போன்று இப்பிறழ்வு செல்வாக்கு செலுத்தவில்லை. ஆனாலும் அவை சில நாடுகளில் தாக்கம் செலுத்தியமையும் மறைக்க முடியாத உண்மையாகும்.

இருப்பினும் 2021 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதி முதல் கொவிட் 19 தொற்றின் தாக்கமும் பாதிப்புகளும் வீழ்ச்சியடையத் தொடங்கியதோடு அதனைத் தவிர்த்துக்கொள்வதில் மக்கள் செலுத்தி வந்த கவனத்திலும் விழிப்புணர்விலும் பலவீனங்கள் ஏற்படலாயின. ஆனால் இத்தொற்று பிறழ்வுக்கு உள்ளாவதை நிறுத்திக்கொள்ளவில்லை. இதற்கு 2021 நவம்பரில் ஏற்பட்ட ஒமிக்ரோன் பிறழ்வு நல்ல சான்று.

இவ்வாறான பின்புலத்தில் கடந்த வருடத்தின் பின்னரைப் பகுதியில் கொவிட் 19 தொற்றின் தாக்கம் சீனாவில் மீண்டும் தலைதூக்கியது. அது நவம்பர் மாதமாகும்போது தீவிர நிலையை அடைந்தது. இது குறித்து உலகின் பல நாடுகளும் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

அதேநேரம் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சூழலில் அமெரிக்காவில் XBB.1.5 என்ற புதிய பிறழ்வுவொன்று கண்டறியப்பட்டுள்ளதாக அறிவிக்கபட்டுள்ளது. இப்பிறழ்வு இற்றை வரையும் 38 க்கும் மேற்பட்ட நாடுகளில் பதிவாகியுள்ளதென உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டிருக்கிறது.

இப்பிறழ்வானது ஏற்கனவே கண்டறியப்பட்ட பிறழ்வுகளைப் போன்றல்லாமல் வேகமாகப் பரவக்கூடிய பண்பைக் கொண்டிருப்பதாகக் தெரிவித்திருக்கும் உலக சுகாதார ஸ்தாபனம், இத்தொற்றை தவிர்த்துக்கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைபிடிக்குமாறும் மக்களைக் கேட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்கா, இந்தியா உட்பட உலகின் பல நாடுகளும் கொவிட் 19 தொற்று மீண்டும் தலைதூக்கும் அச்சுறுத்தல் குறித்து அதிக கவனம் செலுத்தியுள்ளன. குறிப்பாக சீனா, கொங்கொங், மக்கௌ உள்ளிட்ட நாடுகளில் இருந்து வரும் சர்வதேசப் பயணிகள் பி.சி.ஆர் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் நோய்கள் கட்டுப்பாடு மத்திய நிலையம் அறிவித்திருக்கின்றது.

இதேவேளை இந்தியாவும் சில நாடுகளில் இருந்து வரும் வெளிநாட்டு பயணிகளை கொவிட் 19 பரீட்சிப்புக்கு உட்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.


இந்நிலையில் இலங்கையும் கொவிட் 19 தொற்றின் மீளத்தலைதூக்குவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. அதன் ஓரங்கமாக இந்நாட்டுக்கு வரும் உல்லாச பயணிகளுக்கு இத்தொற்று தவிர்ப்பு தொடர்பில் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டல்களை அறிமுகப்படுவத்துவது குறித்து கவனம் செலுத்தியுள்ளன.

இவ்வாறான சூழலில் தான் இலங்கையின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத், இப்பிறழ்வு இலங்கைக்கும் வந்து சேர்வதற்கான வாய்ப்பு அதிகம்' என்றும் 'இதன் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுக்காள் தொற்றிப் பரவும் ஒரு தொற்றாக கொவிட் 19 தொற்று இருப்பதால் அதன் பரவுதல் தொடரைத் துண்டிக்க வேண்டும். அதன் நிமித்தம் முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல், சனநெரிசல் மிக்க இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்தல் உள்ளிட்ட அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களை உச்சளவில் கடைபிடிக்க வேண்டும். அவை பரவுதல் தொடரைத் துண்டிப்பதில் அதிகூடிய பங்களிப்பை நல்கும். அத்தோடு தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதிலும் கவனம் செலுத்தத் தவறக்கூடாது.

ஆகவே கொவிட் 19 தொற்று அச்சுறுத்தல் இன்னும் முற்றாக நீங்காத சூழலில் அதனைத் தவிர்த்துக் கொள்வதில் தொடர்ந்தும் விழிப்புணர்வோடு செயற்படுவது அவசியம். அதுவே ஆரோக்கியமானது. இத்தொற்று நோயைத் தவிர்த்துக்கொள்வதற்கு ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும். அதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது இன்றியமையாததாகும்.

மர்லின் மரிக்கார்



# முழுமையாகத் தவிர்த்துக் கொள்ளக்கூடிய நோய் டெங்கு

மழைக்கால நிலையுடன் சேர்த்து இலங்கையில் பெரிதும் தலைதூக்கக்கூடிய நோயாக டெங்கு வைரஸ் காய்ச்சல் விளங்குகிறது. இக்காய்ச்சலினால் வருடா வருடம் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்படுகின்றனர். சிலர் உயிரிழக்கவும் செய்கின்றனர்.

அந்த வகையில் கடந்த வருடம் (2022) கூட இந்நோயினால் 65,933 பேர் பாதிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்கள் தவிர்ப்பு பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன. அத்தோடு சிலர் உயிரிழந்தும் உள்ளனர்.

ஆனால் டெங்கு நோயை முழுமையாகத் தவிர்த்துக் கொள்ளவும் முடியும். இல்லாவிடில் இந்நோய்க்கு உள்ளாகி இருப்பதை ஆரம்பத்திலேயே இனம் கண்டு உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொண்டால் நோயை முழுமையாகக் குணப்படுத்தியும் விடலாம்.

அதனால் மழை நீர் தேங்கி டெங்கு நுளம்பு பல்கிப் பெருகக்கூடிய கைவிடப்பட்ட சிரட்டைகள், உடைந்த மட்பாண்டங்கள், யோகட் கப்புகள், சிலிசிலி உறைகள் உள்ளிட்ட அனைத்தையும் அப்புறப்படுத்தி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போது இவ்வின நுளம்புகள் பல்கிப் பெருக வாய்ப்பு இராது.

அதேநேரம் காய்ச்சல் ஏற்பட்டால் மூன்றாவது தினத்தில் அனைத்து நோயாளர்களுக்கும் பூரணமான குருதிப் பரிசோதனை மேற்கொள்ளுதல் அத்தியாவசியமானது. அதனை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப கட்டத்திலேயே உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும். அதன் ஊடாக இந்நோயின் தீவிர நிலையைத் தவிர்த்தும் நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளலாம்.

அதனால் இவ்வைரஸ் தொற்றுள்ள நுளம்பு இங்கு காவியாக செயற்படுகின்ற போதிலும் கட்டமைப்பு ரீதியாக இது மிகச் சமமான போதும் நோயைப் பரப்புவதில் வித்தியாசமான வைரஸ்கள் செயற்படுகின்றன. (DEN 1, DEN 2 , DEN 3, DEN 4)

இவ்வைரஸ் தொற்றுவதன் மூலம் ஏற்படும் நோய் நிலைமைகள் மிகப் பெரிய வீச்சில் விரிந்து செல்லலாம். என்றாலும் சில நபர்களிடம் அதற்கான எவ்வித அறிகுறிகள் வெளிப்படாது. சிலரிடம் நோயறிகுறிகள் தென்படும். இந்நோய் அறிகுறிகளைக் கொண்ட நபர்களுள் பெரும்பாலானவர்களிடம் சாதாரண வைரஸ் காய்ச்சல் நிலைமையை அவதானிக்கலாம். ஆனால் காய்ச்சல் அல்லது அசாதாரண நோய் அறிகுறிகளுடன் கூடிய டெங்கு குருதிப்பெருக்கு நிலைமை கூட ஏற்படலாம். இந்நோய் நிலை மிக அரிதாகவே தோற்றம் பெறும்.

டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ள ஒருவருக்கு கடுமையான காய்ச்சல், கடும் தலைவலி, பின்புறக் கண்களில் வலி, மூட்டுக்களிலும் தசைகளிலும் வலி போன்றவாறான அறிகுறிகள் பெரும்பாலும் வெளிப்படலாம். சில நோயாளர்களுக்கு சிவப்பு நிறப் புள்ளிகள், கொப்புளங்கள் வெளிப்படும். சில வேளைகளில் முரசு, மூக்கு என்பவற்றின் ஊடாகவும் சளி மற்றும் தோல் ஊடாகவும் குருதிக் கசிவும் ஏற்படலாம்.

அதேநேரம் இருமல், தடிமன் மற்றும் தொண்டை வலி போன்ற மூச்சுக் குழலை அண்மித்த நோய் அறிகுறிகளுடன் கூடிய மலச்சிக்கல், வயிற்றோட்டம், வாந்தி, இடைக்கிடை ஏற்படும் வயிற்று வலி போன்ற உணவுக்குழாய் சார்ந்த நோய் அறிகுறிகளுடன் டெங்கு நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வரவும் கூடும்.

அதேநேரம் டெங்கு குருதிப்பெருக்கானது டெங்கு தொற்றின் உச்சக் கட்ட நோய் நிலையாகும். இந்நிலை மிகச் சிறியளவிலானோருக்கே ஏற்படும். இந்நிலைமையின் போது தெளிவான வித்தியாசங்களை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ளவரிடம் காய்ச்சல் குறைகின்ற வேளையில் கட்டாயம் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளத் தவறக்கூடாது. தொடர்ச்சியாக வாந்தியெடுத்தல், வயிற்று வலி, கடுமையான தாகம், கடுமையான தூக்கம், மயக்க நிலைமை, உணவு மீதுள்ள வெறுப்பு, கைகால்களில் குருதியற்ற மற்றும் குளிரான தன்மை, அமைதியின்மை, குழப்ப நிலைமை, தோலின் நிறம் மாற்றமடைதல், சிறுநீர் வெளியேறாமை, குறைவாக சிறுநீர் வெளியேறல், நடத்தையில் மாற்றம், மயக்கம், இழிவான வார்த்தைப் பிரயோகம் போன்றவாறான அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக கடுமையான காய்ச்சலுடன் கூடிய ஒரு நோயாளியின் முகம் மற்றும் கைகால்களில் சிவப்பு நிறத்தில் பரவிய தழும்களுடன் கூடிய தன்மையில் காணப்படல், வெண்குருதி சிறுதுணிக்கைகளின் அளவு குறைவடைதல், விசேடமாக காய்ச்சல் இன்றி, கைகால்கள் குளிராகவும், இதயத் துடிப்பு வேகமாகவும், நாடித் துடிப்பு மற்றும் குறைவான இரத்த அமுக்கத்துடன் காணப்படுமாயின் அது டெங்கு அதிர்ச்சி நிலையாகக் கூட இருக்கலாம். அது ஆபத்து மிக்க கட்டமாகும்.

அதன் காரணத்தினால் டெங்கு நோயைத் தவிர்த்துக்கொள்வதில் அல்லது ஆரம்ப கட்டத்திலேயே குணப்படுத்திக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதன் ஊடாக இந்நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளலாம். அப்போது இந்நோயின் சிக்கலானதும் குணப்படுத்த முடியாததுமான நிலைமையைப் பெரிதும் தவிர்த்து ஆரோக்கயத்தைப் பேணிக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.





# யாழில் குழந்தை உயிரிழப்பு

*யாழ்.விசேட நிருபர்*

தாய்ப்பால் குடித்து விட்டு உறங்கிய பெண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த சுலக்சன் ரேணுகா எனும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. குழந்தையின் தாயார் காலை குழந்தைக்கு பால் கொடுத்து உறங்க வைத்த பின்னர் நீண்டநேரமாக குழந்தை எழும்பாமையால், குழந்தையை தாயார் சென்று பார்த்த வேளை குழந்தை அசைவின்றி இருந்துள்ளது. அதனையடுத்து குழந்தையை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை, குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.


## மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை

பான் ஏஷியா வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் அடகு மற்றும் ஈடு வைக்கப்பட்டவையும் 31.10.2022 ஆம் திகதி அல்லது அதற்கு முன் மீட்கப்பட வேண்டியவையும் ஆனால் 10.02.2023 ஆம் திகதி மீட்கப்படாமலிருப்பவையுமான அனைத்துத் தங்க ஆபரணங்களும் 11.02.2023 ஆம் திகதி தொடக்கம் மு.ப.9.00 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை மூலம் (கையிருப்பு உள்ளவரை) விற்பனை செய்யப்படும்.

**நீர்கொழும்பு கிளை**
இல.199, புனித ஜோசப் வீதி, நீர்கொழும்பு.

ஏலவிற்பனையை பிற்போடும் மற்றும் இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

**பான் ஏஷியா வங்கி**
**உன்னதமான உள்நாட்டு வங்கி**

உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாட்டு மற்றும் நிர்வாகம்)
இல.450, காலி வீதி, கொழும்பு - 03.


# வடக்கின் உதயம்



யாழ்ப்பாண மாவட்ட செயலாளராக அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நேற்று புதன்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று காலை 10 மணிக்கு இடம்பெற்ற விசேட நிகழ்வில் பதில் மாவட்ட செயலாளர் ம.பிரதீபனிடமிருந்து தனது கடமைகளை புதிதாக நியமனம் பெற்ற மாவட்ட செயலாளர் பொறுப்பேற்றார். இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், வடமாகாண விவசாய அமைச்சு அலுவலக உத்தியோகத்தர்கள் பிரதேச செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்: பருத்தித்துறை விசேட நிருபர்)

# கைதடியில் பொங்கல் விழா



கைதடி கிழக்கு சனசமூக நிலையமும் இந்து வாலிபர் சங்கமும் இணைந்து நடாத்திய தைப்பொங்கல் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைதடி கிழக்கு சனசமூக நிலைய முன்றிலில் இ. விசிதரன் தலைமையில் நடைபெற்றது.

கைதடி வீரகத்தி பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ. புஷ்பராஜ குருக்கள் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் சந்திரமௌளீசன் லலீசனும் சிறப்பு விருந்தினராக கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் ந. ஜெயரூபனும் கௌரவ விருந்தினராக கைதடியூர் தொழிலதிபர் க.சசிகுமார் மற்றும் சனசமூக நிலைய போஷகர் சே. செல்லத்துரை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பொங்கலை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து இசைச் சங்கமம் என்ற இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.


SLAB SRI LANKA ACCREDITATION BOARD

## இலங்கை தர நிர்ணய சபை

### வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## வெற்றிடங்கள்

இணக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தர நிர்ணய சபை (SLAB) இன் பின்வரும் பதவிகளுக்கு இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை தர நிர்ணய சபை என்பது 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கைக்கான தேசிய அங்கீகார அதிகார சபையாகும். மேலும் இது ஆய்வுகள் / அளவுத்திருத்த ஆய்வகங்கள், மருத்துவ ஆய்வகங்கள், (ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சான்றிதழ்களை சரிபார்த்தல் மற்றும் துல்லியத்தன்மை) என்பவற்றிற்கு பொறுப்பானதாகும். வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் கீழ் தற்போது செயல்படுவதுடன், SLAB ஆல் இயக்கப்படும் அங்கீகார திட்டங்களுக்காக IAF MLA மற்றும் ILAC MRA ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### உதவி பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (நிர்ணயம்) - வெற்றிடம் 01

**தகைமைகள் :**

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற கணக்கியல் அல்லது நிதிப்பிரிவில் கணக்கியல் / நிதி / வியாபார நிர்வாகம். முகாமைத்துவம் / வணிகம் / வணிக நிர்வாகம் (சிறப்பு) இல் பட்டம் பெற்றிருத்தல்

மற்றும்

முதல்நிலை பட்டம் பெற்ற பின்னர் அரச துறை / கூட்டுத்தாபனம் / ஆணைக்குழு அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் குறித்த பதவிக்கு தொடர்புடைய பதவியில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட தகுதி அனுபவம்.

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (1 அல்லது 2)**

1. மேலே உள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான அனைத்து தகுதிகளையையும் பெற்றிருத்தல்.
2. கனிஷ்ட முகாமையாளர் (JM 1-1) பிரிவில், பதவிக்கு தொடர்புடைய பிரிவில் ஒரு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல்.

**சம்பள குறியீடு மற்றும் மாத சம்பள அளவு :**

**MM 1-1 – 2016 - ரூ. 53,175 - 10x1,375 – 15 x 1,910 = 95,575/-**

**நியமனத்தின்போது அடிப்படைச் சம்பள அளவு : ரூ. 53,175/-**

**வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 22 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

**உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் இரண்டாம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை :**

எழுத்து மூல பரீட்சை மற்றும் / அல்லது நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வுகள் நடைபெறும்

### தொழில்நுட்ப அதிகாரி (IT) - வெற்றிடமி 01

**தகைமைகள் :**

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்: (1 அல்லது 2 அல்லது 3)**

1. பல்கலைகழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் தகவல் தொழில்நுட்பத்தில் இளங்கலை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தரநிலை 6 ஐ விட குறையாத நிபுணத்துவ சான்றிதழைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   தகைமையினை பெற்ற பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / வாரியம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் தகவல் தொழிநுட்ப துறையில் (IT) குறைந்த பட்சம் ஐந்து வருட (05) அனுபவத்தை பெற்ற தகுதியினை கொண்டிருக்க வேண்டும்.
3. தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தில் NVQ தரநிலை 5 ஐ விட குறையாத நிபுணத்துவ சான்றிதளை பெற்றிருத்தல்.

   மற்றும்

   அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / வாரியம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் தகவல் தொழிநுட்ப துறையில் (IT) குறைந்த பட்சம் பத்து வருட (10) அனுபவத்தை பெற்ற தகுதியினை கொண்டிருக்க வேண்டும்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

மேலே புற விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பள குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவு :**

**JM 1-1 – 2016 – ரூ. 42 600 – 775 x 10 –1135 x 18 – 70,580/-**

**நியமனத்தின்போது ஆரம்ப சம்பள அளவு : ரூ. 42,600/-**

**வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 22 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

**உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் இரண்டாம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை :** எழுத்து மூல பரீட்சை மற்றும் / அல்லது நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வுகள் நடைபெறும்.

### கணக்கு அதிகாரி – வெற்றிடம் 01

**தகைமைகள் :**

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற கணக்கு / நிதி / முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் பட்டம் பெற்றிருத்தல்.
2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தின் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

1. மேலே உள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றிருத்தல்.

   அல்லது
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் அல்லாத (MA 1-2) II பிரிவில், பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல்.

**சம்பள குறியீடு மற்றும் மாத சம்பள அளவு : JM 1-1 – 2016 – ரூ. 42 600 – 775 x 10 –1135 x 18 = 70 580/-**

**நியமனத்தின்போது ஆரம்ப சம்பள அளவு : ரூ. 42,600/-**

**வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 22 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

**உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் இரண்டாம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்வாரி விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை :**

எழுத்து மூல பரீட்சை மற்றும் / அல்லது நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வுகள் நடைபெறும்.

**ஏனையவை :**

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும். பிற நன்மைகள் ஊழியர் சேமலாப நிதியம் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 3% பங்களிப்பு வழங்கப்படும்.

**அனைத்து விண்ணபத்தாரர்களும் :**

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- பதவியின் கடமைகளை நன்கு நிறைவேற்றவும், நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றவும் கூடிய உடல் மற்றும் மனரீதியான திடகாத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- நேர்மையான ஒழுக்காற்றுத் தன்மையை கொண்டவராக இருத்தல் வேண்டும்

**விண்ணப்பிக்கும் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் எமது அதிகாரப்பூர்வ வலைத்தளமான **www.slab.lk** மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும், நிகழ்நிலை மூலம் விண்ணப்பித்த பின்னர் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2023.02.07** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த கல்விச்சான்றிதழ்களின் நகல் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலமாக பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் விணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். நிகழ்நிலையில் விண்ணப்பிக்கப்பட்ட, மற்றும் இன்னும் பதிவிறக்கம் செய்யப்படாத மற்றும் கணினியில் அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் எவ்வித முன் அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

தலைவர்
**இணக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தர நிர்ணய சபை,**
இல - 104/ஏ, கித்துல்வத்த வீதி,
பொரளை.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏல விற்பனை அறிவித்தல்
## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

1. கடன் வசதி தொடர்பு இல : 81721543 மற்றும் உத்தரவாதக் கடிதம் இல : L/C 11/2018

நீர்கொழும்பு பிட்டிபன தெற்கு, இல.957/1 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.சமிந்த பிரியலால் ஹெட்டி ஆரச்சி ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2120 ஆம் இலக்க 08.04.2019ஆம் திகதிய வர்த்தமானியிலும் 18.04.2019ஆம் திகதி தினமின, தினகரன், மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 18.02.2023 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.


**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் நீர்கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் நீர்கொழும்பு பிரதேச செயலகப்பிரிவில் முன்னக்கரய வடக்கு 156A இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் (எனினும் தோப்புவ இல. 65A என பதிவு செய்த) வோர்ட் இல. 2ல் காம்புவ கிராமத்தில் அமைந்த பிரதான வீதி, வரிமதிப்பு இல. 20 மற்றும் 22ஐக் கொண்ட ‘கம்புவே வத்த’ என அழைக்கும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ.டீ.என்.பீரிஸ் தயாரித்த 15.08.2016ல் புறக்குறிப்பிட்ட 27.07.1991 திகதியிட்ட வரைபடம் இல. 114ல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணத்துண்டு வடக்கில் பிரதான வீதியும், கிழக்கில் வயலற் பீ ரணசிங்ஹவின் காணியும், தெற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ.டீ.என்.பீரிஸ் தயாரித்த வரைபடம் இல. 114ல் துண்டு 3ம், மேற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ.டீ.என். பீரிஸ் தயாரித்த மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 114ல் துண்டு 1ம் எல்லைகளாகக் கொண்டு ஆறு தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே06.20) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் G155/38ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**திருமதி டப்ளியு.கே.வீ.என்.பெர்ணாண்டோ**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**வைக்கால்**




NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

# பெறுகை அறிவித்தல்

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் வீரவில பண்ணையில் விலங்குணவு பொதியிடல் பிரிவிற்கு 450 மெற்றிக் தொன் சோளத்தை கொள்வனவு செய்வதற்காக விலைமனு கோரல்

**விலைக்கோரல் குறிப்பிலக்கம்: 928/maize/ 2023 –**

**இறுதித் திகதி 2023-02-09ஆம் திகதி பி.ப. 2.30 மணி**

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குரித்தான வீரவில பண்ணையில் விலங்குணவு பொதியிடல் பிரிவிற்குத் தேவையான 450 மெ.தொ. சோளத்தை கொள்வனவு செய்வதற்காக கொழும்பு-05. நாவல வீதி, நாராஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் தலைவரினால் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | February QTY (MT) | March QTY (MT) | April QTY (MT) |
|---|---|---|---|
| 1st Week | 37.5 | 37.5 | 37.5 |
| 2nd Week | 37.5 | 37.5 | 37.5 |
| 3rd Week | 37.5 | 37.5 | 37.5 |
| 4th Week | 37.5 | 37.5 | 37.5 |
| Total | 150 | 150 | 150 |

இந்தப் பெறுகைக்கான விலைமனுப் படிவங்களை சாதாரண கடமை நேரங்களில் கொழும்பு-05, நாவல வீதி, நாராஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் வழங்கல் பிரிவிலிருந்து 2023-02-08ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். ஒரு விலைமனுப் படிவத்திற்கு 10,000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத வைப்பொன்று அறவிடப்படும் என்பதுடன் அப்பணத்தை கணக்காளரிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.

2023-02-09ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும் என்பதுடன் அந்நேரத்திற்கு பின் கொழும்பு-05, நாவல வீதி, நாராஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் தமது ஆளடையாளத்தைச் சமர்ப்பித்து கலந்துகொள்ளலாம். இயைபுடைய ஒவ்வொரு விலைமனுவையும் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்கு வீரவில பண்ணையின் விலங்குணவு பொதியிடல் பிரிவிற்கு 450 மெ.தொ. சோளத்தை வழங்குதல்’’ எனத் தெளிவாகக் குறிப்பிட்டு, மேற்குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கீழ்க் குறிப்பிடப்பட்டவருக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இது தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவையாயின் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள வழங்கல் பிரிவிற்கு வேண்டுகோள் கடிதம் ஒன்றின் மூலம் அல்லது தொலைபேசியில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,**
**இல. 40, நாவல வீதி, நாரஹென்பிட்டி,**
**கொழும்பு 05.**
**தொலைபேசி இல. 011 2501701/2**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# கீழ் விளையாட்டு மைதானத்திலுள்ள கையிருப்பு குவியல் மண்ணை விற்பதற்காக விலைமனுக்களை அழைத்தல்

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கையிருப்பு குவியல் மண்ணை விற்பதற்கும் கீழ் விளையாட்டு மைதானத்தை மட்டமாக்குவதற்குமாக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைமனு ஆவணங்களை வேலை நாட்களில் சாதாரண வேலை நேரங்களில் வேலைகளுக்கான பொறியியலாளரின் அலுவலகத்தில் பரீட்சிக்கலாம்.
3. 2023 சனவரி 19 ஆம் திகதியிலிருந்து 2023 பெப்ரவரி 02 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக காணி, கட்டிடம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவின் வேலைகளுக்கான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது பல்கலைக்கழக சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
4. 2023 பெப்ரவரி 02 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக காணி, கட்டிடம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்தல், கொள்வனவு செய்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கான முகவரி பின்வருமாறு:

**காணி, கட்டிடம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொட.**
**தொலைபேசி: 011-2881760, 011-2801185**

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில,**
**நுகேகொட.**

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

## சுத்திகரிப்புச் சேவைகள் நடாத்திக் கொண்டு செல்வதற்கான கேள்வி கோரல் - 2023/2024

**ஒப்பந்த இலக்கம்: IR/PAM/22/2022-2023**

- கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் 17 மாடிகளைக் கொண்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடம்
- கொழும்பு-2, பாலதக்ஷ புதிய கட்டிடம்
- நவம் மாவத்தை, 100ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இரண்டு மாடிகளைக் கொண்ட உள்நாட்டு இறைவரி நவம் மாவத்தை பிரதேச அலுவலக கட்டிட இடப்பரப்பு
- ஜாவத்த (கொழும்பு நகர) பிரதேச அலுவலகம்
- இல. 533, விஜேராம மாவத்தை சந்தி, கங்கொடவில, நுகேகொடயில் அமைந்துள்ள மஹரகம நகர அலுவலகம்,
- இல. 714, வக்வெல்ல வீதி, காலியில் அமைந்துள்ள 04 மாடிகளைக் கொண்ட பிரதேச அலுவலகக் கட்டிடம்
- மாத்தறை 03 மாடிகளைக் கொண்ட பிரதேச அலுவலகம்
- கம்பஹா 03 மாடிகளைக் கொண்ட பிரதேச அலுவலகம்
- குருநாகல் பிரதேச அலுவலகம் மற்றும் தரவு திருத்தங்கள் நிலையம்
- கண்டி பிரதேச அலுவலகம்
- நீாகொழும்பு பிரதேச அலுவலகம்
- இரத்தினபுரி பிரதேச அலுவலகம்
- யாழ்ப்பாண பிரதேச அலுவலகம்
- நுவரெலியா பிரதேச அலுவலகம் மற்றும் நுவரெலியா சுற்றுலா பங்களா
- மாபிட்டிய, கேகாலை பிரதேச அலுவலகம்
- இல. 42, குருநாகல் வீதியில் அமைந்துள்ள தம்புள்ள பிரதேச அலுவலகம்
- இல. 17, உதயராஜ மாவத்தையில் அமைந்துள்ள பதுளை பிரதேச அலுவலகம்
- வங்கி பிளேஸ் அநுராதபுரம் பிரதேச அலுவலகம்,
- இல. 275, பவுன்டரி வீதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு பிரதேச அலுவலகம்
- களுத்துறை தெற்கில் அமைந்துள்ள களுத்துறை பிரதேச அலுவலகம் மற்றும்
- நாராஹென்னபிட்டி மெஹெவெர பியஸயில் அமைந்துள்ள அலுவலகங்களுக்கு 2023-03-01ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு சுத்திகரிப்புச் சேவைகள் நடாத்திக் கொண்டு செல்வதற்காக கீழ்க் காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்களிடமிருந்து மட்டும் கொழும்பு 02, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2023-02-09ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

01. I. வியாபாரப் பெயர் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல்.
    II. அரசாங்கத் துறையில் / தனியார் துறையில் ஆகக் குறைந்தது 05 வருட திருப்திகரமான அனுபவம் இயைபுடைய துறையில் இருத்தல். (ஆகக் குறைந்தது 20 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தி உள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும்.)
    III. ஆகக் குறைந்தது 75 ஊழியர்களைக் கொண்ட பணியாட்கள் குழுவொன்று இருத்தல். (கடந்த 12 மாதங்களில் அவர்கள் சார்பாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தப்படும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். (ஈ.பீ.எப்., AR ‘B’ படிவம்)
    IV. சுத்திகரிப்புக்காக பயன்படுத்தப்படும் மின்சார மற்றும் ஏனைய உபகரணங்கள் (தரை மெருகூட்டும் கருவி, தூசு அகற்றும் இயந்திரம் ஆகியன) நிறுவனத்திற்கு உரியதாக இருத்தல்.
    V. (கவனிக்கவும்: விண்ணப்பப் படிவத்துடன் மேலே இலக்கம் I தொடக்கம் IV வரை தகுதிகள் காண்பிக்கப்படும் உரித்துடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)
02. 2023-01-19ஆம் திகதி தொடக்கம் 2023-02-08ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 மணி வரை கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடத்தின் 15ஆவது மாடியில் பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவில் இருந்து உரித்துடைய கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. 2023-02-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் ஆணையாளர் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) அவர்களிடம் கேள்விதாரரின் கடிதத் தலைப்பொன்றில் எழுத்து மூலம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளப்படும் மாதிரிப் படிவத்தில் மட்டும் கேள்விகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அந்த மாதிரிப்படிவங்கள் பெற்றுக் கொள்வதற்காக மீளச் செலுத்தப்படாத 5000.00 ரூபாவை இந்தத் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவுக்குச் செலுத்திய பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விதாரர் தமது கேள்வியுடன் ரூபா 415,000.00 (நான்கு இலட்சத்து பதினையாயிரம்) பெறுமதியான இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கோரப்படும்போது செலுத்தப்படும் கேள்விப் பிணை முறி / வங்கிப் பிணை முறி அல்லது அந்தப் பெறுமதிக்கு மீளச் செலுத்தப்படும் கேள்வி வைப்புத் தொகையொன்றை “உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்” பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும்.
05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வி விண்ணப்பங்களை 2023-02-09ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தின் 15ஆம் மாடி பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘சுத்திகரிப்புச் சேவைகள் வழங்கல் - 2023/2024’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
06. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததும் உடனடியாக அதாவது 2023-02-09ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு உள்நாட்டு இறைவரி கட்டிடத்தின் 15ஆம் மாடியிலுள்ள பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ பிரிவில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதி கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.
07. மேலும் விபரங்கள் தேவையாயின் அந்த விபரங்களை இந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
08. தொலைபேசி இலக்கம்:

| | |
|---|---|
| ஆணையாளர் | - 011 2135461 |
| நிர்வாக உத்தியோகத்தர் | - 011 2135462 |
| பிரதான முகாமைத்துவ சேவை உதவியாளர் | - 011 2135345 |

**பாரிய அளவிலான பெறுகைக் குழுத் தலைவர்,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.**

## இலங்கை துறைமுக அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/6304(EL) | Spares for Speed Measuring Systems of Wartsila W20 Series Engines | 10,000.00 | 1,000.00 | 16-02-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6377(EL) | 02 Nos. of Terasaki 400A MCCB with Accessories | 20,000.00 | 1,000.00 | 16-02-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6404(EL) | 55M of Trailing Cable for Alimak Elevators of JCT Stage III & IV | 30,000.00 | 1,000.00 | 16-02-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/13/34 | Asphalt Concrete (Wearing Coarse ) – Ton 100 | 30,000.00 | 1,000.00 | 09-02-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/22/PT/08/029 | 20 Nos. 8” X 4” X 6 MM Steel Checker Plate | 15,000.00 | 1,000.00 | 09-02-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/07/057 | UD Nissan Engine Fitted with UD Nissan Prime Movers | 30,000.00 | 1,000.00 | 09-02-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஜனவரி 20ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண் : 2381652, 2470443**

# நூற்றாண்டு விழாக் காணும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

## ஜனாதிபதி பிரதம அதிதி இன்று BMICH இல் மாநாடு





[illegible]

**அரசியல் சார்பற்ற நிறுவனம்**

[illegible]



ஜம்இய்யத்துல் உலமா தலைவர்



ஜம்இய்யத்துல் உலமா செயலாளர்

**ஜம்இய்யாவின் சேவைகள்**

[illegible]



**மூலோபாய திட்டமிடல் மற்றும் கொள்கை வகுப்பு**

[illegible]

**நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு**


[illegible]

**உத்தியோகபூர்வ தொடர்பாடல்கள்**

ஜம்இய்யாவின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் உத்தியோகபூர்வ செயற்படும் செயலகம், உத்தியோகபூர்வ தொடர்பாடல்கள், சட்ட நடவடிக்கைகள், ஊடக விவகாரங்கள், மூலோபாய திட்டமிடல், நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் ஜம்இய்யாவுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளல் போன்ற செயலக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

**கிளைகள் மற்றும் அங்கத்துவம்**

கிளைகளின் தெரிவு மூன்று வருடத்திற்கொரு முறை நடைபெற்று புதிய பதவி தாங்குனர்கள் நியமிக்கப்படுகின்றனர்.



**உப குழுக்கள்**

ஜம்இய்யாவுக்கு பின்வரும் உப குழுக்கள் காணப்படுகின்றன:

ஆலிம்கள் விவகாரங்கள்
1. ஆலிம்கள் விவகாரக் குழு
2. சமூக சேவைகள் குழு

முஸ்லிம் சமூக விவகாரங்கள்
3. ஃபத்வாக் குழு
4. பிறைக் குழு
5. கல்வி, ஆய்வு மற்றும் வெளியீட்டுக் குழு
6. தஃவா மற்றும் தர்பிய்யாவுக்கான குழு
7. மகளிர் விவகாரக் குழு

பிரஜைகள் விவகாரங்கள்
8. ஒற்றுமைக்கும் ஒருங்கிணைப்புக்குமான குழு

★ ஆலிம்கள் விவகாரக் குழு

இக்குழு சமூகத்திற்குச் சேவையாற்றி வரும் மார்க்க அறிஞர்களின் நலன்கள் கிரகணங்களைப் பற்றிய விழிப்புணர்வும் அச்சந்தர்ப்பத்திற்கான வழிகாட்டல்களும் இப்பிரிவினூடாக வழங்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற பிறை மாதங்களை தீர்மானிப்பதற்கான முறைமைகளுக்கேற்ப நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள உப குழுக்களின் ஒத்துழைப்புடன் ஹிஜ்ரி மாதங்கள் முடிவு செய்யப்படுகின்றன. தலைப் பிறை தீர்மானம் சம்பந்தமான சர்ச்சைகளுக்கு தீர்வு காணும் பொறுப்பு கூட்டாகச் சென்று பிறை பார்க்கும் முறையை இக்குழு ஊக்குவித்து வருகிறது.

நூற்றாண்டு விழாக் காணும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கல்வி, ஆய்வு மற்றும் வெளியீட்டுக் குழு பல முக்கிய பங்களிப்புகளை நல்கி வருகிறது.

★ கல்வி, ஆய்வு மற்றும் வெளியீட்டுக் குழு

**கல்வி:** பெறுபேறுகள் மற்றும் ஒழுக்க நெறியில் முன்னேற்றம் தேவைப்படும் பாடசாலைகளை அடையாளங் கண்டு, விஞ்ஞான ரீதியாக ஆய்வுகளை இக்குழு மேற்கொள்கின்றது. பின்னர், பின்தங்கிய மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஆன்மீக மற்றும் கல்வி ரீதியான ஊக்கமளிக்கும் நிகழ்ச்சிகளையும் பயிற்சிகளையும் வழங்குகின்றது.

★ தஃவா மற்றும் தர்பிய்யாக் குழு

**பிரச்சாரம்:** இக்குழு மார்க்கத்தின் பெயரால் ஊடுருவும் பிழையான கொள்கைகள் மற்றும் அமைப்புக்கள் விடயத்தில் மக்களுக்கு வழிகாட்டுவதில் கவனம் செலுத்துகின்றது.

மஸ்ஜித் நிர்வாகங்களின் வேண்டுகோளுக்கிணங்க இமாம் மற்றும் முஅத்தின்களுக்கான பயிற்சிநெறிகளை நடாத்துதல், பிற சமூகங்களுடன் எவ்வாறு சகவாழ்வை மேற்கொள்ளுதல் ஆகிய வழிகாட்டல்களை இக்குழு வழங்குகின்றது.

★ இளைஞர் விவகாரம்:

இக்குழு சிறந்ததொரு இளைஞர் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு உழைக்கின்றது.

நவீன சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட, நாட்டுப் பற்று மற்றும் ஆன்மீக ரீதியில் மேம்பட்ட இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவதற்காக நாடு முழுவதும் உள்ள ஜம்இய்யாவின் பிரதேசக் கிளைகள் மூலம் பல திட்டங்கள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இக்குழு போதைப் பழக்கமுள்ள இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அரச ஒத்துழைப்புடன் ஆலோசனைகளை வழங்குகின்றது.

★ மகளிர் விவகாரக் குழு

மகளிர் விவகாரக் குழுவின் நோக்கம் பெண்களுக்குத் தேவையான மார்க்க விளக்கங்களை வழங்குவதோடு பொருத்தமான வழிகளில் சமூகத்திற்கு சேவை செய்வது பற்றிய வழிகாட்டல்களை அவர்களுக்கு வழங்குவதாகும். அத்துடன் இக்குழு பெண்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக ஜம்இய்யாவின் கிளைகள் ஊடாக நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிட்டுள்ளது.

★ ஒற்றுமைக்கும் ஒருங்கிணைப்புக்குமான குழு

இக்குழு மனிதாபிமான விழுமியங்களில் கவனம் செலுத்துகின்றது. இந்நாட்டில் முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர்களும் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக கடைபிடித்து வரும் ஒற்றுமை மற்றும் சகவாழ்வை வளர்ப்பதற்கு இக்குழு பாடுபடுகின்றது.

இஸ்லாமிய கொள்கைக்குட்பட்ட தஃவா அமைப்புக்கள், தரீக்காக்கள் போன்றவற்றிற்கிடையில் ஒருங்கிணைத்து சமூக ஒற்றுமையையும் இணக்கப்பாடையும் கட்டியெழுப்ப இக்குழு முயற்சிக்கின்றது. மேலும், முஸ்லிம்களுக்கும் ஏனைய சமூகங்களுக்குமிடையில் பரஸ்பர புரிந்துணர்வையும் சகவாழ்வையும் ஏற்படுத்த பல திட்டங்களை வகுத்து செயற்படுத்துகின்றது.

காலத்திற்கு காலம் எழும் குற்றச்சாட்டுகள் மற்றும் விமர்சனங்களுக்கு பதில் அளிக்கும் வகையில் பிரகடனங்கள் வெளியிடப்படுவதோடு மார்க்கம் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக பல்வேறு வெளியீடுகளும் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதில் ஒற்றுமை பிரகடனம், சகவாழ்வுப் பிரகடனம், ஐ.எஸ்.ஐ.எஸ். மற்றும் தீவிரவாதம் பற்றிய பிரகடனம், பிறைத் தீர்மானங்கள், இறுதி நபித்துவத்தைக் காப்பதற்கான மாநாட்டின் பிரகடனம், மனாகிபுஸ் ஸஹாபா மாநாட்டின் பிரகடனம் என்பன அடங்கும்.அத்தோடு இறுதி நபித்துவம் தொடர்பான நூல், இஸ்லாம் பற்றிய அச்சம் தொடர்பான விரிவான பார்வை, சமூக ஒற்றுமை காலத்தின் தேவை சன்மார்க்கக் கடமை, சிங்கள மொழி மூல அல் குர்ஆன் விளக்கவுரை, தீவிரவாதம் வேண்டாம், அல் குர்ஆனின் ஆயத்துக்கள் தொடர்பில் காணப்படும் பிழையான புரிதல்களுக்கும் இஸ்லாம் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கும் விளக்கமளிக்கும் நூல் போன்ற முக்கிய பல நூல்கள் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

ஆரம்ப காலங்களை போன்றல்லாது அண்மைய தசாப்தங்களாக ஜம்இய்யாவின் பணிகள் பல பரிமாணங்களைப் பெற்று வியாபித்துள்ளன. அது இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் நலன் சார்ந்த விடயங்களோடு நாடு, நாட்டு மக்கள், சர்வதேசம் சார்ந்த விவகாரங்களிலும் ஈடுபாடு காட்டி வருகின்றது. இதனால் இன்று ஜம்இய்யாவின் முக்கியத்துவம் தேசத்திலும் சர்வதேசத்திலும் உணரப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இத்தனை செயற்பாடுகளும்; கூட்டு முயற்சி என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

காலத்துக்குக் காலம் பல்வேறு சவால்களையும் நெருக்கடிகளையும் சந்தித்து வரும் முஸ்லிம் சமூகத்தின் மேம்பாட்டுக்காக மாத்திரமன்றி தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம், இலங்கையர் என்ற தனித்துவம் என்பவற்றை ஏற்படுத்தவும் முன்னரைவிட உத்வேகத்துடன் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

> " இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் போதனைகளின் அடிப்படையில் வாழுகின்ற, தீனின் மேம்பாட்டிற்கும் சமூகத்தினதும் தேசத்தினதும் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கின்ற ஒரு கட்டுக்கோப்பான முன்மாதிரி முஸ்லிம் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் செயற்பட்டு வரும் உலமா சபை"

அறிக்கைகள் மற்றும் கடிதப் பரிமாற்றங்கள் ஆகியவை இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**சட்டம் மற்றும் ஆய்வு**

சட்ட விடயங்கள் மற்றும் ஆய்வு செயற்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. தேவைப்படும் போதெல்லாம், ஆலோசனை பெறுவதற்காக இப்பிரிவு சட்ட ஆலோசகர்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்கின்றது.

**ஜம்இய்யாவுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகளை வலுப்படுத்தல்**

சமூகத்திற்கும் நமது தாய்நாட்டிற்கும் பயனளிக்கும் வகையில் ஜம்இய்யாவுடன் சம்பந்தப்பட்ட முக்கிய நபர்களுடனும் அமைப்புக்களுடனும் உறவைக் கட்டியெழுப்புவதிலும் வளர்ப்பதிலும் இப்பிரிவு கவனம் செலுத்துகின்றது.

**ஊடகம்**

இஸ்லாமியப் போதனைகள் குறித்து முஸ்லிம்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதே வேளையில் ஊடக வெளியீடுகள் மூலம் தேசிய மற்றும் அன்றாட விவகாரங்களில் ஜம்இய்யாவின் நிலைப்பாட்டை மக்கள் மயப்படுத்தும் முக்கிய குறிக்கோளுடன் இப்பிரிவு நிறுவப்பட்டுள்ளது. மேலும் இப்பிரிவு ஜம்இய்யாவின் செயற்பாடுகள் மற்றும் சேவைகளை பல்வேறு வழிமுறைகள் மூலம் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது.

**கிளைகள் மற்றும் அங்கத்துவம்**

கிளைகளின் தெரிவு மூன்று வருடத்திற்கொரு

விடயத்தில் கூடிய கவனம் செலுத்துகின்றது.

★ சமூக சேவைகள் குழு

ஜம்இய்யாவின் சமூக சேவைக் குழு நிவாரண உதவிகள், சமூக சேவைகள் மற்றும் உளவள ஆலோசனை வழங்குதல் ஆகிய பகுதிகளில் கவனம் செலுத்துகின்றது. இக்குழு அனர்த்த முகாமைத்துவம், புனர்வாழ்வு போன்ற விடயங்களில் ஆலிம்களுக்கான பயிற்சிகளை ஜம்இய்யாவின் கிளைகள் ஊடாக வழங்க ஏற்பாடு செய்து வருகின்றது. முஸ்லிம்களுக்கு மாத்திரமின்றி மாற்று மதச் சகோதரர்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில் தன்னாலான உதவிகளை இக்குழு செய்து வருகின்றது.

★ ஃபத்வாக் குழு

அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மார்க்க வழிகாட்டல்களை வழங்கும் அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனமாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா இயங்கி வருகின்றது. வேறுபட்ட சிந்தனைகளைக் கொண்ட உலமாக்களிடையே கருத்தொற்றுமையை ஏற்படுத்தி மார்க்க வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் இப்பிரிவு செயற்பட்டு வருகின்றது.

★ பிறைக் குழு

இஸ்லாமிய வழிகாட்டலுக்கமைய முக்கிய நிகழ்வுகளையும் நேரங்களையும் நிர்ணயிப்பதற்கு ஹிஜ்ரி கலண்டர் இன்றியமையாததாகும். ஹிஜ்ரி மாதங்களை நிர்ணயித்தல், தொழுகை நேரத்தை நிர்ணயித்தல் மற்றும் துல்லியமான கிப்லாவை அடையாளப்படுத்தல் ஆகிய பணிகளை இக்குழு மேற்கொண்டு வருகின்றது. சூரிய மற்றும் சந்திர

தயாரிப்பு உதவி
அஜ்வாத் பாஸி

எம்.எஸ்.பாஹிம்

---

## அஸ்கிரி பீட மகாநாயக்க தேரரின் வாழ்த்துச் செய்தி



பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெறும் போராட்டத்தில் சிங்கள பௌத்த சுதந்திரப் போராளிகளுடன் முஸ்லிம் இனத்தவர்களும் பங்காற்றினார்கள். டீ.பீ. ஜாயா, எம்.சீ. சித்திலெப்பை போன்றவர்கள் அதில் முக்கியமானவர்கள்.

பல்லின மக்கள் வாழும் நாடுகளில் இன,மத மோதல்களை உருவாக்கும் குழுக்கள் இருக்கவே செய்யும். தங்களது மதம் மட்டுமே வளர வேண்டும் என என எந்த மதமும் வலியுறுத்தவில்லை. மதத்தின் பெயரால் கொலை செய்யுமாறு எந்த மதமும் போதிக்கவில்லை. அதனை நன்கு உணர்ந்து உலமா சபை செயற்பட்டு வருகிறது. தனது 100 ஆவது வருட நிறைவை கொண்டாடும் இந்த அமைப்பு அதனை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது. இலங்கை என்ற தனித்துவம் மற்றும் நல்லிணக்கத்திற்கான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதாக அறிகிறோம். அது தொடர்பில் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.உலமா சபையின் செயற்பாடுகள் வெற்றியளிக்கவும் நாட்டில் இன மத ஒற்றுமை வளரவும் பிரார்த்திக்கிறேன்.

**வன.வரகாகொட தம்மசித்தி ஸ்ரீ பஞ்ஞானந்த ஞானரத்ன தேரர்**
**அஸ்கிரி பீட மகாநாயக்க தேரர்**

## உலமா சபை இன ஒற்றுமைக்கு வழங்கும் பங்கு மகத்தானது

### வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு சமய மற்றும் சமூகத் தலைமைத்துவத்தை வழங்கும் முஸ்லிங்களின் உயர்மட்ட அமைப்பான அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா நாட்டில் கடந்த நூறு வருடங்களாக சேவையாற்றி வருகின்றது. தேசத்திற்குச் சேவை செய்வதன் மிக உயர்ந்த விழுமியங்களுக்கு அர்ப்பணிப்புடன் பங்காற்றும் இந்த அமைப்பு நாட்டின் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியிருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் இந்த வரலாற்று சிறப்புமிக்க 100வது ஆண்டு விழாவில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தேகத்திற்கு இடமின்றி, உலமா சபையானது அதன் வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளது. இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் முஸ்லிம் சகோதரத்துவத்திற்கு ஆன்மீக, நெறிமுறை மற்றும் தார்மீக வழிகாட்டுதலை வழங்குவதன் மூலம் சமூகத்தின் இன்றியமையாத நிறுவனமாக இது அமைந்துள்ளது. நாட்டில் உள்ள அனைத்து இனத்தவர்களுடனும் ஒற்றுமையை வளர்க்கும் அதே வேளையில், சமூகம் மற்றும் தேசத்தின் கல்வி, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார அம்சங்களை மேம்படுத்துவதில் உலமா சபையின் பங்களிப்பு மிகவும் மதிப்புமிக்கது. தனது எதிர்கால முயற்சிகள் அனைத்திலும் வெற்றியைத் தொடர வாழ்த்துகிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையரிடையே ஒற்றுமையை நிலைநாட்டவும் அளப்பரிய சேவை

### வாழ்த்துச் செய்தியில் பிரதமர்



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் (ACJU) 100வது ஆண்டு விழாவை முன்னிட்டு வாழ்த்து தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இஸ்லாமிய மார்க்கக் கல்விமான்களை உள்ளடக்கிய அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையானது தமது இனத்துக்கு மட்டுமன்றி பன்முகத்தன்மைக் கொண்ட இலங்கை சமூகத்தினரிடையே ஒற்றுமையை நிலைநாட்டவும் அளப்பரிய சேவை ஆற்றியுள்ளது.

முஸ்லிம் இனமானது இலங்கை சமூகத்தின் கட்டமைப்பில் மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்களுடைய சமய நம்பிக்கை, வாழ்க்கை முறை மற்றும் கலாசாரம் அது போன்றே கலை, பாரம்பரியம் ஆகியன இலங்கை சமூகத்தை வளப்படுத்தியுள்ளன.

முஸ்லிம் சமய மற்றும் அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், தொழில்துறைசார்ந்தோர் கடந்த காலங்களில் நாட்டுக்கும் மக்களுக்கும் நிலையான பங்களிப்பை வழங்கியுள்ளதுடன் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த மக்களது பாராட்டுக்களையும் பெற்றுள்ளனர்.

நூற்றாண்டைக் கொண்டாடும் ஜம்மியத்துல் உலமா சபைக்கு வாழ்த்து தெரிவிக்கும் அதேநேரம், இலங்கையர்களாக தொடர்ந்து ஒற்றுமையைக் கடைபிடித்து, தாய்நாட்டுக்கு கணிசமான பங்களிப்பை வழங்குவதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் உன்னத பாரம்பரியங்களை வளப்படுத்துமாறு கல்விமான்களைக் கொண்ட இந்த அமைப்பிலுள்ள தலைவர்களை கேட்டுக்கொள்கின்றேன் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

## கலாச்சார, சமய விவகார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



மத அமைப்பொன்றை 100 வருடங்கள் நடத்துவது இலகுவான காரியமல்ல. மத விடயங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் சமூக நலன்புரி பணிகளையும் உலமா சபை முன்னெடுத்து வருகிறது.

அனைவருக்கும் கல்வி எனும் திட்டத்தின் ஊடாக கல்விக் கண்ணை திறக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவது வரவேற்கத்தக்கது. தாய்நாட்டின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் வேரூண்ட வைப்பதும் உலமா சபையின் முக்கிய பொறுப்பாக முன்னெடுப்பதையும் வரவேற்கிறோம்.

**அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க**
**(கலாச்சார மற்றும் சமய விவகார அமைச்சர்)**

## நூற்றாண்டுப் பணிகள் நூறொளியாக வரலாற்றுக்கு வெளிச்சமூட்டட்டும்.



இலங்கை முஸ்லிம்களின் கண்ணியத்துக்குரிய சபையான அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, நூற்றாண்டில் கால்பதிப்பதை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இதன், நூற்றாண்டு கால சாதனைகள் தொடர்வதை நான் மட்டுமின்றி, இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவரும் விரும்புவதோடு எமது சமூகம் எதிர்நோக்குகின்ற பல்வேறு சவால்களில் இருந்தும் வெற்றிகொள்ள பிரார்த்திக்கின்றேன்.

ஹிஜ்ரி 1343 ஆம் ஆண்டு (1924) ஆரம்பமான கண்ணியமிக்க இந்த உலமா சபை, ஆத்மீக அடித்தளத்தில் இயங்கினாலும், பல்வேறு மனிதாபிமான விடயங்களில் பங்களிப்பு செய்து வருவதை இதன் செயற்பாடுகள் உணர்த்தி நிற்கின்றன.

ஜம்இய்யத்துல் உலமா இன்று பிறைக்குழு, ஃபத்வாக்குழு, தர்பிய்யாக் குழு, கல்வி ஆய்வுக்குழு மற்றும் மகளிர் விவகார சமூக சேவைகள் என்று இன்னும் பல குழுக்களினூடாக தனது பணிகளை திறம்பட மேற்கொண்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

**ஸெய்னுலாப்தீன் நஸீர் அஹமட் ,**
**சுற்றாடல் அமைச்சர்.**

## பேராயர் மெல்கம் ரஞ்சித் அவர்களின் வாழ்த்து



### உலமா சபை போன்ற அமைப்பு இருப்பது நாட்டுக்கு முக்கியமானது

உலமா சபையின் 100 வருட பூர்த்தியை முன்னிட்டு முஸ்லிம் சமூகத்திற்கு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையிலான அந்நியோன்ய உறவு வலுப்படுத்தப்பட வேண்டிய காலப்பகுதியில் உலமா சபை போன்ற அமைப்பு இருப்பது நாட்டுக்கும் எதிர்காலத்திற்கும் சமாதானத்திற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் மிக முக்கியமானது. இன்றைய உலகில் மதமானது ஏனைய பணிகளில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இது சமூகத்தில் ஏற்பட்டுள்ள கவலைக்குரிய விடயமாகும். மதத்தினால் சமூகத்திற்கு முக்கிய பங்களிப்பு செய்ய முடியும். நல்லிணக்கம் ஏற்படுத்தி ஒன்றாக வாழும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.மனித வாழ்வில் நற்பண்புகளை ஏற்படுத்த வேண்டும். இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உலமா சபையினால் முக்கிய பங்காற்ற முடியும்.

**பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை**

## இந்து குருமார் அமைப்பு மனம் நிறைந்த வாழ்த்து

எமது நாட்டில் இருக்கும் சகோதர சமய, இன மக்களை நெறிப்படுத்தும் பிரதான ஓர் அமைப்பாக விளங்குவது அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையாகும். சமய தலைவர்களின் பங்கேற்புடன் கூடிய இச்சபை தற்சமயம் நூறு (100) வருடங்களை நிறைவு செய்து, மிகவும் சிறப்பாக தனது தலைமைத்துவ பாங்கினை தொடர்வது கண்டு மிக மகிழ்ச்சி அடைகிறோம்.

சமயங்கள் அனைத்தும் வாழ்வியலை போதித்து நிற்கின்றன. வாழ்க்கையே சமயம். சமயமே வாழ்க்கை. அன்புடன், அறநெறியுடன், பற்றுடன், இன ஐக்கியப் பாட்டுடன், நிதானம், பொறுமை, சகிப்புத்தன்மை, அமைதியுடன், தர்மநெறி தவறாமல் வாழ்க்கையை அமைத்து செல்ல வேண்டும். தூய எண்ணத்துடன் இவை அனைத்தினையும் மக்களுக்கு இயன்றளவில் போதித்து வழிகாட்டியாக தலைமைப்பொறுப்பு வகிபாகம் வகித்து வரும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையினதும், உறுப்பினர்கள் அனைவரினதும் நற்பணிகள் மேலும் மேன்மையான நிலை பெற வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளை வேண்டி பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்து சைவ மக்கள் சார்பில் இந்துக் குருமார் அமைப்பின் ஊடாக பகிர்ந்து கொள்கிறோம்.

**கலாநிதி சிவஸ்ரீ.**
**கு. வை. க. வைத்தீஸ்வர குருக்கள்,**
**தலைவர், இந்துக் குருமார் அமைப்பு,**
**சிவஸ்ரீ ச. சாந்தரூபக் குருக்கள்,**
**செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.**

## சமூகங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது



இலங்கை வாழ் முஸ்லிம்களை சன்மார்க்கத்தின் அடிப்படையில் நெறி ப்படுத்துவதோடு, நாட்டின் ஏனைய சமூகத்தினர் மத்தியிலும் நல்லிணக்கத்தை பேணி, பல தரப்பட்ட பணிகளை செவ்வனே ஆற்றிவரும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா ஆரம்பிக்கப்பட்டு, நூற்றாண்டுகளை கடந்து வெற்றி கரமாக பயணிப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கை பாராளுமன்றத்தினால் கூட்டிணைக்கப்பட்டுள்ள இவ் அமைப்பில் நாடளாவிய ரீதியில் எண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட உலமாப் பெருமக்கள் உறுப்பினர்களாக உள்ளனர். வேறுபட்ட சிந்தனைப் போக்குகளை கொண்ட உலமாக்கள் மத்தியில் கருத்தொற்றுமையை ஏற்படுத்தி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒற்றுமையை நிலை நாட்டுவதில் ஜம்இய்யத்துல் உலமா தொடர்ந்தும் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது.

அல்லாஹ்வினால் அருளப்பட்ட அல்குர்ஆன் மற்றும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிமுறை ஹதீஸ் ஆகியவற்றை முற்று முழுதாக அனுசரித்து, பல்வேறு துறைகளிலும் இவ் அமைப்பு ஆற்றிவருகின்ற பணிகள் அளப்பரியன.

**ரவூப் ஹக்கீம் பா .உ**
**தலைவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

## நூறு வருடங்கள் கடந்து பயணிக்கும் ஜம்இய்யா



நூறு வருடங்களை கடந்து பயணிக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுக்கு முதற்கண் எனது பிரார்த்தனைகளையும் வாழ்த்துகளையும் தெரி வித்துக் கொள்வதோடு அதனால் வெளியிடப்படும் நூற்றாண்டு சிறப்பு மலருக்கும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எமது நாட்டின் குறிப்பாக இலங்கை வாழ் முஸ்லிம்களின் மிகப் பெரும் சொத்தாகும். நூறு வருட தொண்மையான வரலாற்றைக் கொண்ட இச்சபை யா னது இஸ்லாமிய அடிப்படையிலானவை. தேசியம், நடுநிலைப் போக்கு, இணக்கப்பாடு, பன்மைத்துவம் ஆகிய பிரதான ஐந்து விழுமியங்களின் அடிப்படையில் இயங்கி வருகின்றது. சமூகத்தின் எல்லா தரப்பினரையும் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் ஆன்மிக ரீதியாக வழிகாட்டுதல்,

நல்லொழுக்கமும் பண்பாடுமுள்ள தனி மனிதர்களும் குடும்பங்களும் உருவாக உழைத்தல், உலமாக்களினதும் இஸ்லாமிய கல்வியினதும் மேம்பாட்டிற்கு உழைத்தல், சமூகத்தினதும் கல்வி சமூக, பொருளாதார கலாச்சார மேம்பாட்டிற்கு உழைத்தல், சமூக ஒற்றுமை க்காக உழைத்தல் மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பல் முதலிய உயர்ந்த குறிக்கோள்களை இலக்காகக் கொண்டு பல உப பி ரிவுகளுடன் தனது சேவைகளை ஜம்இய்யா முன்னெடுத்து வருகின்றது.மார்க்க விடயங்களில் மட்டுமன்றி முஸ்லிம்களின் கல்வி, கலாச்சார, சமூக பொருளாதார மேம்பாட்டுக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பாடுபட்டு வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரி யதாகும்.

**றிசாத் பதியுதீன் (பா .உ)**
**தலைவர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்**

## ஜம்இய்யதுல் உலமா முஸ்லிம் சமூகத்தை சீராக வழிநடாத்துகிறது



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டை நினைவு கூறும் முகமாக வெளியிடப்படும் இந்நினைவு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகிறேன்.

இலங்கை முஸ்லிம்களுக்கு மார்க்க ரீதியாக தலைமைத்துவம் வழங்கி வரும் ஓர் அமைப்பாக நான் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையை பார்க்கிறேன்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையில் முஸ்லிம் சமூகத்தை இஸ்லாமிய மார்க்க அடிப்படையின் கீழ் வழிநடத்தி வந்திருப்பது மட்டுமன்றி முஸ்லிம்களோடு தொடர்புபட்ட பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான பிரச்சினைகள் சவால்களுக்கும் முகம் கொடுத்து உரிய தீர்வுகளை பெற்றுக் கொள்வதிலும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை காத்திரமான பங்களிப்பை வழங்கியிருக்கிறது என நான் கருதுகிறேன்.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பே 1924 இல் தோற்றம் பெற்று தொலைநோக்கு கொண்டு முஸ்லிம் சமூகத்திற்கும் தேசத்திற்கும் பங்களிப்புச் செய்யும் வகையில் மார்க்கத்திற்கும் சமூகத்திற்கும் இந்நாட்டிற்கும் தமது இலக்குகள், குறிக்கோள்கள் மாறாது சேவையாற்றி இன்று நூற்றாண்டு நிகழ்வைக் கொண்டாடும் இவ்வேளையில் இவ் அறிஞர்கள் சபையின் எதிர்காலப் பணிகள் சிறக்க வாழ்த்துகிறேன்.

தேச நலனைப் பேணுவதிலும், தேசத்தைக் கட்டியெழுப்புவதிலும் இஸ்லாமிய மார்க்கத்தின் மாறாத நடுநிலைத் தன்மையோடு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை ஆற்றிவரும் பங்களிப்பு போற்றத்தக்கது.

**சஜித் பிரேமதாச**
**எதிர்க்கட்சித் தலைவரும்,**
**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும்.**

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவரின் வாழ்த்து



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். சமயங்கள் வன்முறையையோ விரோதத்தையோ ஒருபோதும் வளர்க்கவில்லை. மாறாக அன்பு, கருணை, பொறுமை, சமாதானம், விட்டுக்கொடுப்பு போன்ற அடிப்படைகளையே அனைத்து சமயங்களும் வலியுறுத்துகின்றன. இருப்பினும் தனிநபர் தொடக்கம் சமூகங்கள் வரையில் முரண்பாடுகளும் குரோதங்களும் தலைதூக்கி நிற்கின்றன என்பது வருத்தமளிக்கிறது. இதற்கு அடுத்த சமயங்கள் பற்றிய சரியான புரிதல்கள் இன்மையே அடிப்படைக் காரணமாகும்.

பல்லின மக்கள் வாழும் இலங்கை போன்ற நாடுகளில் ஏனைய சமயங்களைப் பற்றிய புரிதல் சகவாழ்வினை ஏற்படுத்தவும் வளர்க்கவும் பெரிதும் துணைபுரியும் என்பது எனது நம்பிக்கை. அந்த வகையில் 100 ஆண்டுகளாக முஸ்லிம் சமூகத்தை தலைமையேற்று சமய, சமூக வழிகாட்டல்களை முறையாக வழங்கி சகவாழ்வினைக் கட்டியெழுப்பிட அயராது உழைக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பணிகளைப் பார்த்து பூரிப்படைகிறேன்.

**இரா. சம்பந்தன் (பா.உ)**
**தலைவர், தமிழ் தேசிய கூட்டமைப்பு**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை பரீட்சைகள் திணைக்களம்

### வெட்டி அகற்றப்படும் துண்டுக் காகிதங்களை கேள்வி மூலம் விற்பனை செய்தல்

### ஒப்பந்த இலக்கம்: 4/3/10/2019

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தில் வினாப்பத்திரங்கள் அச்சிடுதல் செயற்பாட்டின்போது வெட்டி அகற்றப்படும் காகிதங்களை விற்பனை செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் உருப்படிகளுக்காக கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | உருப்படி | அளவு (ஏறக்குறைய) |
|---|---|---|
| 01 | மரத்தூள் அற்ற (Wood free) வெள்ளை அச்சிடும் காகிதம் | 10,000 கிலோகிராம் |
| 02 | வெள்ளை மற்றும் வர்ண கலப்புக் காகிதம் | 3,000 கிலோகிராம் |

01. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பரீட்சைகள் திணைக்களத்தின் வழங்கல் பிரிவிலிருந்து (தொலைபேசி இல. 0112886200 - நீடிப்பு 218 அல்லது 0112785219) மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2023-01-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம். (கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மட்டும் மேற்கொள்ளுதல் வேண்டும்).
02. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 30 நாட்கள் வரையில் (2023-02-27ஆம் திகதி வரை) செல்லுபடியாதல் வேண்டும்.
03. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-01-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களத்தின் 3ஆம் மாடி வழங்கல் பிரிவிற்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ''வெட்டி அகற்றப்படும் துண்டுக் காகிதங்களை கேள்வி மூலம் விற்பனை செய்தல் - ஒப்பந்த இலக்கம்: 4/3/10/2019" எனக் குறிப்பிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் சமர்ப்பிக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்தவுடன் அவ்வேளையில் தனிப்பட்ட முறையில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்கூறப்பட்ட முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெட்டி அகற்றப்படும் துண்டுக் காகிதங்களை கேள்வி மூலம் விற்பனை செய்தல் - ஒப்பந்த இலக்கம்: 4/3/10/2019" எனக் குறிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. சகல விலைமனுக்களையும் எந்தவொரு காரணமும் காட்டாமல் நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கோரலின் முழுமையான செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கு மற்றும் ஏதாவது விலைமனுவை அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை பரீட்சைகள் திணைக்களம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2023-01-19.**

### பிரக்ஞாபந்து புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை கூட்டிணைப்பதற்கான சட்டம்

ரூபசிங்ஹகே பிரதீப் சமன் குமார உந்துகொட ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 53 (1) ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் “பிரக்ஞாபந்து புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்” என அழைக்கப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க உள்ளேன் என்பதை இத்தால் அறியத்தர விரும்புகின்றேன்.

பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டமைந்த மேற்குறித்த புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைப்பது சட்டமூலத்தின் நோக்கமாக அமைகின்றது.

01. தமது ஆரம்பக் கல்வியை திருப்திகரமாக பூர்த்தி செய்துள்ள தகைமை வாய்ந்த இளைஞர் யுவதிகளுக்கு, நிலைமையின் பிரகாரம், அவர்களின் தொழில் மற்றும்/ அல்லது தொழில்நுட்ப மற்றும்/அல்லது தொழில்சார் திறன்கள் மற்றும் தொழில்நுட்ப மற்றும்/ அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்காக உயர் கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய வகையில் நிதி உதவிகளை வழங்குவதற்காக புலமைப்பரிசில்களை வழங்குதல்.
02. வேறு கல்வித்துறைகள் மற்றும்/அல்லது நிறுவனங்கள் மற்றும்/அல்லது தொழில்நுட்ப முகாமைத்துவ மற்றும்/அல்லது உயர் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், மன்றங்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் மற்றும்/அல்லது வேறு உயர் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதற்கு நிகரான நிறுவனங்களைத் தாபித்தல் மற்றும்/அல்லது தாபிப்பதற்கு ஆதரவளித்தல்.
03. விரிவுரையாளர்களின், ஆசிரியர்களின் மற்றும் தொழில்நுட்ப கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தின்பால் ஈடுபட்டுள்ள அத்தகைய நபர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் உதவிகளை வழங்குதல்.
04. நிதியத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான அல்லது பொருத்தமான சகல மற்றும்/அல்லது ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல், என்பனவாகும்.

**பிரதீப் உந்துகொட**
**பாராளுமன்ற உறுப்பினர் கொழும்பு மாவட்டம்.**

## 2023ஆம் ஆண்டிற்காக சபை சொத்துக்களை குத்தகைக்கு விடல்

### பொல்பித்திகம பிரதேச சபை

பொல்பித்திகம பிரதேச சபைக்கு சொந்தமான பொல்பித்திகம பல்நோக்குக் கட்டிடத்தின் முன்னால் உள்ள பகுதியை வாகன நிறுத்துமிடத்திற்காக வருடாந்தம் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

02. விண்ணப்பிப்பதற்காக இவ் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2023.01.19ம் திகதி முதல் விநியோகிக்கப்படும் கேள்விப் படிவத்தைப் பெற்றுக் கொண்டு, 2023.02.14ம் திகதிக்கு முன்பு அலுவலகத்திற்கு வழங்குமாறு இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

மேலதிக விபரங்களை 037-2273082 தொ.பே. இலக்கத்தை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**எல். ஆர். ரஞ்சித் விஜேநாயக்க,**
**தலைவர்,**
**பிரதேச சபை, பொல்பித்திகம**

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## மக்கள் வங்கி

### தங்க நகை அடகுப் பொருட்கள் ஏலவிற்பனை

மக்கள் வங்கியின் பதுளை பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழ்க்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 30.09.2021 ம் திகதிக்கு முன் அடகு வைக்கப்பட்டு 24.02.2023ம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

| | கிளை/சேவை நிலையம் | ஏலவிற்பனைத் திகதியும், ஸ்தானமும் |
|---|---|---|
| 01 | **கிளைகள் :-** பதுளை, மஹியங்கனை, பசறை, ஹாலிஎலை, கந்தகெட்டிய, லுனுகலை, கிராந்துருகோட்டை, பதுளை முதியங்கனை<br>**சேவை நிலையங்கள் :-** பதுளை, வெலேகடை, பதுளை பஸார் வீதி, மடுல்சீமை, தெமோதரை, எட்டம்பிட்டிய, மிகஹகிவுல, நவமெதகம, பதுளை லோவர் வீதி, பதுளை மாவட்ட செயலக காரியாலயம், ஊவா மாகாண சபை | 2023.02.25 ம் திகதி மற்றும் 2023.02.26 ம் திகதி பதுளைக் கிளைத் தொகுதியில் |
| 02 | **கிளைகள் :-** வெளிமடை, கெப்பெட்டிபொல, ஊவாபரணகம, பொரலந்தை, பண்டாரவளை, ஹப்புத்தளை, கொஸ்லந்தை, ஹல்தும்முல்லை, தியத்தலாவை<br>**சேவை நிலையங்கள் :-** வெளிமடை நகரம், லுணுவத்த, மெதவெல, போகஹகும்புர, பண்டாரவளை நகரம், பண்டாரவளை சிங்ஹகிரி, பெரஹெட்டிய, பல்லகெட்டுவ | 2023.02.25 ம் திகதி மற்றும் 2023.02.26 ம் திகதி பண்டாரவளைக் கிளைத் தொகுதியில் |

மேற்குறிப்பிடப்பட்ட படி நடைபெறவுள்ள இவ் ஏலவிற்பனையை அறிவித்தல் எதுவுமின்றி வங்கியின் விருப்பத்திற்கேற்ப இரத்துச் செய்யவோ ஒத்தி வைக்கவோ ஒன்றிணைந்து நடாத்தவோ அல்லது ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைக்கவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிக்கு அதிகாரமுள்ளது.

**பிரதேச முகாமையாளர்**
**மக்கள் வங்கி,**
**பிரதேச பிரதான அலுவலகம்**
**இல. 24, R.H. குணவர்த்தன மாவத்தை, பதுளை.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peopleslank.lk

Repeat Your Ad For Better Offers

## விசேட அதிரடிப்படை
## இலங்கை பொலிஸ்

### விலை மனுக்கோரல் (IFB)

(கட்டிட நிர்மாணம்)

01. விசேட அதிரடிப்படை, இலக்கம் 223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, தளபதியினால், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த காலம் காலம் (நாட்கள்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | மனு காப்புறுதிப்பிணைத் தொகை (ரு) | ICTAD அல்லது CIDA பதிவு | ஒப்பந்த கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | விசேட அதிரடிப்படை கோனஹேன முகாமின் மனிதவள முகாமைத்துவ பிரிவிற்கு கோப்புகளை வைக்கும் அலுமாரி அமைத்தல் **STF/B/C/05/2023** | 45 நாட்கள் | 4.2 | 63,420.00 | C8 அல்லது அதற்கு மேல் | 2,500.00 |
| 02. | விசேட அதிரடிப்படை அருகம்பை முகாம் உத்தியோகபூர்வ அதிகாரியின் இல்லத்தின் மேல் மாடியில் கூரை பகுதியினை அபிவிருத்தி செய்தல் **STF/B/C/07/2023** | 60 நாட்கள் | 3.5 | 51,165.00 | C8 அல்லது அதற்கு மேல் | 2,500.00 |

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
03. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, விசேட அதிரடிப்படை, பணிப்பாளர் / கட்டிடம் அவர்களிடம் பெற்றுக்கொள்ளவதுடன், **2023.01.19 ஆம் திகதி முதல் 2023.02.13 ஆம் திகதி வரை** பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப. 09.00** மணி முதல் **பி.ப. 15.00** மணி நேரம் வரை மனு ஆவணங்களை பரிசீலனை செய்ய முடியும்.
04. தகுதியான அனைத்து மனுதாரர்களும் குறித்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற சட்டப்பூர்வமான உரிமையை கொண்டுள்ளனர். மனுதாரர்களால் கட்டுமான பயிற்சி மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD/CIDA) தரம் மற்றும் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் (Public Contract Act) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படும். மனுதாரரின் பெயரை தேசிய கொள்வனவு ஆணைக்குழுவில் (National Procurement Commission) தவறாக ஆவணத்துடன் சேர்க்கக்கூடாதுதென்பதுடன் மேலதிக விபரங்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்பட்டுள்ளன.
05. எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2023.01.19** ஆம் திகதியிலிருந்து **2023.02.13** ஆம் திகதி வரை பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **மு.ப.09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை **இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, விசேட அதிரடிப்படை, பணிப்பாளர் / கட்டிடம் வழங்கல் பிரிவில்** சமர்ப்பித்து இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்களால் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்திற்கு மனுகோரல் விண்ணப்ப படிவம் ஒன்று மட்டுமே வழங்கப்படும்.
06. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2023.02.14** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, விசேட அதிரடிப்படை தலைமையகம், பணிப்பாளர் (கட்டிடம்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் மனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தனிப்பட்ட முறையில் சமூகமளிக்கும் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு முன்னிலையில் **2023.02.14** ஆம் திகதி **இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, விசேட அதிரடிப்படை, தலைமையக கேட்போர் கூடத்தில் பி.ப.02.00** மணிக்கு மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் பங்கேற்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை பெற வேண்டும். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அனுமதியை வழங்கத் தவறிய எந்த முகவரும் அச்சந்தர்பத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
07. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.
08. அனைத்து மனுக்களும், மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
    - i. பிணையின் பெறுமதியானது மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருத்தல் வேண்டும்.
    - ii. இலங்கையில் செயல்படும் வணிக வங்கியிடமிருந்து மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட பிணையாளராக இருத்தல் வேண்டும் அல்லது கட்டுமானத்திற்கான சான்றிதழ் நிதியத்தினால் (CGF) சான்றிதழ் பெற்ற பிணையாளராக இருத்தல் வேண்டும். மனு பிணையாளரின் கோரிக்கையின் பேரிலும், நிபந்தனையற்றதாகவும், மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி செலுத்தப்பட வேண்டும்.இலங்கையில் செயல்படும் வணிக வங்கியிடமிருந்து மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட பிணையாளராக இருத்தல் வேண்டும்.
    - iii. மனு படிவ தொகுப்பின் 09 ஆம் பிரிவில் இல் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தின் படி மனுப்படிவம் இருக்க வேண்டும்
    - iv. மனு பிணையானது படைத்தளபதி / விசேட அதிரடிப்படை என்ற பெயரில் இருத்தல் வேண்டும்.
    - v. மனுக்கள் **2023.02.14** ஆம் திகதி முதல் **2023.06.14** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
09. தள வருகையைத் தொடர்ந்து, **2023.02.03 ஆம் திகதி 10.00** மணிக்கு **விசேட அதிரடிப்படை தலைமையகம், இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07** விசேட அதிரடிப்படையின் கேட்போர்கூடத்தில் முன்மனுக் கூட்டம் நடைபெறும்.
10. வழங்கப்படும் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையை கொள்முதல் குழுவினருக்கு உண்டு. கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாக காணப்படும்.
11. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**விலாசம் :-**
பணிப்பாளர் / கட்டிடம்,
விசேட அதிரடிப்படை,
இல-223, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07.

**தொலைப்பேசி இலக்கம :-**
பிரதான - 011 2589784
பொது - 011 2500471 / 2589741 - 262
பெக்ஸ் - 011 2588499 / 2589784

தளபதி
விசேட அதிரடிப்படை

## கொழும்பு மாநகர சபை

### விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைமனுப் பிணையின் பெறுமதி ரூபா | கேள்விதாரர்கள் / விலைமனு தாரர்களின் தகைமை | மேலதிக விபரங்களுக்காக தொடர்புகொள்ள வேண்டியவர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ME/ ME/ DR/ 291/ 2021 | தெமட்டகொட வேலுவன வீதியில் கால்வாய்க்கு குறுக்கான பழுதடைந்த சாக்கடையை பழுதுபார்த்தல் | 5750.00 | ரூ. 150,000.00 நிபந்தனையற்ற கோரும் போது வழங்கப்படும் உத்தரவாதம் | நீர் வழங்கல் வடி காலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் CIDA தரம் C6 C7 இற்கு இடைப்பட்ட வர்கள் | பணிப்பாளர் பொறியியலாளர் (வடிகாலமைப்பு) தொ.பே 011- 2674809 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
    - அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கொழும்பு மாநகர சபையின் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
    - ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.
        - ➢ **வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.**
        - ➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.**
- ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.
- iii. இணையதளத்திலிருந்து விலைமனு ஆவணங்களை சேகரிக்கும் விலைமனுதாரர்கள் கீழ்க்காணும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk மூலம் அறிவித்தல் வேண்டும்.

1. கம்பனியின் பெயரும் முகவரியும்
2. தொடர்பு தொ.பே இலக்கம் மற்றும் e.mail முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2023.02.08 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகள் 2023.02.08 மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன் செலுத்தப்படல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.09.07ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.08.08ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023.02.09ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2023.02.09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/ விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

## பெயர் மாற்றம்

ஹெம்மாத்தகம, கொட்டேகொட, இல. B1/9ஐச் சேர்ந்த **நூருள் இனியா** ஆகிய நான் எனது பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையில் உள்ள **மொஹம்மது லெப்பே ஓமர் லெப்பே நூருள் இனியா** என்ற எனது பெயரை **நூருள் இனியா** என்றும் முழுப் பெயரை **ஓமர் லெப்பே நூருள்** இனியா என்றும் மாற்றம் செய்வதாகவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பாவிப்பதாகவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

**நூருள் இனியா**

Repeat Your Ad For Better Offers

## வரையறுக்கப்பட்ட ஹங்குரன்கெத்த பலநோக்கு கூட்டுறவு சங்கம்

## மீட்டுக்கொள்ளப்படாத அடகுப் பொருட்களின் ஏல விற்பனை

நகை அடகு பெறுநர்களான வ/ப ஹங்குரன்கெத்த பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின்

1. ஹங்குரன்கெத்த நகர கிராமிய வங்கி
2. கரல்லியத்த கிராமிய வங்கி
3. உனன்தென்ன கிராமிய வங்கி
4. கலஉட கிராமிய வங்கி
5. அதிகாரிகம கிராமிய வங்கி
6. உடவத்த கிராமிய வங்கி

ஆகிய கிளைகளில் 2021.09.30 வரை அடகு வைத்து மீட்டுக் கொள்ளப்படாத அடகு நகைகள், 2023.01.28 அன்று ஹங்குரன்கெத்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான அலுவலக கேட்போர் கூடத்தில் மு.ப. 9.30 இற்கு பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த அடகுப் பொருட்களை 2023.01.27 அன்று மு.ப. 11.00 வரை மீட்டுக் கொள்ளவும் முடியும். ஏலவிற்பனைத் திகதி 2023.01.28

**பொது முகாமையாளர்**
**வ/ப ஹங்குரன்கெத்த ப.நோ. கூ. சங்கம்**
**ஹங்குரன்கெத்த**
**081-2369375**
**2023.01.16**

afc

## தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.10.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 26.01.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரகோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**26.01.2023**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

**அடகுச் சேவைத் தலைவர்**
**எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ**
**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**தொலை : 0115 573600**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## ஏல விற்பனை அறிவித்தல்
## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

கம்பளை, போதலபிட்டிய, தேவராஜ மாவத்தை, இல.4/1B - 1/1 ஐச் சேர்ந்த திரு.சிசிரகுமார காமினி சரத்சந்ர மற்றும் திருமதி தியாகு படதுரகே சந்திம தி சில்வா மற்றும் கம்பளை, போதலபிட்டிய, தேவராஜா மாவத்தை, இல.41G ஐச் சேர்ந்த திருமதி சிரியாகுமாரி சரத்சந்திர ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

தொடர்பு : 575/Recovery/Sarachchanla/2022

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2019.02.08ஆம் திகதி 2110 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.01.22ஆம் திகதி தினமின, தினகரன், மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.182/3, (50/3) விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 08.02.2023 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கம்பளை பதிவுப் பிரிவில் உடபலாத்தை கங்கபஹல கோரளையில் கம்பளை நகர சபை எல்லைகளுள் நகரத்தினுள் உடபலாத்த பிரதேச செயலகப் பிரிவில் போதலப்பிட்டிய 1109ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் வட்டாரம் இல. 01ல் கஹட்டபிட்டியவில் அமைந்த தேவராஜ மாவத்தை வரிமதிப்பு இல. 4ஐக் கொண்ட போதலபிட்டியவத்த என அழைக்கும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S. M. அபேரத்ன தயாரித்த 1999.07.24 திகதியிட்ட வரைபடம் இல. 1828ல் விபரித்த துண்டு 7 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட காணித்துண்டு **வடக்கில்** மேற்கூறிய வரைபடம் இல. 1828ல் துண்டுகள் 2, 3, 5 மற்றும் 6ம், கிழக்கில் வரிமதிப்பு இல. 10B ஐக் கொண்ட நிலமனையும் 10C பாரதொட்ட பாதையும், **தெற்கில்** பதலவத்தையை பிரிக்கும் உயிர் வேலியும் கம்பி வேலியும், **மேற்கில்** தேவராஜ மாவத்தை வரிமதிப்பு இலக்கம் 4/5ஐக் கொண்ட மீதிப்பாகத்தை பிரிக்கும் உயிர்வேலியும் கம்பி வேலியும் எல்லைகளாகக் கொண்டு **பதிநான்கு தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே14.05) அல்லது ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஐந்து ஐந்து நான்கு (ஹெக்டெயர்கள் 0.03554)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண். மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1828ல் துண்டு 6 என அடையாளமிட்ட கிணற்றிலிருந்து ஏனைய அதிகாரமுள்ள பாவனையாளருடன் பொதுவாக கிணற்றில் நீர் எடுப்பதற்கு உரிமையும் ஆகும். இது **கம்பளை** காணிப்பதிவகத்தில் E 24/04**ல்** பதிவு செய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட கஹட்டபிட்டியவில் அமைந்த தேவராஜ மாவத்தை வரிமதிப்பு இல. 4ஐக் கொண்ட **போதலபிட்டியவத்த** என அழைக்கப்படும் காணியின் ஒரு பாகம் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1828ல் விபரித்த **துண்டு 3** என அடையாளமிட்ட எட்டு அடி அகல பிரவேசம் மீது ஏனைய அதிகாரம் பெற்ற பாவனையாளருடன் அன்பளிப்பைப் பெற்றோரும் அவரால் மேலே கூறப்பட்டோரும் பொதுவாக பாதையை பிரவேசிப்பதற்கான உரிமையும் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1828ன் படி **வடக்கில்** துண்டு 1ம், **கிழக்கில்** துண்டு 4, 5 மற்றும் 6ம், **தெற்கில்** துண்டு 7ம், **மேற்கில்** துண்டு 2ம் எல்லைகளாகக் கொண்டு **ஒன்று தசம் நான்கு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.1.40) அல்லது ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் பூச்சியம் பூச்சியம் மூன்று ஐந்து நான்கு (ஹெக்டெயர்கள் 0.00354)** விஸ்தீரணமுடையது. அத்துடன் வரைபடம் இல. 1828ல் 8 அடி அகல பாதைக்கு ஒதுக்கிய துண்டு 1 மீதான பொது வழி உரிமையும் ஆகும். இது கம்பளை காணிப்பதிவகத்தில் C178/37ல் பதிவு செய்யப்பட்டது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**திருமதி.**M.G.K.P. **விமலசேன**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக்கிளை, கம்பளை.**

The Housewives' companion
Classifieds on
Daily News

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி
## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**1. கடன் வசதி தொடர்பு இல. 81772745**

**உதுமீய, பிதுருவெல்ல, நேசர் பிரீஸ், இல.06 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.ஒட்டுனு பற்றல முலச்சாரியலாகே சத்துர துஷ்மந்த குமார பொல்பிட்டிய ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 16.08.2019ஆம் திகதி 2137ஆம் இலக்க வர்த்தமானியிலும் 02.08.2019ஆம் திகதி **"தினமின", "டெய்லி நியூஸ்"** மற்றும் **"தினகரன்"** ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் **இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ** என்னும் முகவரியைச் சேர்ந்த T&H **ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித் கருணாரத்ன அவர்கள் 2019.12.10ஆம் திகதி 1ஆவது ஆதனம் மு.ப. 11.00 மணிக்கு, 2ஆவது ஆதனம் மற்றும் 3ஆவது ஆதனம் மு.ப 11.30 மணிக்கும்** அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம் தம்பதெனி ஹத்பற்று ரெகோபற்று கோரளையில் **வீரம்புகெதர** பிரதேச செயலாளர் பிரிவு **பொல்கஹவெல** பிரதேச சபை எல்லைகளுள் பிதுருவேல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.847ல் **பிதுருவேல்ல** கிராமத்தில் அமைந்த **வேபொடபில்லேவ** என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ.டீ. பிரேமரத்ன தயாரித்த 08.03.2015 திகதியிட்ட வரைபடம் இல. 26A/2015ல் விபரித்த **துண்டு 01** என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு **வடக்கில்** வரைபடம் இல.2435ல் துண்டு இல.3 தற்சமயம் ஏ.ஏ.எஸ். அசேல பண்டாரவின் காணியும், **கிழக்கில்** துண்டு இல.3ம், **தெற்கில்** துண்டு இல.2ம், **மேற்கில்** சந்தகலயிலிருந்து பிதுருவேல்ல வரை பிரதான பாதையும் எல்லைகளாகக் கொண்டு **பதினான்கு தசம் நான்கு பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.14.4)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 26A/2015ல் துண்டு இல.10 என அடையாளமிட்ட வழியின் உரிமையும் ஆகும். இது **குருநாகல்** காணிப்பதிவகத்தில் **V60/127**ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம் தம்பதெனி ஹத்பற்று ரெகோபற்று கோரளையில் **வீரம்புகெதர** பிரதேச செயலாளர் பிரிவு **பொல்கஹவெல** பிரதேசசபை எல்லைகளுள் **பிதுருவேல்ல** கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.847ல் பிதுருவேல்ல கிராமத்தில் அமைந்த வேபொடபில்லேவ என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ.டீ. பிரேமரத்ன தயாரித்த 08.03.2015 திகதியிட்ட வரைபடம் இல. 26A/2015ல் விபரித்த **துண்டு 01** என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு **வடக்கில்** துண்டு இல.4ம், **கிழக்கில்** துண்டு இல.10ம் (10 அடிப் பிரவேசம்), **தெற்கில்** துண்டு இல.10ம் (15 அடிப் பிரவேசம்), **மேற்கில்** துண்டு இலக்கங்கள் 1 மற்றும் 2ம் எல்லைகளாகக் கொண்டு **பதினைந்து தசம் மூன்று பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.15.3)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 26A/2015ல் துண்டு இல.10 என அடையாளமிட்ட பாதையின் உரிமையும் ஆகும். இது **குருநாகல்** காணிப்பதிவகத்தில் **V60/128**ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம் தம்பதெனி ஹத்பற்று ரெகோபற்று கோரளையில் **வீரம்புகெதர** பிரதேச செயலாளர் பிரிவு **பொல்கஹவெல** பிரதேச சபை எல்லைகளுள் **பிதுருவேல்ல** கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.847ல் பிதுருவேல்ல கிராமத்தில் அமைந்த வேபொடபில்லேவ என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ.டீ. பிரேமரத்ன தயாரித்த 08.03.2015 திகதியிட்ட வரைபடம் இல. 26A/2015ல் விபரித்த **துண்டு 04** என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு **வடக்கில்** வரைபடம் இல.5014ல் துண்டு இல.4 தற்சமயம் எம். ஆர்.விஜேரத்னவின் காணியும், **கிழக்கில்** துண்டு இல.5ம், துண்டு இல.10 (10 அடிப் பிரவேசம்), **தெற்கில்** துண்டு இல.3ம், **மேற்கில்** வரைபடம் இல. 2435ல் துண்டு இல.1 தற்சமயம் டீ.பீ.மார்க்ஸ் வீரக்கொடியின் காணியும் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.2435ல் துண்டு இல.2 தற்சமயம் எச்.ஏ.கே. பத்மலதாவின் காணியும் வரைபடம் இல.2435ல் துண்டு இல.3 தற்சமயம் ஏ.ஏ.எஸ். அசேல பண்டாரவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு **பதினைந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.15)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 26A/2015ல் துண்டு இல.10 என அடையாளமிட்ட வழியின் உரிமையும் ஆகும். இது **குருநாகல்** காணிப்பதிவகத்தில் **V60/129**ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**திருமதி. டீ.எம்.சீ.என். திசாநாயக்க**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மல்கடுவாவ கிளை**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## ஏல விற்பனை அறிவித்தல்
## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்**

இல. 25, முஸ்லிம் கொலனி, கதுருவெல, பொலன்னறுவை என்ற முகவரியைச் சேர்ந்த மிஹிலார் ஹலால்தீன் எனப்படும் திரு. மொஹமட் மிஹிலார் ஹலாப்தீன் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

தொடர்பு : 575/Recovery/Halabdeen/2022

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2018.11.30ஆம் திகதிய 2100ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.11.19ஆம் திகதிய தினமின, தினகரன், மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 28ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தையும் நிலமனையையும் இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.02.03ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

திவுலான முஸ்லிம் கொலனி என அழைக்கப்படும் கதுருவெலதமனகலே என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் W.A. பியதாஸ தயாரித்த 1999.02.21ஆம் திகதியிட்ட 117/02/99ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டானது மரங்கள், பயிர்கள் என அதன் கண்ணுள்ள அனைத்துடனும் வட மத்திய மாகாணம் பொலன்னறுவை மாவட்டம் தமங்கடுவ பிரதேச செயலாளர் பிரிவின் மெதபற்று தமங்கடுவ பிரதேச சபை எல்லைகளுள் இல. 181 மாணிக்கம்பட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கதுருவெல கிராமத்தில் அமைந்துள்ள **வடக்கில்** FCP PO 151 காணித் துண்டு 5ஐயும், **கிழக்கில்** FCP PO 151ல் காணித் துண்டு 5ஐயும், **தெற்கில்** எஸ்.எம். ஹனீபா உரிமைகோரும் FCP PO 151ல் துண்டு 366ன் ஒரு பகுதியையும் 117,02,99ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகள் 3 மற்றும் 4 (பாதை) என்பவற்றையும் வட மேற்கில் FCP PO 151ல் காணித்துண்டு 505ஐயும் 117/02/99ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 1ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி மேற்குறிப்பிட்ட 117/02/99ஆம் இலக்க வரைபடத்தின் படி இரண்டு ஏக்கர் (ஏ2.றூ0.பே.0) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு W.A. பியதாஸ தயாரித்த 1999.02.21ஆம் திகதியிட்ட 117/02/99ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள துண்டு 4 என அடையாளமிடப்பட்ட பாதை ஒதுக்கத்தின்மீதான வழி உரிமையையும் கொண்டுள்ளது. இக்காணியானது பொலன்னறுவை காணிப்பதிவகத்தில் பக்கம் LDO B/11/71இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

117/02/99ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 அண்மைய அளவையின்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

திவுலான முஸ்லிம் கொலனி என அழைக்கப்படும் கதுருவெலதமனகலே என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் AGR அயோனி தயாரித்த 2012.06.11ஆம் திகதியிட்ட 2012/Thama/37 என்ற இலக்கமுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டானது மரங்கள், பயிர்கள் என அதன்கண்ணுள்ள அனைத்தும் வடமத்திய மாகாணம் பொலன்னறுவை மாவட்ட தமங்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் மெதபற்று தமங்கடுவ பிரதேச சபை எல்லைகளுள் உள்ள கதுருவெல கிராமத்தில் அமைந்துள்ள **வட கிழக்கில்** FCP PO 151இல் காணித் துண்டு 5ஐயும், **தென்கிழக்கில்** FCP PO 151இன் காணித் துண்டு 5ஐயும், **தென் மேற்கில்** பாதையையும் உரிமம் பெற்ற நில அளவையாளர் W.A. பியதாஸ தயாரித்த 117/02/99ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் 1 மற்றும் 3ஐயும் **வட மேற்கில்** FCP PO 151 காணித்துண்டு 505ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி மேற்குறிப்பிட்ட 2021/Thama/37 என்ற இலக்கமுடைய வரைபடத்தின்படி இரண்டு ஏக்கர் பத்து தசம் ஆறு பேர்ச்சஸ் (ஏ2-றூ0.பே.10.6) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு 117/02/99ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 4இன் மீதான வழி உரிமையையும் கொண்டுள்ளது.

மேலும் இக்காணியானது இரண்டாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொறிகளையும் இயந்திரங்களையும் கொண்டுள்ளது.

**மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை**

**இயந்திர சாதனப் பட்டியல்**

மேலே முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி மற்றும் நிலமனையில் பொருத்தப்பட்டுள்ள பொறிகளும் இயந்திரங்களும் வருமாறு:

| உருப்படி | விபரம் | தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | Elevators Double 17ft with 2 HP motor | 95,200.00 |
| 2 | Overhead rice stock tank with funnel on L Iron frame 10'x8'x10' | 250,000.00 |
| 3 | Elevators Double 14ft with 2 HP motor | 78,400.00 |
| 4 | Vertical double Roll Rice Polishing Machine China Model MPGL 18 Serial No. 1724-2001/11 | 275,000.00 |
| 5 | Elevators Double 17ft with 3 HP motor | 95,200.00 |
| 6 | Overhead rice stock tank with funnel on C Iron frame 10'x8'x10' | 350,000.00 |
| 7 | Elevators 2x2 19 1/2 ft. with 2 HP motor | 187,200.00 |
| 8 | Elevators 2x2 19 1/2 ft. with 2 HP motor | 187,200.00 |
| 9 | White Rice Grading Flat Sifter China 2013/01 model MMJP 80x3 Serial No. 0130095 | 375,000.00 |
| 10 | Elevators Double 16ft with 3 HP motor | 96,000.00 |
| 11 | Steel overhead rice stock tank with funnel on H Iron frame 8'x8'x8' | 400,000.00 |
| 12 | Colour Sorter ZET 2K4 Model "Vetal" India 72 Channels | 5,200,000.00 |
| 13 | Elevators Double 12ft with 2 HP motor | 55,000.00 |
| 14 | Elevators Double 14ft with 2 HP motor | 65,000.00 |
| 15 | Paddy sifter with iron frame 3 HP motor Local | 160,000.00 |
| 16 | Paddy Driver 28000kg 50ft elevator 2HP motor Fan/30 HP motor | 3,400,000.00 |
| 17 | Boiler Goghran & Annan LTD Scotland TP 1729/957329 Recondition 9' & 5' | 2,000,000.00 |
| 18 | Boiler Indian Recondition 10' & 4' | 1,000,000.00 |
| 19 | Presser Pump Centric Jinasena | 175,000.00 |
| 20 | Rice sifter with iron frame 3 HP motor | 60,000.00 |
| 21 | Elevators 2 Nos 14ft with 3 HP motor | 130,000.00 |
| 22 | Elevators 13ft with 3 HP motor | 60,000.00 |
| 23 | Elevators 3 Nos. 12ft with 2 HP motor | 165,000.00 |
| 24 | Elevators 9ft with 3 HP motor | 45,000.00 |
| 25 | Destoner 2010 02 Nos. Indian with 3HP motor | 320,000.00 |
| 26 | Destoner Local with 2 HP motor "Jayarathna" | 170,000.00 |
| 27 | Husker (One shot) Chinese MLGT 25S Standard 2011/8 Serial No. 30 with 7.5 HP motor | 295,000.00 |
| 28 | Polisher N 120 China 30 HP motor | 170,000.00 |
| 29 | Jet Rice Polisher NP 12T 40 HP motor - China | 240,000.00 |
| 30 | Yaka Fan Local 02 Nos. with 2 HP motor | 40,000.00 |
| 31 | 72 Channel rice colour sorter (make-vital 2K4 serious, CCD camera system, Electrical-1 phase) | 4,800,000.00 |
| 32 | 15hp piston type air-compressor (make - Japan, Air-Cooled, Pressure - 10 bar / 145 PSI, electrical - 3 phase / 50Hz) | 432,000.00 |
| 33 | 030 CFM air dryer (make - ELGI Refrigerated dryer, electrical - 1 phase/50 Hz, air-cooled / mimic control machine) | 214,000.00 |
| 34 | Line filet set (make - Janatics Air mate 030 CFM pre filter/fine filter/ Carbon filter) | 152,000.00 |

மேலே முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி மற்றும் நிலமனையில் தற்சமயம் பொருத்தப்பட்டுள்ள ஏனைய அனைத்தும்:

மேற்குறிப்பிட்ட அட்டவணை ஒழுங்காகக் காணப்படுகின்றது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி**

**திரு. M.G.K.P. விமலசேன**
**சிரேஷ்ட முகாமையாளர்.**

**இலங்கை வங்கி,**
**மேற்தரக்கிளை,**
**கம்பளை**

19 வயதுக்கு உட்பட்ட டி20 உலகக் கிண்ணம்

# இலங்கை இளையோர் மகளிர் அணி ஆஸியிடமும் தோல்வி

19 வயதுக்கு உட்பட்ட பெண்கள் உலகக் கிண்ண டி20 போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி 108 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

தென்னாபிரிக்காவின் பெனோனியில் நேற்று (18) நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களை பெற்றது. மத்திய வரிசையில் வந்த எல்லா ஹெய்வார்ட் அதிகபட்சமாக 31 பந்துகளில் 36 ஓட்டங்களை பெற்றார்.

இதன்போது இலங்கை சார்பில் ரிஸ்மி சன்சனா 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை இளையோர் அணி ஆரம்பம் தொடக்கம் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இதனால் அந்த அணி 13 ஓவர்களில் 51 ஓட்டங்களுக்கே சுருண்டது. ஆரம்ப வீராங்கனை நெத்மி சேனாரத்ன 11 ஓட்டங்களை பெற்றபோது மற்ற அனைவரும் ஒற்றை இலக்கத்துடன் வெளியேறினர்.

இலங்கை இன்னிங்ஸில் எதிரணி விட்டுக்கொடுத்த 12 மேலதிக ஓட்டங்களுமே அதிகபட்ச ஓட்டங்களாக அமைந்தன. கடந்த இரு போட்டிகளிலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அணித் தலைவி விஷ்மி குணரத்ன 3 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அவுஸ்திரேலியா சார்பில் ஏழு வீராங்கனைகள் பந்து வீசியதோடு அனைவரும் ஒரு விக்கெட்டையேனும் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொடரின் ஆரம்ப சுற்றில் ஏ குழுவில் ஆடிய இலங்கை அணி முன்னதாக பங்களாதேஷுடனான போட்டியிலும் தோல்வியை சந்தித்தது. எனினும் அமெரிக்காவுக்கு எதிரான தனது முதல் போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் 2 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தை பெற்றது.

எனினும் குழுநிலை போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் 6 சுற்றுக்கு தகுதி பெறும் என்பதால் இலங்கை அணி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது.




# புதிய கால்பந்து நிர்வாகத்திற்கு இடைக்காலத் தடை உத்தரவு

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் புதிய தலைவர் ஜே. ஸ்ரீ ரங்கா உட்பட புதிய நிர்வாகக் குழுவுக்கு உத்தியோகபூர்வ பணிகளில் ஈடுபடுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை நேற்று (18) பிறப்பித்தது. இந்த உத்தரவு இன்றைய தினம் வரை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமர் லெப்பே மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தேர்தலில் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமர் போட்டியிடுவதில் இருந்து கடைசி நேரத்தில் தகுதி




இழப்பு செய்யப்பட்டார். தலைமை பதவிக்கு போட்டியிட தமக்கு வாய்ப்பு வழங்காது அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறி கடந்த செவ்வாயன்று ஜஸ்வர் உமர் நீதிமன்றத்தில் முறையிட்டிருந்தார்.

எனினும் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவராக ஸ்ரீ ரங்கா பதவியை பொறுப்பேற்கும் வைபவம் நேற்று (18) காலை கொழும்பு 7இல் அமைந்துள்ள கால்பந்து சம்மேளனத் தலைமையகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நியூ ஸ்டார் அணி வெற்றி

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



அட்டாளைச்சேனை ஹைலண்ட் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. இன் அனுசரணையுடன் நடைபெற்ற உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

சின்னப்பாலமுனை ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது இறுதிப் போட்டியில் ஹைலண்ட் விளையாட்டுக் கழத்தை 2–1 என்ற கோல் அடிப்படையில் நியூ ஸ்டார் அணி வீழ்த்தியது.

இந் நிகழ்வில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. போசகர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைதீன், அதிபர்களான முகம்மது றியாஸ், எம்.ஜே. அன்வர் நௌசாத், ஹைலண்ட் ஆலோசகர்களான ஏ.ஹாறூன், ஏ.எல்.றமீஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மெஸ்ஸி, ரொனால்டோ போட்டியின் டிக்கெட் 2.6 மில். டொலருக்கு ஏலம்

சவூதி அரேபிய வர்த்தகர் ஒருவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் லியோனல் மெஸ்ஸி எதிர்த்தாடும் நட்புறவு கால்பந்து போட்டிக்கான டிக்கெட்டை 2.6 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் வென்றுள்ளார்.

ரியாதில் இன்று (19) நடைபெறும் இந்தப் போட்டியில் மெஸ்ஸியின் பரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியும் ரொனால்டோவின் புதிய கழகமான அல் நாசிர் மற்றும் சவூதியின் மற்றொரு கழகமான அல் ஹலால் வீரர்களை இணைத்த அணியும் மோதவுள்ளன.

214 மில்லியன் டொலருக்கு அல் நாசிர் அணிக்கு ஒப்பந்தமான ரொனால்டோ சவூதி அரேபியாவில் ஆடும் முதல் போட்டியாக இது அமையவுள்ளது.

இந்தப் போட்டிக்காக வீரர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்வது, மற்றும் அணிகளின் உடைமாற்றும் அறைக்குச் செல்லும் வசதிகளுடனான டிக்கெட் ஒன்றுக்கு ஏலம் விடப்பட்டது.




தொண்டு பணிக்காக நிதி சேகரிக்கும் நோக்குடன் இடம்பெற்ற இந்த ஏலத்தில் சொத்து வர்த்தகக் குழுமமான அக்கார்வன் நிறுவனத்தின் பொது முகாமையாளர் மஷ்ரப் அல் கம்தி டிக்கெட்டை வென்றுள்ளார். இதில் சேகரிக்கப்பட்ட நிதி எஹ்சான் தேசிய தொண்டு நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது.

இந்தப் போட்டியில் மெஸ்ஸி தவிர, பி.எஸ்.ஜி அணிக்காக பிரான்ஸ் முன்கள வீரர் கைலியன் ம்பப்பேவும் பங்கேற்கவுள்ளார்.

# இலங்கையிடம் சோபித்த கொஹ்லி ஐ.சி.சி தரவரிசையில் முன்னேற்றம்

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் அபாரமாக துடுப்பெடுத்தாடிய இந்திய துடுப்பாட்ட வீரர் விராட் கொஹ்லி துடுப்பாட்ட வீரர்களுக்கான ஐ.சி.சி ஒருநாள் தரவரிசையில் இரண்டு இடங்கள் முன்னேற்றம் கண்டு நான்காவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக அண்மையில் முடிவுற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் கொஹ்லி மூன்று இன்னிங்ஸ்களிலும் இரண்டு சதங்களுடன் மொத்தம் 283 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் 750 தரநிலை புள்ளிகளை அதிகரித்துக் கொண்டிருக்கும் கொஹ்லி, தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் பாபர் அசாமுக்கு சவாலாக அதிரடி முன்னேற்றம் கண்டுள்ளார்.





பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம் 887 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருப்பதோடு தென்னாபிரிக்காவின் வென்டர் டுசன் மற்றும் குயின்டன் டி கொக் முறையே இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளனர். கொஹ்லி கடைசியாக 2021 மார்ச் மாதத்தில் துடுப்பாட்ட வீரர்களுக்கான ஒருநாள் தரவரிசையில் முதலிடத்தில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு எதிராக ஒரு சதம் மற்றும் ஒரு அரைச்சதத்துடன் 206 ஓட்டங்களை பெற்றிருந்த சுப்மான் கில் 10 இடங்கள் முன்னேறி 26ஆவது இடத்தையும், பந்துவீச்சில் சோபித்த மொஹமட் சிராஜ் 15 இடங்கள் முன்னேறி 3ஆவது இடத்தையும் பெற்றனர்.

# சர்வதேச செய்திகள்

## ஒரே குடும்பத்தின் அறுவர் படுகொலை



அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் போதைக் கடத்தலுடன் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் சம்பவம் ஒன்றில் ஒரே குடும்பத்தின் நான்கு தலைமுறையைச் சேர்ந்த ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

16 வயதுத் தாய், 10 மாத மகன் மற்றும் அந்தக் குழந்தையின் பாட்டி, கொள்ளுப்பாட்டி ஆகியோர் கொல்லப்பட்டவர்களில் அடங்குவதாக பொலிஸ் மற்றும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிலேயே இந்த ஆறு பேரும் கொல்லப்பட்டிருப்பதோடு மூவர் உயிர் தப்பியுள்ளனர். சம்பவ இடத்திற்கு பொலிஸார் அழைக்கப்பட்ட நிலையில் வீதியில் இரு சடலங்களையும் மற்ற சடலங்களை வீட்டுக்குள் இருந்தும் கண்டுபிடித்துள்ளனர்.

## உலகின் வயதானவர் மரணம்

உலகின் மிக வயதானவரான பிரான்ஸ் நாட்டின் கன்னியாஸ்திரி லுசில் ரன்டன் தனது 118ஆவது வயதில் காலமானார்.

1944 ஆம் ஆண்டு கன்னியாஸ்திரியானபின் அன்ட்ரே என அழைக்கப்பட்ட அவர் தான் வாழ்ந்த பராமரிப்பு இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (17) உறக்கத்திலேயே மரணித்துள்ளார். 1904ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி பிறந்த ரன்டன் ஐரோப்பாவின் மிக வயதானவராக பதிவான நிலையில், உலகின் வயதானவராக இருந்த ஜப்பானின் கானே டனாகா கடந்த ஆண்டு 119 வயதில் மரணித்ததை அடுத்தே அந்த சாதனைக்கு உரித்தானார். கின்னஸ் சாதனை புத்தகம் கடந்த ஏப்ரலில் அதனை உறுதி செய்தது.

முதலாம் உலகப் போருக்கு ஒரு தசாப்தத்திற்கு முன்னர் பிறந்த ரன்டன் மருத்துவமனை ஒன்றில் 31 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

2021இல் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிர் பிழைத்தார்.

அவரது மரணத்தைத் தொடர்ந்து அமெரிக்காவில் பிறந்து தற்போது ஸ்பெயினில் வாழ்ந்து வரும் 115 வயதான மரியா பிரன்யஸ் மொரேரா என்ற பெண் உலகின் வயதானவர் என்ற சாதனைக்கு உரித்தாவதாக நம்பப்படுகிறது.



## பாக். தலிபான்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மற்றும் பலுசிஸ்தான் பிரதேசங்களில் அதிகரித்துவரும் தடைசெய்யப்பட்ட பாகிஸ்தான் தலிபான்களின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தெற்கு வசரிஸ்தானின் அரசியல் செயற்பாட்டாளர்கள், குடியிருப்பாளர்கள், தொழிலாளர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள் எனப் பலதரப்பினரும் குளிர்காலத்தையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டதோடு தடைசெய்யப்பட்ட பாகிஸ்தான் தலிபான்களின் தீவிரவாத செயற்பாடுகளையும் குற்றச்செயல்களையும் கட்டுப்படுத்தி பிராந்தியத்தில் நீடித்து நிலைக்கக்கூடிய அமைதியை ஏற்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

உக்ரைனில் ஹெலி விபத்து

## உள்துறை அமைச்சர் உட்பட பதினெட்டுப் பேர் உயிரிழப்பு

உக்ரைன் தலைநகர் கீவின் கிழக்கு புறநகரில் உள்ள பாலர் பாடசாலை ஒன்றுக்கு அருகில் ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்கு உள்ளானதில் அந்நாட்டு உள்துறை அமைச்சர் உட்பட பதினெட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று (18) இடம்பெற்ற இந்த விபத்தில் மூன்று சிறுவர்கள் உட்பட 15 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்துக்குள்ளாகும்போது அந்த ஹெலியில் அமைச்சர் டனிஸ் மொனஸ்டிஸ்கியுடன் மேலும் எட்டுப் பேர் இருந்துள்ளனர்.

இதில் அவரது பிரதி அமைச்சர் மற்றும் செயலாளரும் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த ஹெலி ப்ரோவாரி புறநகர் பகுதியிலேயே விழுந்துள்ளது.

இந்த ஹெலி உக்ரைனின் அவசர சேவை பிரிவுக்குச் சொந்தமானது என்று தேசிய பொலிஸ் பிரதானி இஹோர் பிளிமென்கோ பேஸ்புக்கில் குறிப்பிட்டுள்ளார்.



இந்த ஹெலி விழுந்து வெடித்து தீ பரவியதை அடுத்து அருகில் இருக்கும் பாலர் பாடசாலை கட்டடத்தில் இருந்த சிறுவர்கள் மற்றும் ஊழியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். ஹெலியின் வெடித்துச் சிதறிய பாகங்கள் அந்த பாலர் பாடசாலைக்கு வெளியில் இருந்து தெளிவாகத் தெரிகிறது.

ஹெலி விபத்துக்குள்ளாகும்போது அந்தப் பகுதி இருண்டு, பனிமூட்டமாகக் காணப்பட்டதாகவும் அந்த ஹெலி முதலில் பாலர் பாடசாலை கட்டடத்தில் மோதி பின்னர் குடியிருப்புக் கட்டடம் ஒன்றுக்கு அருகில் விழுந்ததாகவும் ஆரம்ப செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஏழை நாடுகளுக்கு லாபமின்றி மருந்து விற்க 'பைசர்' முடிவு

அமெரிக்க மருந்தாக்க நிறுவனமான பைசர் ஏழை நாடுகளுக்கு இன்னும் அதிகமான மருந்துகளையும் தடுப்பு மருந்துகளையும் லாபமின்றி விற்கப்போவதாகத் தெரிவித்துள்ளது.

குறைந்த வருமானம் ஈட்டும் 45 நாடுகளுக்கு அவ்வாறு செய்யப்போவதாக உலகப் பொருளாதார மாநாட்டில் பைசர் அறிவித்தது. கடந்த மே மாதம் முதல் அது காப்புரிமை கொண்ட 23 மருந்துகளை லாபமின்றி ஏழை நாடுகளுக்கு விற்று வருகிறது.




தற்போது காப்புரிமைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட மற்ற மருந்துகளையும் அவற்றில் சேர்த்துள்ளது அந்நிறுவனம். அதன்படி இப்போது சுமார் 500 மருந்துகள் லாபமின்றி விற்கப்படும் என்று பைசர் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஆரம்பத்தில் 'ஆரோக்கியமான உலகம் ஒன்றுக்கான ஒப்பந்தம்' என்ற திட்டத்தின் கீழ் அந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. உலக அளவில் சுகாதாரப் பராமரிப்பில் நிலவும் ஏற்றத்தாழ்வைக் குறைக்க உதவுவதே இதன் நோக்கமாகும்.

கொவிட் தடுப்பூசி மற்றும் வைரஸ் எதிர்ப்பு மருந்து விற்பனை மூலம் பைசர் நிறுவனத்தின் இலாபம் உயர்ந்ததோடு நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட அந்த நிறுவனம் கடந்த ஆண்டு 100 பில்லியன் டொலர் வருவாய் ஈட்டியதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.